# தமிழ் மொழி

## ஓர் அறிமுகக் கையேடு



ஏ. எப். எம். அஷ்ரஃப்

மொழித்துறை

தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழி

ஓர் அறிமுகக் கையேடு

ஏ. எப். எம். அஷ்ரஃப்

மொழித்துறை
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் மொழி : ஓர் அறிமுகக் கையேடு


| | | |
|---|---|---|
| ஆசிரியர் | : | அ.ப. முஹம்மது அஷ்ரஃப் |
| உரிமை | : | தஸ்மினா அஷ்ரஃப் |
| முதற்பதிப்பு | : | 2017 |
| வெளியீடு | : | நேஹா பப்ளிஷர்ஸ்<br>இல:73/4A, பள்ளிவாயல் தெரு,<br>திருகோணமலை. |
| கணினித் தட்டச்சு | : | அ.ப. முஹம்மது அஷ்ரஃப் |
| அட்டை வடிவமைப்பு | : | |
| தொடர்புகளுக்கு | : | மொழித்துறை,<br>தென்கிழக்குப் பல்கலைக்கழகம்,<br>ஒலுவில் #32360 |
| தொலைபேசி | : | 0773081120, 0672255180 |
| மின்னஞ்சல் | : | afmashraff@seu.ac.lk |
| பக்கங்கள் | : | 157 |
| விலை | : | 400.00 |
| சர்வதேசத் தர இல | : | ISBN978-955-53402-1-2 |


## *An Introductory Hand Book for Tamil Language*


| | | |
|---|---|---|
| *Author* | : | *A.F.Mohamed Ashraff* |
| *Copyrights* | : | *Thasmina Ashraff* |
| *First Edition* | : | *2017* |
| *Publishers* | : | *Neha Publishers,*<br>*No: 73/4 A, Mosque Road, Trincomalee* |
| *Typing* | : | *A.F.Mohamed Ashraff* |
| *Cover Desighn* | : | |
| *Contact* | : | *Department of Languages,*<br>*South Eastern University of Sri Lanka,*<br>*Oluvil #32360* |
| *Phone* | : | *0773081120, 0672255180* |
| *Email* | : | *afmashraff@seu.ac.lk* |
| *Pages* | : | *157* |
| *Price* | : | *400.00* |
| *ISBN* | : | *ISBN978-955-53402-1-2* |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

பல்கலைக்கழகங்களில் இளநிலைப் பட்டப்படிப்புக்காகத் தமிழை ஒரு பாடமாகக் கற்கும் மாணவர்களையும் தமிழ்மொழி ஆர்வலர்களையும் மையமாகக் கொண்டு, இவ்வாறானவொரு அறிமுகக் கையேட்டினை எழுதவேண்டும் என்ற எண்ணம் மிக நீண்டகாலமாகவே என் மனதில் இடம் பிடித்திருந்தது. வேலைப் பளுக்களின் மத்தியில் அந்த எண்ணம் ஈடேறுவது அரிதாகவே இருந்து வந்துள்ளது. எனினும், இக்கையேடு தற்போதாவது வெளிவருவதானது மகிழ்ச்சியைத் தருகிறது.

மொழியார்வம், மொழிப்பற்று, மொழிப்பெருமை முதலியன மிகைத்திருக்கும் ஒரு முரண்பாட்டுச் சூழலில், மொழி ஆர்வலர் களிடையே தமிழ்மொழி குறித்த போதிய அறிமுகமும் அறிவும் இல்லாதவொரு நிலைமை காணப்படுகிறது. அதேபோன்று, வாசிப்புச் சூழலின் மரணப்படுக்கையால், பல்கலைக்கழக இளநிலைப் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு குறைந்த பட்சத் தேவையையாவது நிவர்த்திக்கும் பாடப்பரப்பினை மையமாகக் கொண்ட கையேடுகளையும் எளிதாகப் பெறமுடியாதுள்ளது. இவ்வாறான நிலைமைகளே இக்கையேட்டினை எழுதுவதற்குக் காலாய் அமைந்தன. இக்கையேடு, தமிழ்மொழியின் பழைமை, வளர்ச்சி, நவீனத்துவம், அதன் பல்தேசிய உருவாக்கம், நவீன தமிழ்ச் சமுதாயத்தின் தேவைகளை நிறைவேற்றும் வண்ணம் தமிழ் மொழிபெற்றுள்ள இணக்கப்பாடு, எழுத்துச்சீர்திருத்தம், கலைச்சொல்லாக்கம் முதலானவற்றை அறிமுக அளவில் அடையாளப்படுத்த முனைகிறது. வெறும் மொழிப்பழைமை வாதத்திற்கு அப்பால் அறிவியல்பூர்வமாக நிறுவப்பட்டுக் கொண்டிருக்கும் தமிழ்மொழியின் வளர்ச்சி வரலாறு மிகுந்த கவனத்திற்குரியது. அறிவியல் தொழிநுட்ப யுகத்தில், காலமாற்றத்திற்கு இயைந்து கொண்டு, நெகிழ்ச்சித்தன்மையுடன் திகழும் தமிழ்மொழி பல புதிய துறைவழக்குகளையும் ஈர்த்துக் கொண்டு இயல்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறான வொரு சூழலில் தமிழ்மொழி குறித்த நேர்த்தியான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிமுகமொன்றினை ஆவணப்படுத்த வேண்டியது அவசிய மாகிறது. அம்முயற்சியின் விளைவே, இச்சிறு கையேடு.

தமிழ் மொழி, மொழியியல் துறைகளில் நேர்த்தியாகப் பங்காற்றியுள்ள வல்லுநர்களின் கருத்தியலை உள்வாங்கிக் கொண்டும் அவர்களது கருத்துக்களைத் தாங்கிவந்துள்ள காத்திரமான நூல்கள் பலவற்றை உசாத்துணையாகக் கொண்டும் இக்கையேடு ஆக்கப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. தமிழ்மொழி அறிமுகத்திற்கேற்ற அறிஞர்களின் கூற்றுக்கள் பலவும் இதில் எடுத்தாளப்பட்டுள்ளன. குறிப்பாக, எம்.ஏ. நுஃமானின் அடிப்படைத் தமிழ் இலக்கணம், தெ.பொ. மீனாட்சிசுந்தரனாரின் தமிழ் மொழி வரலாறு, எம்.ஏ. நுஃமான் பதிப்பித்த தொடர்பாடல் மொழி நவீனத்துவம் ஆகிய நூல்களிலிருந்து பல தகவல்கள் தழுவியெழுதப்பட்டுள்ளன. இச்சந்தர்ப்பத்தில் அவ்வறிஞர் களுக்கும் நூலாசிரியர்களுக்கும் எனது நன்றிகளையும் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். மேலதிக உசாவுதலை மேற்கொள்ள விரும்பும் மாணவர்கள் உசாத்துணைப் பட்டியலில் சேர்க்கப் பட்டுள்ள நூல்களைத் தயக்கமின்றி வாசித்துப் பயன்பெறலாம். நூலிற்கான அவசியமும் அவசரமும் கருதி, பல விடயங்கள் விரிவாக்கம் பெறவில்லை. அடுத்த பதிப்பு, மேலும் பல விடயங்களை, போதிய விமர்சனக் கருத்துக்களோடு வெளிக்கொண்டுவரும் என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

உயர்கல்வி நிறுவனங்களில் தமிழை ஒரு பாடமாகக் கற்கும் மாணவர்களும் ஏனைத் தமிழ் ஆர்வலர்களும் இந்நூலால் பயனடைவார்கள் என்ற திடமான நம்பிக்கையோடு வழிவிடுகிறேன். நன்றி!.

**கலாநிதி அ.ப.மு. அஷ்ரஃப்,**
முதுநிலை விரிவுரையாளர்,
மொழித்துறை,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

*01.01.2017*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


1. மொழி ஒரு தொடர்பாடல் ஊடகம்
1.1 தொடர்பாடல் என்றால் என்ன?
1.2 தொடர்பாடல் முறைமையின் தோற்றமும் வளர்ச்சியும்
1.3 மொழியும் தொடர்பாடலும்
1.4 மானிட மொழியின் சிறப்புக் கூறுகள்
1.5 மொழியின் அமைப்பு
1.6 மொழியும் சமூகமும் பண்பாடும்

2. திராவிட மொழிக் குடும்பமும் தமிழும்
2.1 மொழிக் குடும்பம்
2.2 திராவிட மொழிக் குடும்பம்
2.3 திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்
2.4 தமிழ் - தெலுங்கு – மலையாளம் - கன்னடம்
2.5 தமிழ் ஒரு திராவிட மொழி

3. தமிழ்மொழியின் தோற்றம், வளர்ச்சி, சமகாலநிலை
3.1 தமிழ் ஒரு தொல்சீர் மொழி
3.2 தமிழ் ஒரு நவீன மொழி
3.3 தமிழ் ஒரு பல்தேசிய மொழி
3.4 தமிழ் ஒரு பல்லின மொழி
3.5 தமிழ் ஒரு பல்-பண்பாட்டு மொழி

4. தமிழ்மொழியின் வகைகள்
4.1 கிளைமொழி வேறுபாடுகள்
4.2 பேச்சுமொழியும் எழுத்துமொழியும்
4.3 இலங்கை - இந்தியத் தமிழ்
4.4 பிரதேசக் கிளைமொழிகள்
4.5 சமூகக் கிளைமொழிகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. நவீனத் தமிழ்
5.1 நவீனம் - நவீனத்துவம் - நவீனமயமாக்கம்
5.2 தமிழ்மொழி வரலாறு
5.3 மொழிவளர்ச்சியும் அதற்குச் சாதகமாக அமையும் காரணிகளும்
5.4 மொழிமாற்றம்
5.5 மொழித்தூய்மைவாதம்
5.6 கலைச்சொற்கள்
5.7 தமிழில் எழுத்துச்சீர்திருத்தம்

6. நடையியலும் பல் - தள மொழிப்பாவனையும்
6.1 நடையியல்
6.2 திறன்மிகு வாக்கிய ஆக்கம்
6.3 தமிழ் வாக்கிய அமைப்பு
6.4 நிறுத்தற் குறிகள்
6.5 உரையாக்கம்

7. நடைமுறை இலக்கணம்
7.1 தமிழ் எழுத்துக்களின் பரம்பல்
7.2 அடிப்படைப் புணர்ச்சி விதிகள்
7.3 மூவிடப் பெயர்கள்
7.4 தமிழில் வேற்றுமைகள்
7.5 தமிழில் இடைச்சொற்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழி ஒரு தொடர்பாடல் ஊடகம்

## 1.1 தொடர்பாடல் என்றால் என்ன?

*'Communication'* என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நிகராகத் தமிழில் தொடர்பாடல் என்ற சொல் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஒருவர் தமது எண்ணங்கள், உணர்வுகள், தகவல்கள் முதலானவற்றைப் பிறர் எளிதில் அறிந்துகொள்ளச் செய்வது அல்லது தமக்குள் பரிமாறிக் கொள்வது தொடர்பாடல் எனப்படும். இன்னொருவகையில், வெவ்வேறு தகவல் பரிமாற்ற ஊடகங்களின் வாயிலாக பல்வேறு நோக்கங்களின் அடிப்படையில் நடைபெறும் எல்லாவகையான கருத்துப் பரிமாற்றங்களையும் தொடர்பாடல் எனலாம். இத்தொடர் பாடல் பல்நிலைப்பட்டது. சைகைகள், நிறங்கள், குறிகள், பேச்சு, எழுத்து போன்றன தொடர்பாடல் ஊடகங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. விலங்குகள், பறவைகள், ஊர்வன முதலான உயிரினங்கள் தமக்குள் தொடர்பாடுந்திறன் கொண்டிருந்தாலும் அவற்றுள் மனிதனே சிறப்புற்றுக் காணப்படுகின்றான். அவன் பயன்படுத்தும் தொடர்பாடல் ஊடகம் பொதுவாக மொழி என அடையாளப்படுத்தப் படுகிறது. இங்கு மொழி என்பது பேச்சையும் எழுத்தையும் குறித்து நிற்கிறது. காலங்காலமாக நிலவி வந்திருக்கும் தேவைகளுக்கேற்ப இத்தொடர்பாடலும் மாற்றமுற்று வந்திருக்கிறது. இத்தொடர்பாடல் தளத்தில் பயன்படும் மொழிகளுள் ஒன்றாகத் தமிழ்மொழியும் விளங்குகிறது.

## 1.2 தொடர்பாடல் முறைமையின் தோற்றமும் வளர்ச்சியும்

ஆதிகாலத்தில் சைகைகள், சமிக்ஞைகள், ஒலிகள் மூலமாக மனிதர்கள் தமக்கிடையே நேரடித் தொடர்பாடல்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொண்டனர். பேச்சுமொழி வளர வளர செவிவழித் தொடர்பாடலுக்கான வாய்ப்பு அதிகரித்தது. எழுத்துமொழி வழக்குப் பெற்றவுடன் ஓவியங்களின் மூலம் தொடர்பாடும் அல்லது தகவல்களைப் பரிமாறும் வழக்கம் ஆரம்பித்தது. தூரப் பிரதேசங்கள் சார்ந்த தொடர்பாலுக்கு புறா, பருந்து போன்ற பறவைகளும் பயன்படுத்தப்பட்டன. பிற்காலத்தில் எழுத்து வழக்கின் வளர்ச்சி கல்வெட்டுக்கள், செப்பேடுகளினூடாகத் தகவல்களைப் பரிமாறவும் ஆவணப்படுத்தவும் வழிவகுத்தது. போர்ச்செய்திகளைப் பரிமாறும் வழக்கும் இக்காலத்திலேயே ஆரம்பிக்கிறது. மட்டுமல்லாமல் சமயக் கொள்கைகளையும் அரச கட்டளைகளையும் பரப்புவதற்கும் ஏட்டுச்சுவடிகளினூடான தொடர்பாடல் முறைமை வழக்குப் பெறுகிறது.

கி.பி.எட்டாம், ஒன்பதாம் நூற்றாண்டுகளில் மரத்தால் செய்யப்பட்ட அச்சுக்கருவிகள், காகிதங்களின் வருகையோடு தொடர்பாடல் முறைமை இன்னொரு கட்டத்தை அடைகிறது. காகிதத்தில் மைகொண்டு எழுதி தகவல்களைப் பரிமாறும் வழக்கம் அச்சியந்திரத்தின் வருகையோடு முனைப்புப் பெறுகிறது. துண்டுப்பிரசுரங்கள், இதழ்கள், ஏனைய வெளியீடுகள் மூலம் தகவல்களைப் பரிமாறும் வழக்கம் வளர்ச்சியடைகிறது.

கைத்தொழிற் புரட்சியும் ஐரோப்பியரின் எழுச்சியும் முறைமைப்பட்ட தொடர்பாடல் வழக்கொன்றைத் தோற்றுவித்தது. தொலைபேசியின் கண்டுபிடிப்பு, அதன் விளைவாகத் தோன்றிய தொலைநகல் முதலானவை தொடர்பாடற் தேவைகளுக்காக உலகெங்கும் பரவின. கி.பி. பதினெட்டாம், பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் தொடர்பாடற் துறையில் தொலைபேசியின் செல்வாக்கு மிகைத்திருந்தது. கண்டங்கள் தழுவிய நாடுகள் தமக்கிடையே தகவல்களை விரைவாகப் பரிமாறவும் தொழிநுட்பத் துறையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சி காணவும் தொடர்பாடற் துறையின் வளர்ச்சி இன்றியமையாதது எனக் கருதினர். அதன்விளைவு மனித நடத்தையில் முழு ஆதிக்கம் செலுத்தும் ஒரு துறையாகத் தொடர்பாடற்துறையை வளர்ச்சியடையச் செய்துள்ளது. இன்று தொடர்பாடற்துறையில் ஆதிக்கம் செலுத்துவனவாக கணினி, ஆற்றல் அலைபேசி *(Smart Phone)* முதலானவை விளங்குகின்றன.

## 1.3 மொழியும் தொடர்பாடலும்

விலங்கு நிலையிலிருந்து மனிதனை வேறுபடுத்தும் முக்கியமான கருவி மொழியாகும். அது சிந்தனையின் கருவியாகவும் செயற்படுகின்றது. மொழியின் வாயிலாகவே சமூகத்தில் மனிதன் தனது இருப்பை உறுதி செய்து கொள்கிறான். மொழியின் வாயிலாகவே மனிதன் உலகைக் கிரகித்து பொருளுடையதாக்கிக் கொள்கின்றான்; புரிந்து கொள்கின்றான். மொழியின் வாயிலாகவே உலக அரங்கில் மனிதன் தனது இருத்தலை உணர்கின்றான்.

மொழி மனிதனின் படைப்புக்களுள் உன்னதமானது. விலங்கு நிலையிலிருந்து தன்னை வேறுபடுத்தும் வளர்ச்சிப் போக்கில் மனிதன் மொழியைப் படைத்துக் கொண்டான். அது மனிதப் பண்பாட்டின் ஒரு கூறாகவும் பண்பாட்டை வெளிப்படுத்தும் ஒரு கருவியாகவும் அமைந்துள்ளது. அவ்வகையில் மொழியை, அதன் இயல்பைப் புரிந்து கொள்வதென்பது மனிதன் தன்னைப் புரிந்து கொள்வதாகவே கருதப்படுகின்றது.

மொழியின் பிரதான பணி மனிதர் தம்முள் தொடர்பாடுவதற்குரிய பிரதான ஊடகமாகப் பயன்படுவதாகும். இவ்வகையில் மொழியை ஒரு தொடர்பாடல் ஊடகம் *(Language is a Medium of Communication)* என்று வரையறுக்கலாம். எனினும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழி சாராத் தொடர்பாடல் ஊடகங்கள் பலவும் வழக்கிலுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆனால் அவற்றிலிருந்து மொழி வேறுபட்டமைந்து காணப்படுகிறது.

உலகில் பல்வேறு மனித சமூகத்தினரும் பல்வேறுபட்ட மொழிசாராத் தொடர்பாடல் ஊடகங்களைப் பயன்படுத்து கின்றனர். பல்வேறு வகையான சைகைகளைப் (உடல் அசைவுகள்) பயன்படுத்தி வெவ்வேறு தகவல்கள் பறிமாறிக் கொள்ளப்படுகின்றன. இது உடல் மொழி *(Body Language)* என அழைக்கப்படுகின்றது. ஆபிரிக்க, அவுஸ்திரேலிய பழங்குடிமக்கள் மிக வளர்ச்சியடைந்த சைகை மொழிகளைப் பயன்படுத்துகின்றனர்.

சைகைகளைத் தவிர பல்வேறு வகையான குறிகளும் *(Signals)* தொடர்பாடலுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. ஆரம்பத்தில் பழங்குடி மக்கள் அதிகமாகப் பயன்படுத்தினாலும் நவீன சமூக அமைப்பிலும் இவை முக்கியத்துவம்பெற்று விளங்குகின்றன. வீதிப் போக்குவரத்தில் பயன்படும் குறிகள் *(Traffic Signals)* இத்தகையன. அதேபோன்று நிறங்கள் (கட்சிகளின் நிறங்கள்), கொடிகள் போன்றனவும் தொடர்பாடலுக்குப் பயன்படுகின்றன. இத்தகைய ஊடகங்கள் மூலமாக வரையறுக்கப்பட்ட தகவல்களையே தொடர்பாட முடியும் என்பது கவனத்திற் கொள்ளத்தக்கது. ஆனால், மனித மொழி எண்ணிக்கையற்ற தகவல்களை வெளிப்படுத்தும் ஆற்றல் உடையது.

## 1.4 மானிட மொழியின் சிறப்புக் கூறுகள்

மனிதரைப் போலவே விலங்குகளும் சைகைகளையும் ஓசைகளையும் பயன்படுத்தித் தொடர்பாடல் செய்கின்றன. அவற்றுள் தேனீக்கள் குறித்த ஆய்வுகள் கவனத்திற்குரியவை. தேனீக்களின் நடன மொழியைப் *(Dance Language)* பல்வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிஞர்களும் நன்கு ஆராய்ந்துள்ளனர். அவற்றுள் கார்ள் வொன் ப்ஃரிஷ் *(Karl Von Frish)* என்பவரின் ஆய்வு முக்கியமானது. தேனீக்களின் மொழி குறித்த அவரது ஆய்வு *'The Dance Language and Orientation of Bees' (1967)* எனும் நூலாக வெளிவந்துள்ளது. தேன் இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்து கூட்டுக்குத் திரும்பும் தேனீ, தன் சகாக்களுக்குத் தேன் இருக்கும் தூரம், செல்ல வேண்டிய திசை, தேனின் அளவு/தன்மை ஆகியவற்றை நடனத்தின் மூலம் தெரியப்படுத்துவதாகக் குறிப்பிடுகிறார். 'தேன் இருக்கும் தூரம் நூறு மீற்றருக்குக் கூடியதென்றால் ஒரு வகையான நடனத்தையும் குறைந்ததென்றால் வேறு வகையான நடனத்தையும் ஆடுகின்றது' எனவும் ப்ஃரிஷ் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

பறவைகள் ஒலிகளை எழுப்புவதன் வாயிலாகவும் அங்க அசைவுகள் வாயிலாகவும் தொடர்பாடுகின்றன. பறத்தல், ஆபத்து, மகிழ்ச்சி, இணைசேர்தல், துன்பம், உணவூட்டல், கூடுகட்டல், ஒன்றுகூடல், எல்லைப் பாதுகாவல், தாக்குதல் போன்றவை தொடர்பில் பல்வேறு ஒலிகளை எழுப்பி அவை தொடர்பாடுகின்றன. மனிதரைப்போல் பல மொழிகளைப் பேசும் காகங்கள் இருப்பதாகவும் ஆய்வுகள் கூறுகின்றன.

ஏனைய விலங்குகளும் ஒலிகள், அங்க அசைவுகள் ஆகியனவற்றைப் பயன்படுத்தித் தொடர்பாடுகின்றன. குரங்குகள் நன்கு வளர்ச்சியடைந்த தொடர்பாடல் முறையைப் பயன்படுத்துவதாக ஆய்வுகள் கூறுகின்றன. அவை அண்மையில் உள்ள குரங்குகளுடன் தொடர்பாடுவதற்கு அசைவுகளையும் தொலைவில் உள்ளவற்றுடன் தொடர்பாடு வதற்குக் குரல் ஒலிகளையும் பயன்படுத்துகின்றன. ஆபிரிக்கக் குரங்கினம் ஒன்று இருபத்தொரு வெவ்வேறு சூழல்களில் முப்பத்தாறு வேறுபட்ட ஒலிகளைப் பயன்படுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபத்திரண்டு வேறுபட்ட தகவல்களைப் பரிமாறிக் கொள்வதாக ஓர் ஆய்வில் இருந்து தெரியவருகிறது.

பிற தொடர்பாடல் ஊடகங்கள் போன்றே மனித மொழியும் ஒரு தொடர்பாடல் ஊடகமாகும். விலங்குகளைப் போன்று மனிதர்களும் குரல் ஒலிகளைப் பயன்படுத்தித் தொடர்பாடுகின்றனர். ஆனால், மனித மொழி பிற எல்லாவற்றில் இருந்தும் அதன் அமைப்பு ஆற்றல் ஆகியவற்றில் வேறுபடுகின்றது. பிற தொடர்பாடல் ஊடகங்களில் இருந்து மனித மொழியை வேறுபடுத்தும் சிறப்புக் கூறுகள் என பின்வருவனவற்றைக் கூறலாம்.

## இடுகுறித் தன்மை *(Arbitrary Nature)*

விலங்கு மொழியில் அவற்றின் குறியீட்டுக்கும் அது குறிக்கும் பொருள் அல்லது தகவலுக்கும் இடையில் மிக நெருங்கிய தொடர்பு உண்டு. அபாயத்தை அறிவிக்க கோழிகள் எழுப்பும் குரல் இவ்வகையில் அடங்கும். இங்கு அக்குரலுக்கும் தொடர்பாட விரும்பும் தகவலுக்கும் இடையே நேர்த் தொடர்பு உண்டு.

ஆனால் மனித மொழியில் குறியீட்டுக்கும் அது குறிக்கும் பொருளுக்கும் இடையே நேர்த் தொடர்பு இல்லை. எடுத்துக்காட்டாக கண் என்ற சொல்லுக்கும் அது குறித்து நிற்கும் பொருளுக்கும் உள்ளார்ந்த உறவு எதுவும் இல்லை. அதே பொருளைக் குறிக்க வெவ்வேறு மொழிகள் வெவ்வேறு சொற்களைப் பயன்படுத்துகின்றன. இதனால் 'காரணமற்ற குரல் ஒலிக் குறியீடுகளால் ஆன தொடர்பாடல் ஊடகம்' என மனித மொழியை வரையறுக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆக்குதிறன் (Productivity)

விலங்கு மொழி உட்பட பிற தொடர்பாடல் ஊடகங்களால் மிகவும் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான தகவல்களையே தொடர்பாட முடியும். ஆனால் மனிதமொழி அவ்வாறன்று. தொடர்பாடற் தேவைகளுக்கேற்ப வளர்ச்சி யடைந்து செல்லும் அல்லது பெருகிச்செல்லும் ஆக்குதிறன் வாய்ந்தது. அவ்வகையில் மனித மொழியின் அடிப்படைப் பண்புகளுள் அதன் ஆக்குதிறனும் ஒன்றாகிறது. வாழுங் காலத்தில் தனது மொழியில் எண்ணிறந்த வாக்கியங்களையும் தொடர்களையும் உண்டாக்கும் ஆற்றல் உடையவனாக மனிதன் விளங்குகின்றான். கோட்பாட்டளவில் ஒரு மொழியில் உண்டாக்கக் கூடிய வாக்கியங்களின் எண்ணிக்கை வரையறைக்கப்பாற்பட்டது.

## கால - இட வரம்பின்மை (Displacement)

விலங்கு மொழி சந்தர்ப்ப சூழலுக்குக் கட்டுப்பட்டது. நிகழ்காலத் தன்மை கொண்டது. காகம் உணவைப் பெறுவதற்கான சூழல் அமையும்போது மட்டுமே அழைப்புக் குரல் எழுப்பும். எந்த விலங்கும் கால - இடத் தொடர்பற்ற ஒன்றைப் பற்றித் தகவல் தர முடியாது. நேற்று நடந்ததை அல்லது நாளை நடக்க இருப்பதைப் பற்றி எந்த விலங்கும் தொடர்பாட முடியாது. அதேபோன்று தேனீக்கள் தொலைவில் உள்ள தேனை அறிந்து வந்து அது பற்றித் தகவல் கொடுக்கும் ஆற்றல் உடையவை. எனினும், எந்தத் தேனீயாலும் தேன் தவிர்ந்த பிற தகவல்களைத் தரமுடியாது. நேற்று எடுத்த தேன் பற்றிக் கூறமுடியாது. ஆனால், மனித மொழியில் இருப்பதையும் இல்லாததையும் அல்லது நடந்ததையும் நடக்கவிருப்பதையும் தொடர்பாட முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகையால் மனித மொழி கால - இட வரம்பற்றது எனக் குறிப்பிடலாம்.

## இருமைத்தன்மை *(Duality)*

வெவ்வேறு விலங்குகளும் வெவ்வேறு எண்ணிக்கையிலான அடிப்படை ஒலிகளைப் பயன்படுத்துகின்றன. அண்ணளவாக, பசு பத்து ஒலிகள் வரை, கோழி இருபது ஒலிகள் வரை, நரி முப்பது ஒலிகளுக்கு மேல், டொல்பின் இருபது முதல் முப்பது ஒலிகள் வரை, ஆபிரிக்கக் குரங்கு முப்பத்தாறு வரை பயன்படுத்துகின்றன. விலங்குகள் பயன்படுத்தும் ஒலிகளும் அவை வெளிப்படுத்தும் தகவல்களும் பெரும்பாலும் சமமானவை. அவை ஒலிகளை வெவ்வேறு வகையில் ஒழுங்கமைத்துச் சொற்களை ஆக்குவதில்லை. சொற்களை வெவ்வேறு வகையில் ஒழுங்கமைத்து வாக்கியங்களையும் ஆக்குவதில்லை.

மனித மொழியிலும் விலங்குகள் பயன்படுத்தும் எண்ணிக்கைக்குச் சமமான அடிப்படை ஒலிகளே வழங்குகின்றன. சராசரி எண்ணிக்கை முப்பது முதல் நாற்பது ஒலிகள் வரை வழங்குகின்றன. இந்த ஒலிகள் தம்மளவில் பொருளற்றவை. எடுத்துக்காட்டாக க், ர், த், ந், அ, இ, உ போன்ற ஒலிகளைப் பயன்படுத்தி பொருளுடைய சொற்கள் ஆக்கிக் கொள்ளப்படுகின்றன. காடு, சண்டை, தகவல், நதி, அழகு, இனிப்பு, உறவு எனச் சிறியளவிலான ஒலியன்களைக் கொண்டு எண்ணிறந்த சொற்களும் தொடர்களும் வாக்கியங்களும் ஆக்கிக் கொள்ளப்படுகின்றன. இவ்வாறு சொற்களை உருவாக்கும் ஆற்றல் மொழியின் இருமைத்தன்மை எனப்படுகின்றது. விலங்கு மொழிக்கு இத்தகைய ஆற்றல் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாட்டு ரீதியாகப் பரிமாற்றம் **(Cultural Exchange)**

விலங்கு மொழி இயல்பூக்கம் சார்ந்தது. விலங்குகள், பறவைகள் முதலியன மொழியைக் கற்றுக் கொள்வதில்லை. உலகில் எந்த மூலையில் உள்ள குயில்களாயினும் ஒரே விதமாகவே கூவுகின்றன. பூனைகள், கிளிகளும் ஒரேவிதமாகவே ஒலியெழுப்புகின்றன. தேனீக்களின் நடனம் உலகெங்கும் பெரும்பாலும் ஒரே விதமாகவே காணப்படுகின்றது. கிளைமொழிகளைப் போன்று கால, தேசச் சூழலுக்கேற்ப இவற்றிடையே காணப்படும் வேறுபாடுகள் மிகச் சிலவே. மனித மொழி அது வழங்கும் பண்பாட்டுச் சூழலில் இருந்து படிப்படியாகக் கற்றுக் கொள்ளப்படுகின்றது. ஒரு சமூகத்தில் இருந்து தனிமைப்படுத்தப்பட்ட குழந்தையால் மொழியைக் கற்றுக் கொள்ள முடிவதில்லை. ஆகவே, மனித மொழியின் சிறப்புக் கூறுகளுள் பண்பாட்டு ரீதியான பரிமாற்றமும் குறிப்பிடத்தக்கவொன்று.

## 1.5 மொழியின் அமைப்பு

மொழி ஒலிகளை அடிப்படையாகக் கொண்டது. மொழியியலாளர்கள் மொழியின் அமைப்பை ஐந்து நிலைகளாகப் பகுத்து நோக்குகின்றனர். அவையாவன:

*I.* ஒலி நிலை *(Phone level)*
*II.* ஒலியன் நிலை *(Phoneme level)*
*III.* உருபன் நிலை *(Morpheme level)*
*IV.* தொடரன் நிலை *(Syntactical level)*
*V.* பொருளன் நிலை *(Semantic level)*

பேர்டினண்ட் டி. சசூர் *(Ferdinand De Saussure)* எனும் மொழியியல் அறிஞர், மொழி ஆய்வில் மொழியின் அமைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Structure of Language) முதன்மைப்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்தை முன்வைத்துள்ளார். மொழி எவ்வாறு மாற்றமடைந்து வந்துள்ளது என அறிந்துகொள்ள மொழியின் அமைப்பு முதலில் புரிந்துகொள்ளப்பட வேண்டும் என்ற சிந்தனையை அவர் தூண்டினார். ஒரு மொழியின் அமைப்பை விவரிக்கப் பயன்படும் ஒரு கோட்பாட்டுக் கருவியாக அமைப்பு மொழியியல் விளங்குகிறது. அமைப்பு மொழியியல் கோட்பாடு, எல்லா மொழிகளும் அமைப்பு அடிப்படையில் சமமானவை, ஒவ்வொரு மொழியும் அதற்கென்று ஓர் அமைப்பை உடையது முதலான மொழியின் இயல்பு குறித்த சில முக்கிய கருத்துக்களை முன்வைத்துள்ளது.

## 1.5 மொழியும் சமூகமும் பண்பாடும்

மொழியும் சமூகமும் பண்பாடும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. மொழி, சமூக அமைப்போடும் அதன் வாழ்வோடும் வளர்ச்சி நிலையோடும் பிணைந்து காணப்படுகின்றது. மொழியானது முற்றுமுழுதாக ஒரு சமூக - பண்பாட்டு அங்கம் என்பதே அதற்கான காரணமாகும். அதனாலேயே ஆங்கிலத்தில் மொழியை *'Language is basically a socio-cultural phenomenon'* என்கின்றனர். இந்த அடிப்படையில் நோக்கும்போது மொழி ஓர் சமூகப்பொருள் என்பது புலனாகும். ஒருவர் மற்றொருவருடனான உறவை, ஒரு சமூகம் மற்றுமொரு சமூகத்தினுடனான உறவைப் பேணி, பாதுகாத்து, மேம்படுத்தப் பயன்படுவது மொழியே. இதனுள் எல்லா சமூகப் பணிகளும் அடங்கும்.

இம்மொழி சமூகத்தில் பல்வேறு பிரிவினராலும் பயன்படுத்தப்படுகிறது. மொழி பெரியோர் - சிறியோர், ஆண் - பெண், முதலாளி – தொழிலாளி, படித்தவர் - படிக்காதவர் எனப் பல்வேறு பிரிவினராலும் பல்வேறு தேவைகளுக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு இடங்களிலும் சூழல்களிலும் பயன்படுத்தப் படுகின்றது. மொழி ஒருவரது சமூகக் குறியீடாக விளங்குகிறது. மொழியை இனங்காணும் நிலையில் அம்மொழியைப் பயன்படுத்தும் ஒருவரது சமுதாயம், அவர் சார்ந்துள்ள நாடு முதலானவை இனங்காணப்படுகிறது. தமிழைப் பேசுவதனால் அதனைப் பேசும் சமூகம் தமிழ்ச் சமூகம் என்றும் அதன் வாயிலாக வெளிவரும் பண்பாடு தமிழ்ப்பண்பாடு என்றும் அடையாளப்படுத்தப்படுகிறது. அதேபோன்று அரபு மொழியைப் பேசுவதனால் அதனைப் பேசுவோர் அரபிகள் என்றும் அவர்களது பண்பாடு அரேபியப் பண்பாடு என்றும் அடையாளப்படுத்தப்படுகிறது. ஆகவே, மொழிக்கும் சமூகத்திற்கும் பண்பாட்டிற்கும் இடையில் நெருங்கிய தொடர்பிருப்பது புலனாகிறது.

மொழிகள் ஒவ்வொன்றும் அதனைப் பயன்படுத்தும் இனங்களின் தேவைகளுக்கேற்றவாறு அமைந்து காணப்படுகிறது. அதாவது ஒரு மொழியைப் பேசும் சமூகத்தின் பிரதான தொழில், வாழ்க்கைச் சூழல் முதலானவற்றை அடியாகக் கொண்ட, பண்பாட்டினை மையமாகக் கொண்டே மொழியும் அமைகிறது. எனவே, மொழிகளில் சொற்கள், தொடர்கள் போன்றவையெல்லாம் ஒருவகையில் அம்மொழிகளைப் பயன்படுத்தும் சமூகங்களின் அமைப்பு, தேவை, தொழில், வாழ்க்கைமுறை, சூழல் போன்ற பல்வேறு காரணிகளின் அடிப்படை யிலேயே அமைகின்றன. இதனாலேயே ஒரு மொழியினால் அது வளர்ந்துள்ள சமூகத்தின் எல்லாவிதமான தேவைகளையும் நிறைவு செய்யமுடிகிறது. ஒவ்வொரு மொழியும் அந்தந்தப் பண்பாட்டிற்குப் பொருத்தமானது. இதனடிப்படையில் நோக்கும்போது மொழிகளிடையே ஏற்றத்தாழ்வுகள் இல்லையென்பது புலனாகும். மொழிகளுக்கிடையிலான ஏற்றத் தாழ்வென்பது அவை குறித்து நிற்கும் பண்பாட்டின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றத்தாழ்வுகளை அடிப்படையாகக் கொண்டதாகும். மொழிகளுக்கிடையே அழகினைக் காண்பதும் வளத்தினைக் காண்பதும் அவை குறித்து நிற்கும் பொருளின் அடிப்படையிலாகும். எனவே, மொழியின் வெற்றி – தோல்வி, ஆற்றல் முதலானவை அம்மொழியைப் பேசும் சமூகத்தின் வெற்றி – தோல்வி, ஆற்றல் முதலானவற்றிலேயே தங்கியிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திராவிட மொழிக் குடும்பமும் தமிழும்

## ௨.1 மொழிக் குடும்பம்

'மொழிக் குடும்பம்' எனும் தொடர் '*Language Family*' எனும் ஆங்கிலத் தொடருக்கு நிகராகத் தமிழில் வழங்கி வருகிறது. வரலாற்று அடிப்படையிலும் அமைப்பு அடிப்படையிலும் உறவுநிலைப்பட்ட மொழிகளின் தொகுதியே மொழிக் குடும்பம் என அழைக்கப்படுகிறது. அதாவது, ஒரு தொல்மொழி(*Proto-Language*)யைத் தாய்மொழியாகக் கொண்டு கிளைத்தெழுந்த மொழிகளின் தொகுதி மொழிக் குடும்பம் எனப் பொதுவாகக் கணிக்கப்படுகிறது. எடுத்துக் காட்டாக, இந்தோ-ஐரோப்பிய மொழிக்குடும்பம், இந்தோ-ஆரிய மொழிக்குடும்பம், திபேத்திய-பர்மிய மொழிக்குடும்பம், திராவிட மொழிக்குடும்பம் முதலானவற்றைக் குறிப்பிடலாம்.

முதன் முதலில் வில்லியம் ஜோன்ஸ் (*William Jones*) என்பவரே 1786ல் தமது கட்டுரையொன்றின் மூலம் மொழி உறவுகள் (*Language Relationship*) குறித்துப் பிரஸ்தாபித்தார். அதனைத் தொடர்ந்து பத்தொன்பதாம் நூற்றாண்டில் அதிகமான மொழி ஆய்வுகள் இடம்பெறத் தொடங்கின. இவ்வாய்வுகளில் பிரதானமாக இந்தோ-ஐரோப்பிய மொழிக்குடும்பம் குறித்துப் பேசப்பட்டது. பின்னர், ஆய்வாளர்கள் அதனை வரலாற்றுப் புனரமைப்பு (*Historical Re-construct*)ச் செய்து இந்தோ-ஐரோப்பிய மொழிக்குடும்பத்தை நிறுவமுற்பட்டனர். அதன் அடிப்படைகளைக் கருத்திற் கொண்டு தென்னிந்திய மொழிகளும் ஆய்வு செய்யப்பட்டன. அவற்றினூடாக 'திராவிட மொழிக்குடும்பம்' குறித்த கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. இது தொடர்பில் 1856ல் 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' (*A Comparative Grammar of*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Dravidian Languages)* எனும் நூல் கால்டுவெல் *(Caldwell)* என்ற அறிஞரால் எழுதி வெளியிடப்பட்டது. பின்னர் பல அறிஞர்களின் முயற்சியாலும் திராவிட மொழிக்குடும்பம் நிறுவப்பட்டது.

## ௨.௨ திராவிட மொழிக் குடும்பம்

உலகில் நிறுவப்பட்டுள்ள பிரதான மொழிக்குடும்பங்களுள் திராவிட மொழிக்குடும்பமும் ஒன்று. இந்தியாவில் வழங்கும் மொழிகளுள் இந்தோ-ஆரிய மொழிகளுக்கு அடுத்தபடியாக திராவிட மொழிகளே அதிகமாகப் பேசப்படுகின்றன. இந்தியாவில் மட்டுமன்றி உலகளாவிய ரீதியிலும் குறிப்பாக இந்தியத் துணைக்கண்டத்திலும் திராவிட மொழிகள் வழங்கி வருகின்றன. திராவிட மொழிக்குடும்பம் தொல் திராவிட மொழி *(Proto-Dravidian Language)* யைத் தாய்மொழியாகக் கொண்டு நிறுவப்பட்டுள்ளது. இம்மொழிக் குடும்பத்தில் இருபத்து மூன்றுக்கும் அதிகமான மொழிகள் இடம்பெறுவதாக மொழியியல் அறிஞர்கள் கருதுகின்றனர். அவற்றுள் இருபத்து மூன்று மொழிகள் இனங்காணப் பட்டுள்ளன. அம்மொழிகள்

தென் திராவிட மொழிகள்
மத்திய திராவிட மொழிகள்
வட திராவிட மொழிகள்

என வகைப்படுத்தி நோக்கப்பட்டுள்ளன. அவற்றை மேல்வரும் அட்டவணையின் மூலம் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

| தென்திராவிடம் | மத்திய திராவிடம் | வடதிராவிடம் |
|---|---|---|
| தமிழ் | தெலுங்கு | ப்ராகூய் |
| மலையாளம் | கோண்டி | மால்தோ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| கன்னடம் | கொண்டா | குருக் |
| தொடா | பெங்கோ | |
| கோத்தா | மண்டா | |
| துளு | கூயி | |
| குடகு | கூவி | |
| கொரகா | கோலாமி | |
| | கட்பா | |
| | நய்க்கி | |
| | பர்ஜி | |
| | கோயா | |

## ௨.3 திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்

1856ல் 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' *(A Comparative Grammar of Dravidian Languages)* எனும் நூல் கால்டுவெல் *(Caldwell)* என்ற அறிஞரால் எழுதி வெளியிடப்பட்டது. இந்நூலின் மூலம் திராவிட மொழிகள் குறித்த தமது ஆய்வை வெளிக்கொண்டு வந்த கால்டுவெல் திராவிடமொழிக் குடும்பத்தையும் நிறுவினார். *'Dravidian'* எனும் ஆங்கிலச் சொல்லின் அடையாகத் தமிழில் 'திராவிட' எனும் அடையை முதன் முதலில் பயன்படுத்திய பெருமை கால்டுவெலையே சாரும். இவர் திராவிட மொழியியலின் தந்தையாகவும் போற்றப்படுகிறார்.

கால்டுவெல் 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்ற தமது நூலில் திராவிட மொழிகள் சமஸ்கிருத மொழியிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிந்தவை அல்ல என்றும் அவை தனியொரு குடும்பத்தைச் சார்ந்தவை என்றும் விளக்கமாகப் பேசுகிறார். இருபதுக்கும் அதிகமான திராவிட மொழிச் சொற்கள் சமஸ்கிருதத்தில் வழங்குகின்றன என்றும் பல இடப்பெயர்கள் இன்றும் அம்மொழியில் இடம்பெற்றுள்ளன என்றும் கூறுகிறார். ஏதாவதொரு திராவிட மொழிச் சொல் சமஸ்கிருத எழுத்தில் அமைந்திருந்தால் உடனே அதனை அம்மொழிச் சொல் எனக் கூறும் வழக்கம் அறிஞர்களிடையே நிலவுகிறது என்பதையும் சுட்டிக்காட்டினார். திராவிட மொழிகள் இந்தோ-ஆரிய மொழிக்குடும்பத்தைச் சார்ந்தன என அறிஞர் பலர் தமது வாதங்களை முன்வைத்தபோதும் கால்டுவெல் போன்ற பலர் அதனை மறுத்தனர். கால்டுவெல் தம்முடைய நூலில் ஆரிய மொழிகளும் திராவிட மொழிகளும் வெவ்வேறு இனத்தைச் சார்நதன எனக் குறிப்பிடுகின்றார்.

'சமஸ்கிருதம் கற்ற பல அறிஞர்கள் திராவிட மொழிகள் சமஸ்கிருதத்தில் இருந்து உருவானவை என எண்ணியிருந்தனர். இத்தகைய எண்ணத்திற்கு காரணம் திராவிட மொழிகளில் காணப்படும் சமஸ்கிருதச் சொற்களும் சில இலக்கணக் கூறுகளுமேயாகும். இவ்வறிஞர்கள் திராவிட மொழி குறித்து அறியாத காரணத்தினால் இத்தகைய தவறான கருத்தைக் கொண்டிருந்தனர்' எனக் கால்டுவெல் குறிப்பிடுகின்றார்.

'திராவிட மொழிகள் பல சமஸ்கிருதச் சொற்களைக் கொண்டிருப்பது உண்மையே எனினும் மொழியமைப்பிலும் அடிப்படைச் சொல்லாக்கத்திலும் இலக்கண முறைமையிலும் சமஸ்கிருத மொழியிலிருந்து பெரிதும் வேறுபட்டிருப்பதைக் காணலாம். சில திராவிட மொழிகள் சமஸ்கிருதச் செல்வாக்கினைப் புறந்தள்ளிவிட்டு தனித்து இயங்க முடியாதனவாக இருக்கலாம். எனினும் இவை திராவிட மொழிகளே. பல இன மொழிகள கலந்து உறவாடுகின்றபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு இனத்திலிருந்து இன்னொரு இனம் பலவற்றைக் கடனாகப் பெறலாம். ஆனாலும் அவை வெவ்வேறு இனங்களாகவே எண்ணப்படும்.' எனவும் கால்டுவெல் குறிப்பிடுகின்றார்.

'ஆங்கில மொழியில் காணப்படும் லத்தீன் மொழிச் சொற்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் அதிகமான சமஸ்கிருதச் சொற்கள் திராவிட மொழிகளில் காணப்படுவதில்லை. எவ்வாறு ஆங்கிலத்திற்கும் லத்தீனுக்குமிடையில் இனவொற்றுமை கற்பிப்பதில்லையோ அதே போன்றே சமஸ்கிருத மொழிக்கும் திராவிட மொழிகளுக்குமிடையே இனவொற்றுமை கற்பிப்பது தவறு' எனத் தமது 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' எனும் நூலில் குறிப்பிடுகிறார், கால்டுவெல்.

## உ.4 தமிழ் – தெலுங்கு – மலையாளம் – கன்னடம்

திராவிட மொழிகள் இருபத்து மூன்றுக்கும் அதிகமானவை என மொழியியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். திராவிட மொழி இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், இலக்கணங்கள் முதலானவற்றை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது திராவிட மொழிகளுள் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளே சிறந்து விளங்குகின்றன

### தமிழ்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய இலக்கண, இலக்கிய வளத்தைக் கொண்ட மொழி தமிழ். இம்மொழி தென்னாசிய நாடுகளான இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளிலும் தென்கிழக்காசிய நாடுகளான பர்மா, மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா, பிஜி ஆகிய நாடுகளிலும் ஆபிரிக்க,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆஸ்ட்ரேலிய, ஐரோப்பிய, வட அமெரிக்க, தென் அமெரிக்க நாடுகளிலும் பேசப்படுகின்றவொரு மொழியாக விளங்குகிறது. திராவிட மொழிகளுள் பழைமையான இலக்கியங்களையும் இலக்கணங்களையும் கொண்ட மொழியாக தமிழ் விளங்குகிறது. தெலுங்கு, மலையாளம், கன்னடம் முதலான மொழிகளின் இலக்கியங்களுக்கு காலத்தால் முந்தியது. கி.மு 3ம் நூற்றாண்டு முதல் தமிழ் தனக்கெனத் தனியானதொரு இலக்கியப் பாரம்பரியத்தை உருவாக்கியிருக்கிறது. கிறீக், லத்தீன், சைனீஸ் போன்ற மொழிகளுடன் ஒப்பிட்டு நோக்கத்தக்கது.

கி.பி முதல் நூற்றாண்டுகளில் தனிப்பாடல் மரபோடு தமிழ் இலக்கியம் தோற்றம் பெறுகிறது. சங்கச் சான்றோரின் எண்ணத்திலும் கைவண்ணத்திலும் இயற்கை அழகு பெற்றது. காதலும் வீரமும் அக்கால இலக்கியங்களின் கருப்பொருளாயின. அதற்காதாரமாக பதினெண் மேற்கணக்கு நூல்கள் விளங்குகின்றன. அறநெறிக்காலமான சங்கமருவிய காலத்தில் தமிழ் இலக்கியம் தனிப்பாடல் மரபிலிருந்து தொடர்நிலைச் செய்யுள் நிலையைக் காண்கிறது. இளங்கோவடிகளின் எண்ணத்திலும் கைவண்ணத்திலும் காப்பியம் பிறக்கிறது. தமிழில் முன்னுதாரணமில்லா வகையில் சிலப்பதிகாரம் - மணிமேகலை என்னும் இரட்டைக் காப்பியங்களும் திருக்குறள், நாலடியார் முதலிய அற இலக்கியங்களும் தோற்றம் பெற்றன. அடுத்து அப்பர், சுந்தரர் காலத்தில் சாதிச் சண்டையோடும் சமயப்பொறையோடும் பக்தி பாடற்பொருளாகியது. தேவாரமும் திருவாசகமும் தோற்றம்பெற்றன. ஆழ்வார்களும் நாயன்மார்களும் பக்தி இயக்கச் செயற்பாட்டாளர் ஆயினர். இயலும் இசையும் ஒன்றிய நிலையில் பாமர மக்களிடையேயும் இக்காலத்தில் தமிழ் வளர்ந்தது. கி.பி. ஆறாம் நூற்றாண்டு முதல் பத்தாம் நூற்றாண்டு வரை இத்தகைய பக்தி இலக்கியங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வாக்குச் செலுத்தின. பின்னர் காப்பியங்கள் தமிழில் பெருவழக்குப் பெறுகின்றன. சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி முதலான பெருங்காப்பியங்களும் யசோதர காப்பியம் முதலான சிறுகாப்பியங்களும் இக்காலத்தில் தோன்றியவையே. காப்பிய காலத்தின் பொற்காலமாகக் கருதப்படுவது கம்பராமாயண காலம். கம்பன் காலத்திலேயே தமிழ் உலக அங்கீகாரம் பெறும் நிலையை அடைந்தது. கம்பனின் காலத்திற்குப் பின் தமிழ் ஒரு தேக்கநிலையை அடைகிறது. நாயக்கர்காலத்தில் சிற்றிலக்கியங்களும் பிரபந்தங்களும் தோன்றினாலும் தமிழ் வளர்ச்சியில் ஒரு தேக்கத்தை அவதானிக்கத்தக்கதாக இருக்கிறது. உயிர்த் துடிப்புடைய இலக்கியங்களின் வருகை குறைகிறது. ஆனால் ஐரோப்பியர் வருகையோடு அந்நிலைமாறி தமிழ் வளர்ச்சி முனைப்புப் பெறுகிறது. தமிழ் உரைநடை வளர்ச்சியும் மேல்நாட்டு இலக்கியச் சாயலும் செல்வாக்கும் தமிழில் நவீன இலக்கியங்களின் வருகையைத் தோற்றுவித்தன. புனைகதை, கவிதை, நாடகம் என நவீன இலக்கியம் இருபதாம் நூற்றாண்டில் வீறுநடை போடத் தொடங்குகிறது. இக்காலத்தில் பாரதி, புதுமைப்பித்தன் முதலான உலகத் தரமிக்க படைப்பாளிகள் தமிழில் அறிமுகமாகித் தமது பங்களிப்புக்களைச் செய்தனர்.

## தெலுங்கு

திராவிட மொழிகளுள் தெலுங்கு மொழிக்கு என்றுமே தனிச்சிறப்புண்டு. இந்தியாவில் ஹிந்தி மொழிக்கு அடுத்தபடியாகப் பேசப்படும் மொழியாக இம்மொழி விளங்குகிறது. இதனை ஆந்திர மொழி எனவும் அழைப்பர். பழம்பெரும் இலக்கியங்களிலும் (இராமாயணம், மஹாபாரதம்) கல்வெட்டுக்களிலும் (அசோகன்) நினைவுச்சின்னங்களிலும் (மௌரியப் பேரரசு) தெலுங்குமொழி பேசும் மக்களைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. இத்தகைய சிறப்பினைக்கொண்ட மொழியின் முதல் எழுத்துருவத்தை கி.பி. ஏழாம் நூற்றாண்டிலிருந்துதான் காணமுடிகிறது. கி.பி.ஏழாம் நூற்றாண்டுக்கு முன்னர் பல்வேறு தளங்களிலும் தெலுங்குமொழிப் பாவனைக்கான சாயல் காணப்பட்டாலும் கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதலே கல்வெட்டுக்களில் முழுமையான பாவனை இடம்பெறுகிறது. இக்காலக் கல்வெட்டுக்களில்தான் தெலுங்கு மொழியின் வாக்கியச் சாயலைக் காணமுடிகிறது. தெலுங்கு மொழியின் வரலாற்றை மூன்று காலகட்டங்களாக வரலாற்றாசிரியர்கள் பகுத்து நோக்கியுள்ளனர். அவையாவன:

1. பழைய காலம் ( < - கி.பி. 1000 வரை)
2. இடைக்காலம் ( கி.பி 1000 – கி.பி 1800வரை)
3. தற்காலம் ( கி.பி. 1800 பின்னர்)

கி.பி. 1000 வரையுள்ள காலப்பகுதியை தெலுங்குமொழியின் பழைய காலம் என்பர். இக்காலத்தில் இலக்கியங்கள் எழுந்தமைக்கான சான்றுகள் எதுவும் இல்லை. எனினும் இக்காலத்தில் பல கல்வெட்டுக்கள் எழுதப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

கி.பி 1000 முதல் கி.பி 1800வரையுள்ள காலப்பகுதி இடைக்காலம் எனப்படுகிறது. இக்காலப்பகுதியில்தான் தெலுங்குமொழியின் முதல் முதல் இலக்கியம் தோற்றம் பெற்றது. நன்னயபட்டர் என்பவரால் கி.பி. 1020களில் எழுதப்பட்ட பாரதமே முதல்நூலாகக் கொள்ளப்படுகிறது. இவர் வேறு ஐந்து நூல்களை இயற்றியதாகவும் கருதப் படுகிறது. ஆந்திர சப்த சிந்தாமணி என்ற இலக்கண நூலொன்றையும் இவர் எழுதியதாகச் சிலர் குறிப்பிடுவர். இக்காலத்தில் நாரயணபட்டு என்பவரும் ஒரு கவிஞராகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திகழ்ந்தார் என்பர். ஆனால் அவர் இயற்றிய நூல்கள் எதுவும் கிடைப்பதற்கில்லை. கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த இன்னுமொரு குறிப்பிடத்தக்க புலவர் நன்னிச்சோடு. குமார சம்பவம் என்னும் ஜைன காவியம் இவரால் பாடப்பட்டதென்பர்.

கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் பல்வேறு இலக்கியப் பணிகள் இடம்பெற்றிருந்தாலும் இராமாயண மொழிபெயர்ப்பே முக்கிய இடத்தை வகிக்கின்றது. வான்மீகி இராமாயணத்தை மூலமாகக் கொண்டு இக்காலத்தில் பல்வேறு மொழிபெயர்ப்புக்கள் எழுந்துள்ளன. இக்காலத்தில் வாழ்ந்த திக்கண்ணாவின் முயற்சியால் இராமாயணமும் மஹாபாரதமும் செழுமை பெற்றன. நிர்வசேனோத்தர ராமாயணம், கவிவாக பந்தனா, விஜயசேனா முதலான நூல்களையும் இவர் எழுதியுள்ளார். ஆகையால் இவரைக் கவி பிரம்மா என்றும் அழைப்பர். இக்காலப்பகுதியில் வாழ்ந்த அதர்வணா என்ற மற்றொரு புலவரும் குறிப்பிடத்தக்கவர். இவர் கவிஞராக மட்டுமன்றி சிறந்ததொரு இலக்கண ஆசிரியராகவும் விளங்கினார். கி.பி. பதினான்காம் நூற்றாண்டில் விஜய நகரப் பேரரசின் கீழ்ப் பல புலவர்களும் அறிஞர்களும் ஆந்திர நாட்டில் தோன்றினர். கி.பி. பத்தாம் நூற்றாண்டு முதல் இடையறாது வளர்ந்து வந்த தெலுங்கு இலக்கியம் பதினைந்தாம், பதினாறாம், பதினேழாம் நூற்றாண்டுகளிலும் சிறந்த முன்னேற்றத்தைக் கண்டது.

கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டு வரை தெலுங்கு இலக்கியம் மொழிபெயர்ப்பிலக்கியமாகவே விளங்கியது. பின்னர் பிரபந்தங்களும் காவியங்களும் தெலுங்கில் தோற்றம்பெறத் தொடங்கின. இக்காலப்பகுதியில் கிருஷ்ணதேவராயரின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. இத்தகைய வளர்ச்சியைக் கண்ட தெலுங்கு இலக்கியம் ஐரோப்பியர் வருகையால் மேலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செழுமையடைந்தது. தெலுங்கில் முதல் அச்சுப் புத்தகம் கி.பி. 1796ல் வெளிவந்தது. அதன் வருகையோடு பல உரைநடை நூல்களும் நாடக நூல்களும் தோற்றம் பெற்றன. இக்காலத்தில் பேச்சுத் தெலுங்கைப் புகுத்தி வெற்றி கண்ட எழுத்தாளர்கள் புதியதொரு உரைநடையை உருவாக்கினர்.

## மலையாளம்

இந்தியாவில் கேரள மாநிலத்தில் பிரதானமாகப் பேசப்படும் மொழியாக மலையாளம் விளங்குகிறது. இது தமிழோடு மிக நெருங்கிய உறவினைக் கொண்டது. சிறந்த இலக்கியப் பரப்பையும் இலக்கணப் பாரம்பரியத்தையும் உடையது.

இம்மொழி கி.பி. ஒன்பது அல்லது பத்தாம் நூற்றாண்டில்தான் தனியொரு மொழியாக வளர்ச்சி கண்டதாகக் குறிப்பிடப் படுகிறது. எனினும் அதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே தனிமொழியொன்றிற்கான கூறுகளை அது பெறத் தொடங்கியிருந்தது. தமிழ் மொழியின் கிளைமொழியாக இருந்து பின்னர் பல மாற்றங்களோடு தனிமொழியாக வளர்ச்சி கண்டதாக மொழியியலாளர்கள் குறிப்பிடுவர். கி.பி ஒன்பதாம் நூற்றாண்டு முதல் ஏராளமான கல்வெட்டுக்களும் செப்பேடுகளும் மலையாள மொழியில் தோற்றம் பெற்றன. மலையாள மொழியின் இலக்கியங்களில் தமிழ், சமஸ்கிருத மொழிகளின் செல்வாக்கினைக் காணக் கூடியதாகவுள்ளது. மலையாள மொழியில் தோன்றிய முதல் இலக்கியம் கி.பி. பன்னிரெண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த ராமசரிதம். பின்னர் பல சம்பு இலக்கியங்கள் (உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்) தோற்றம் பெற்றன. பதினான்காம் பதினைந்தாம் நூற்றாண்டு காலப்பகுதியில் தோற்றம்பெற்ற கண்ணேசன் பாட்டுக்களும் குறிப்பிடத்தக்க இலக்கியங்களாக விளங்கின. கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டில் தோன்றிய மிக முக்கியமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் கிருஷ்ண கதையாகும். மலையாள மொழி வரலாற்றில் இந்நூல் ஒரு திருப்புமுனையாக கருதப்படுகிறது. இந்நூல் சமஸ்கிருதச் செல்வாக்கு இருந்த காலத்தில் தோன்றிய போதிலும் தனித்தன்மைகொண்டு மலையாள மொழியின் வளத்தைப் பறைசாற்றி எளிமையாகவும் இனிமையாகவும் காணப்படுகிறது என பி.கே.பரமேஸ்வர நாயர் குறிப்பிடு கின்றார்.

இன்றைய மலையாள மொழியின் தந்தை எனப் போற்றப்படும் எழுத்தச்சனின் வருகையோடு மலையாள மொழி வாழ்வும் வளமும் பெறுகிறது. இராமாயணம், மகாபாரதம் போன்ற நூல்களைத் தழுவி எழுத்தச்சன் ஆக்கிய இலக்கியங்கள் மலையாள மொழியின் சிறந்த இலக்கியங் களாகக் கருதப்படுகின்றன. மலையாளமொழி இவரது எண்ணத்திலும் கைவண்ணத்திலும் ஒரு புதிய வேகத்தையும் வளர்ச்சியையும் கண்டது.

கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் கதகளி இலக்கியங்களும் துள்ளல் இலக்கியங்களும் மலையாள மொழியில் தோன்றின. பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஐரோப்பியரின் வருகையால் மலையாள இலக்கியம் மேலும் சிறப்புற்று வளர்ந்தது. இன்று பல இலக்கியவாதிகளையும் பெற்றெடுத்த பெருமையோடு அம்மொழி வளம்பெற்று விளங்குகிறது.

## கன்னடம்

இந்தியாவில் கர்நாடக மாநிலத்தில் பிரதானமாகப் பேசப்படும் மொழியாக இது விளங்குகிறது. பழைமையான இலக்கியங் களையும் இலக்கணங்களையும் கொண்ட இம்மொழி ஆயிரக்கணக்கான கல்வெட்டுக்களையும் கொண்ட பெருமையுடையது. கர்நாடகத்தில் மாத்திரமன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்நாட்டில் சில பகுதிகளிலும் ஆந்திராவில் சில பகுதிகளிலும் இம்மொழி வழக்கிலுள்ளது.

இம்மொழியின் முதல்கல்வெட்டு கி.பி. ஐந்தாம் நூற்றாண்டுக்குரியது. எனினும் இம்மொழியின் வரலாறு கிறிஸ்துவின் பிறப்புக்கு முந்தியது எனப் பலரும் குறிப்பிடுவர். சங்க இலக்கியங்களில் கர்நாடகா எருமைநாடு என அழைக்கப் படுவதாகக் கருதுவர் பலர். கி.பி ஐந்தாம் நூற்றாண்டு முதல் தொடர்ச்சியாகப் பல கல்வெட்டுக்கள் காணக்கிடக்கின்றன. அவற்றில் கவிதைகளும் உள்ளன. ஆகையால் அவற்றுக்கு முன்னரேயே ஒரு பண்பட்ட மொழியாக கன்னடம் வளர்ந்துள்ளதாகக் கருதலாம். கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட கவிராஜ மார்க்கம் எனும் நூலே இம்மொழியின் முதல் நூலாகக் கருதப்படுகிறது. கடந்த பதினைந்து நூற்றாண்டுகளாக வளர்ந்துவரும் கன்னட இலக்கியம் இன்று ஒரு பண்பட்ட இலக்கியமாகக் காணப்படுகிறது. மொழிவரலாற்றில பல்வேறு மாற்றங்களைக் கண்ட கன்னடம் நான்கு காலப்பகுதிகளாகப் பகுத்து நோக்கப்படுகிறது. அவையாவன:

1. பூர்வ கன்னடம் ( கி.பி. 800 களுக்கு முன்)
2. பழங் கன்னடம் ( கி.பி.800-கி.பி.1150)
3. இடைக்காலக் கன்னடம் ( கி.பி.1150-கி.பி.1800)
4. தற்காலக் கன்னடம் (கி.பி.1800களுக்குப் பின்)

## உ.5 தமிழ் ஒரு திராவிட மொழி

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய இலக்கண, இலக்கிய வளத்தைக் கொண்ட தமிழ்மொழி ஒரு திராவிட மொழி என்பதில் எவ்வித வாதப்பிரதிவாதங்களும் இல்லை. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் குறித்த ஆய்வுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொண்ட கால்டுவெல் முதல் நவீன மொழியியலாளர்கள் வரை தமிழ் ஒரு திராவிட மொழி என்பதில் உடன்படுகின்றனர். ஆனால், திராவிட என்ற சொல்லினடியாகத்தான் தமிழ் என்ற சொல் தோன்றியதா? என்பதில் பலரும் உடன்பாடு காணவில்லை. அதேபோன்று சிலர் தமிழ் என்ற சொல்லினடியாகத்தான் 'திராவிட' என்ற சொல் தோன்றியிருக்கலாம் எனவும் கருதுகின்றனர். எனினும், 'திராவிட' என்ற சொல் வடமொழிச் சொல் என்பதில் பலரும் உடன்பட்டுள்ளனர். மேலதிகத் தகவல்களை டாக்டர் ச.அகத்தியலிங்கம் எழுதிய 'திராவிட மொழிகள்', தெ.பொ.மீ எழுதிய 'தமிழ் மொழி வரலாறு' ஆகிய நூல்களிற் காண்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழியின் தோற்றம், வளர்ச்சி, சமகாலநிலை

## 3.1 தமிழ் ஒரு தொல்சீர் மொழி

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய இலக்கண, இலக்கிய வளத்தைக் கொண்டவொரு மொழியாகத் தமிழ்மொழி நிறுவப்பட்டுள்ளது. தமிழ்மொழி வரலாற்றை அறிந்து கொள்வதற்கான அடிப்படைகளாகக் காணப்படும் சான்றுகளைக் கொண்டு தமிழ் மொழி ஒரு தொல்சீர் மொழி எனத் தெளிந்து கொள்ளலாம். தமிழிற் தோன்றியுள்ள இலக்கியங்கள், தமிழ்ச் சான்றோர் இயற்றிய இலக்கண நூல்கள், உரையாசிரியர்களின் உரைகள், வெளிநாட்டார் எழுதிய இலக்கணங்கள், அகராதிகள், கல்வெட்டுக்கள், பிறமொழிக் கல்வெட்டுக்கள், பிறமொழியாளர்களின் குறிப்புரைகள், கிளைமொழிகள், ஒப்பியல் முறை போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது தமிழ் ஒரு தொல்சீர் மொழி என்பதை நிறுவலாம். தமிழ்மொழி வரலாற்றை அறிந்து கொள்வதற்காகப் பயன்படுத்தப்படும், ஏறத்தாள இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய சான்றுகளில் கையாளப்பட்டுள்ள மொழி அமைப்பின் திருத்தமான வடிவத்தை நோக்குகையில் தமிழ்மொழியானது ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பிருந்தே வழக்கில் இருந்திருக்க வேண்டும் என்று துணியலாம். மேலதிகத் தகவல்களை தெ.பொ.மீ எழுதிய 'தமிழ் மொழி வரலாறு' எனும் நூலிற் காண்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.2 தமிழ் ஒரு நவீன மொழி

தமிழ் ஒரு தொல்சீர் மொழியாகத் திகழுவதைப்போலவே செயற்பாட்டுத்தளத்தில் ஒரு நவீன மொழியாகவும் திகழ்கிறது. ஒரு மொழி நல்ல பல பெறுமானங்களை உள்வாங்கிச் செழுமையடைய அதன் நெகிழ்ச்சித்தன்மை உதவுகிறது. உலக வரலாற்றில் குறிப்பிடத்தக்க காலகட்டங்களில் வழக்கிலிருந்த, ஆனால் காலமாற்றங்களுக்கு இணங்காத, நெகிழ்ச்சியற்ற, இறுக்கமான தன்மைகளைக் கொண்டிருந்த லத்தீன், கிறீக், ஹீப்றூ, சமஸ்கிருதம், பாளி போன்ற புராதன மொழிகள் வழக்கிறந்து போயின. எனினும் அம்மொழிகள் வாயிலாக மனித இனத்திற்குக் கிடைத்த நல்ல பல பெறுமானங்களையும் விழுமியங்களையும் நெகிழ்ச்சித் தன்மைகொண்ட வேறு பல மொழிகள் உள்வாங்கிக்கொண்டன. நெகிழ்ச்சித் தன்மைகொண்ட திராவிடச் செம்மொழியான தமிழ் மொழி, ஆரியச் செம்மொழியான சமஸ்கிருதத்தில் இருந்து பல பெறுமானங்களை உள்வாங்கிச் செழுமையடைந்துள்ளது. இன்று உலகளாவிய செல்வாக்கைப் பெற்று விளங்கும் ஆங்கிலமொழி லத்தீன், கிறீக், ஹீப்றூ ஆகிய மொழிகளிலிருந்து பல பெறுமானங்களைச் சுவீகரித்துக் கொண்டுள்ளது. மேற்குறிப்பிட்ட நெகிழ்ச்சித் தன்மையற்ற மொழிகள் வழக்கிறந்துபோக நெகிழ்ச்சித்தன்மையுள்ள மொழிகள் பெருவழக்குப்பெற்றுள்ளமை அவதானத்திற்குரியது. அவ்வகையில் தமிழ் மொழியும் குறிப்பிடத்தக்க மொழியாக விளங்குகிறது. இன்றைய நவீன தொடர்பாடல் விருத்திக்கேற்ப தமிழ்மொழியானது பல்வேறு நிலைகளில் கையாளப்பட்டும் வருகிறது. இந்த அடிப்படையில் நின்று நோக்குகிறபோது தமிழ் ஒரு நவீன மொழியாகத் திகழ்வதையும் அவதானிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி.முதலாம் நூற்றாண்டு முதல் கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டு வரை இடம்பெறாத சமூகமாற்றம் கடந்த இரண்டு நூற்றாண்டுகளில் இடம்பெற்றுள்ளது. கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் கீழைத்தேசங்களில் அறிமுகமான கைத்தொழிற்புரட்சியின் விளைவுகள், தமிழரிடையேயும் பாரிய சமூக, பண்பாட்டு மாற்றங்களைத் தோற்றுவித்தது. இவ்வம்சம் தமிழ்மொழி வளர்ச்சியிலும் பெருஞ்செல்வாக்குப் செலுத்தத்தொடங்கியது. இச்செல்வாக்கிற்கு முகங்கொடுக்கும் வகையில் தமிழ்மொழியானது தன்னைத் தகவமைத்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. தமிழ்மொழியானது காலத்தை மட்டும் கருத்திற் கொள்ளாமல் காலத்துக்குரிய குணாம்சங்களையும் கருத்திற் கொண்டது. ஆகையால் பல்வேறு படிநிலைகளில் பேசப்பட்ட நவீனத்துவம் குறித்த பிரக்ஞையோடு, அதனை எவ்வித இடர்பாடுமின்றிப் பிரதிபலிக்கக்கூடியதாகவும் தமிழ்மொழி நெகிழ்ச்சிபெற்றது. அவ்வகையில் தமிழ்மொழியை ஒரு நவீனமொழியாகவும் இனங்காணலாம். (மேலதிகத் தகவல்களை எம்.ஏ. நுஃமான் தொகுத்த 'தொடர்பாடல் மொழி நவீனத்துவம்' என்ற கட்டுரைத் தொகுப்பிற் காண்க.)

## 3.3 தமிழ் ஒரு பல்தேசிய மொழி

இன்றைய சமூகம் ஒரு உலகு தழுவிய பண்பாட்டின கீழ் இணைந்து வருகிறது. அத்தகைய புதிய பண்பாட்டை வரவேற்கும் மனோநிலை உலகில் பல்வேறு மொழிகளுக்கும் ஏற்பட்டுள்ளது. அத்தகைய மொழிகளுள் தமிழ்மொழியும் ஒன்று.

தகவல் பரிமாற்ற வசதிகள் உச்சத்தை அடைந்துள்ள காலத்தில் வாழ்வதால், தமிழர்கள் நாடுகளின் எல்லைக் கோடுகளுக்கப்பால் நின்று ஊடாடுவதற்கான எல்லா வாசல்களும் திறந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடப்பட்டுள்ளன. 'யாதும் ஊரே யாவரும் கேளீர்' தமிழர் பண்பாட்டுத் தத்துவத்தின் அடிப்படை இன்று நடைமுறைச் சாத்தியமாகிவருவதும் குறிப்பிடத்தக்கது.

இருபதாம் நூற்றாண்டின் இடைக்காலம்வரை இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நான்கு நாடுகளிலும்தான் தமிழர்கள் பெருவாரியாக வாழ்ந்தார்கள். தமிழ் மொழியும் வழக்கிலிருந்தது. ஆனால், இன்று தமிழர்களால் பெயர்களைக்கூடச் சரியாக உச்சரிக்கமுடியாத நாடுகளிலும் தமிழர்கள் வாழ்கின்றனர். தமிழ் மொழியும் வழங்கி வருகிறது. அதனால் தமிழும் தனது எல்லைகளை விரித்துள்ளது. தமிழர்களின் உலகு தழுவிய பண்பாட்டினால் தமிழும் புதிய போக்குகளுக்கு முகங்கொடுக்கவேண்டியது தவிர்க்க முடியாததாகிவிட்டது. இவ்வடிப்படைகளில் நின்று நோக்குகிறபோது, இன்று தமிழ் ஒரு பல்தேசிய மொழியாக மாறியுள்ளதை அவதானிக்கலாம்.

தமிழ் மொழியினது திடீர் உலகப் பரவலுக்கு முக்கியமாக இரு காரணிகள் கூறப்படுகின்றன. அவற்றுள் ஒன்று, பதினெட்டாம் நூற்றாண்டில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியின் காரணமாக, தமிழர்கள் வளர்ச்சியடைந்த கைத்தொழில் நாடுகளை நோக்கி தொழில் நிமித்தம் நகர்ந்தமை. இது இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளிற்கான ஒரு மட்டுப்படுத்தப்பட்ட நகர்ச்சியாகவே இருந்தது. மற்றொன்று, இருபதாம் நூற்றாண்டின் இறுதி தசாப்தங்களில் குறிப்பாக 1983இன் பின் வெடித்த ஈழ விடுதலைப் போராட்டத்தின் விளைவால் ஏற்பட்டது. இக்காலத்தில் இலட்சக்கணக்கிலான தமிழர்கள் மேலைத்தேசங்களுக்குப் புலம்பெயர்ந்தனர். அவை ஆபிரிக்க, ஆஸ்ட்ரேலிய, ஐரோப்பிய, வட அமெரிக்க, தென் அமெரிக்க நாடுகளை நோக்கிய புலப்பெயர்ச்சியாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குறிப்பிட்ட காரணிகளுள் இரண்டாம் காரணி மிக முக்கியமானது. பெரும் எண்ணிக்கையான ஈழத் தமிழர்கள், தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் காரணமாக தமது தாயகத்தை விட்டும் புலம்பெயர வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளானமை யாவரும் அறிந்ததே. ஆரம்பத்தில், இவர்களது புலப்பெயர்ச்சி ஆடம்பர வசதி வாய்ப்புக்களை வேண்டியதாக இருக்கவில்லை. ஈழத்துப் போர்ச்சூழலின் நெருக்குவாரத்தால் புலம் பெயருமாறு நிர்பந்திக்கப்பட்டவர்கள். தமது உயிர்களைக் காத்துக் கொள்வதற்காக கரையொதுங்கியவர்கள். அவர்களுள் பெரும்பாலானோர் தமிழைத் தவிர வேற்று மொழிகளை அறிந்திராதவர்கள். ஆங்கில மொழி கூடப் பரிச்சயமற்ற சாதாரண மனிதர்கள். தாம் தஞ்சம் புகுந்த நாடுகளின் மொழிகளைக் கூடச் சரியாக அறிந்திராதவர்கள். ஆரம்பத்தில் தாம் புலம்பெயர்ந்துசென்று குடியேறிய நாடுகளின் சமூக, பண்பாட்டம்சங்களைப் பேணியதனால் ஏற்பட்ட விளைவுகளும் காலவோட்டத்தில் ஏற்பட்ட விழிப்புணர்வும் புலம்பெயர்நாடுகளில் தமிழர் தம் மொழி, பண்பாட்டம்சங்களைப் பேண வேண்டிய சூழலைத் தோற்றுவித்திருந்தன. இச்சூழல் பின்னாட்களில தமிழர்களைப் புலம்பெயர்நாடுகளில் தனித்துவமிக்க சமூகக் குழுமமாக மாற்றியமைத்தது. தமிழ் கூறு நல்லுலகின் பல்தேசிய உருவாக்கம் இப்பின்னணியிலேயே தோற்றம் பெறுகிறது.

புலம்பெயர் நாடுகளில் தமிழர்களது வாழ்வியல் குறித்து எழுத்தாளர் சுந்தரராமசாமி உட்படப் பலரும் தமது கருத்துக்களைத் தெளிவுபடுத்தியுள்ளனர். பல்பண்பாட்டுச் சூழலில் தமிழரின் சமூக, பண்பாட்டுப் பேணுகை, சமூக ஒருங்கிணைவு, சமூக இயைபு, பல்தேசிய உருவாக்கம், தமிழர் பண்பாட்டுச் சிதைவு முதலான பல்வேறு விடயங்கள் குறித்த பார்வையும் பல படைப்பாளிகளால் முன்வைக்கப்பட்டுள்ளன. 1966இல் தனிநாயகம் அடிகளின் தலைமையில் மலேசியாவில் நடைபெற்ற முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு முதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தஞ்சையில் நடைபெற்ற எட்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு, 2010இல் கோயம்புத்தூரில் நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு வரை தமிழ் மொழி, இலக்கிய ஆய்வுகள் பல்வேறு நாடுகளில் நடைபெற்று வந்துள்ளன. இவற்றில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தமிழர்களும் தமிழரல்லாத, ஆனால் தமிழ் ஆய்வுகளில் ஆர்வமுள்ள ஆய்வாளர்களும் பங்குபற்றியுள்ளனர். கமில் சுவலபில், பிரான்ஸ்வா க்ரோ, ஆஸ்கோ பார்ப்போலா, ஜோர்ஜ் எல். ஹார்ட், அலெக்ஸாண்டர் எம்.துப்யான்ஸ்கி போன்றோர் இத் தமிழரல்லாதோருக்கு உதாரணமான சிலராவர்.

புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் பல்வேறு அமெரிக்க, ஐரோப்பிய நகரங்களில் ஏற்பாடு செய்து வெற்றிகரமாக நடாத்திவரும் தமிழ் இலக்கிய மாநாடுகளும் கருத்தரங்குகளும் தமிழ் இலக்கியச் சந்திப்புகளும் தமிழ் ஆவணக் காப்பு முயற்சிகளும் ஏனைய தமிழ்ப்பண்பாடுசார் விழிப்புணர்வுச் செயற்பாடுகளும் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கன.

பிறமொழிகளதும் பண்பாடுகளதும் தாக்கத்தால் பல புதிய சொற்கள் புலம்பெயர் தமிழில் வந்து கலந்துள்ளன. அவை தமிழில் ஒலிபெயர்ப்புக்களாக வழங்கி வருகின்றன. புதிய கலைச்சொல்லாக்கங்கள் நிகழ்கின்றன. அவற்றுள் ஆங்கிலச் சொற்களின் செல்வாக்கே அதிகரித்துக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவற்றிற்கும் மேலாக, 'புலம்பெயர் இலக்கியம்' அல்லது 'புகலிட இலக்கியம்' எனும் புதிய இலக்கியப்போக்கு தமிழில் அறிமுகமாகி வளர்ச்சிகண்டு வருகிறது. புலம்பெயர் தமிழர்களின் இலக்கியங்கள் புகலிடத்தின் புதிய சூழல்தரும் அனுபவங்களை வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ளன. மேலும் வேறுபட்ட மொழி, பண்பாடு, அரசியல், வாழ்வியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மைகளுள் அகப்பட்டுக்கொண்டு முகமிழந்து நிற்கும் அவர்களது தவிப்பை வெளிப்படுத்துவனவாகவும் உள்ளன. சமகால ஈழத்துச் சூழலில் வெளிவராத அளவுக்கு, புலம்பெயர் நாடுகளிலிருந்து தமது வெளியீடுகளைக் கொண்டுவரும் படைப்பாளிகள் தோற்றம்பெற்றுள்ளனர். புகலிட வாழ்வின் பரந்த அனுபவமும் தேடலும் விரிவுபட்டு, புலம்பெயர் இலக்கியம் வளம்பெறும் சூழல் தோன்றியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

பனிமலர், மௌனம், ஊதா, தூண்டில், உயிர்ப்பு, சுவடுகள், ஓசை, சமர், மனிதம், அ ஆ இ, காலம், தேடல், பொதிகை, நான்காவது பரிமாணம், மரபு, அக்கினிக் குஞ்சு, சஞ்சீவி, நமது குரல், புதுமை, சிந்தனை எனப் புகலிடச் சஞ்சிகைகளின் பட்டியல் நீண்டுகொண்டே செல்கிறது. இவற்றுள் பெரும்பாலானவை இன்று வெளிவராமல் நின்றுவிட்டன. எனினும் எக்ஸில், உயிர் நிழல் போன்று புதிது புதிதாகவும் சஞ்சிகைகள் தோன்றிக் கொண்டேயிருக்கின்றன. இவை பிரான்ஸ், நோர்வே, சுவிற்சர்லாண்ட், ஆஸ்ட்ரேலியா, டென்மார்க், கனடா, பிரிட்டன், நெதர்லாண்ட் போன்ற நாடுகளிலிருந்து வெளிவந்தன; வெளிவருகின்றன. இவற்றினூடாக உலக மொழிகளிலிருந்து தமிழுக்கும் தமிழிலிருந்து பிற மொழிகளுக்கும் இலக்கியப் பரிவர்த்தனை நிகழ்கிறது. இவற்றினூடாக தமிழிலக்கியப் பரப்பின் எல்லைகள் விரிந்துள்ளன. இவை தமிழ் ஒரு பல்தேசிய மொழியாக மாற்றம் பெற்றுவிட்டமையையே.

புலம்பெயர்ந்த நாடுகளில் திரைப்பட, விவரணத் திரைப்பட, குறுந்திரைப்பட முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. லண்டன் தமிழ் அவைக்காற்றுக் கழகம் போன்றன நாடக முயற்சிகளில் வெற்றிகரமாக ஈடுபடுகின்றன. இசை, நடன, நாட்டிய அரங்கேற்ற நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. அங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழும் அறிவியற் தமிழும் விரவிப் பரவுகின்றன. இவற்றினூடாக தமிழருடன் தமிழரல்லாதோரும் தமிழ்க் கலை இலக்கிய முயற்சிகளில் ஈடுபாடு காட்டியுழைக்கும் வழியேற்பட்டுள்ளது. அண்மையில் வெளிவந்த ஆங்கிலத் திரைப்படங்களுள் ஒன்றான த ஹிட் மேன் *(The Hit Man)* தமிழ் குறித்து உரையாடுவதோடு, கதாநாயகியின் தாயாரை ஈழத்துத் தமிழ்ப் பெண்ணாகவும் இனங்காட்ட முயற்சிக்கிறது.

பல்வேறு நாடுகளிலும் சில பல்கலைக்கழகங்கள் தமிழாய்வுகளிலும் தமிழ்க் கற்கைகளிலும் கூடிய கவனஞ் செலுத்திவருகின்றன. சில நாடுகளில் தமிழ்மொழி மூலம் கற்பதற்கான வாய்ப்புக்கள் கூட உள்ளன. தமிழ் நூல்கள் சந்தைகளில் தாராளமாகக் கிடைக்கின்றன. லண்டனில் வாழும் இ.பத்மநாப ஐயர் ஆண்டுக்கொருமுறை உலகம் முழுவதிலுமுள்ள தமிழர்களது படைப்புக்களை உள்ளடக்கிய 'இலக்கியப் பெட்டகம்' ஒன்றை வெளியிட்டு வருகிறார்.

உலகத் தமிழ் தொலைக்காட்சி ஒன்றை நிறுவுவதற்கு சிலர் முயற்சிக்கின்றனர். பல நாடுகளில் தமிழில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. பீ.பீ.சீ, வெரீற்றாஸ், மலேசிய வானொலி, சிங்கப்பூர் வானொலி, ஆகாஷவாணி, இலங்கை வானொலி, பீபா றேடியோ, வத்திக்கான தமிழ் ஒளிபரப்பு, பாகிஸ்தான் வானொலி என்பன மூலம் ஏகப்பட்ட நாடுகளிலிருந்து தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவுகிறது.

இன்று தமிழ் நிர்வாக மொழியாகவும் அறிவியல் மொழியாகவும் ஒப்பீட்டுக் கற்கை மொழியாகவும் போதனா மொழியாகவும் உத்தியோகபூர்வ மொழியாகவும் பல நாடுகளில் அங்கீகரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலம்பெயர்ந்த நாடுகளில் வசிக்கும் தமிழர்கள் தமது புதிய தலைமுறையினர் தமது தனித்துவத்தை இழக்காது வாழ வேண்டும் என்பதில் அதிக கவனம் செலுத்துகின்றனர். இவர்கள் தமிழில் முன்பள்ளிகள் பலவற்றை ஆரம்பித்துள்ளனர். தமிழ் ஆசிரியர் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. தமிழ் நூல்களைப் பெற வாய்ப்பான நூலகங்களும் அங்கு அமைக்கப்பட்டுள்ளன.

நவீன தொடர்புசாதனங்களினூடாக தமிழில் தொடர்பு கொள்ள முடிகிறது. இணையம், மின்னஞ்சல், குறுந்தகவல், சமூக வலைத்தள செதிகளை தமிழ் மொழியூடாகப் பயன்படுத்த முடிகிறது. கணினி அச்சுக் கோப்பு முறையில் தமிழில் விதம் விதமான எழுத்து வடிவமைப்புக்களைச் செய்ய முடிகிறது. ஆற்றல் அலைபேசிகளினூடாக பல செயற்தளங்களைத் தரவிறக்கம் செய்து, தமிழில் தாராளமாகத் தொடர்பாட முடிகிறது.

மொழியியல் ஆய்வுகள், கலைச் சொல்லாக்கம், எழுத்துச் சீர்திருத்தம் முதலானவை குறித்த அக்கறை உலகெங்குமுள்ள தமிழர்களால் செலுத்தப்பட்டு வருகிறது. இது குறித்து பரந்தளவில் முன் முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளன. தமிழ் இன்று தனது எல்லையை விரிவுபடுத்தி வருவதை மிக நுட்பமாக இவை உணர்த்தி நிற்கின்றன.

## 3.4 தமிழ் ஒரு பல்லின மொழி

செயற்பாட்டுத்தளத்தில் தமிழ் ஒரு பல்லின மொழியாகத் திகழ்கிறது. உலகிற் சிறந்து விளங்கும் சில மொழிகளைப்போல தமிழ்மொழியும் பல இன, சமய, பண்பாட்டுக் குழுமத்தினரால் பயன்படுத்தப்பட்டுவருவதோடு, அக்குழுமத்தினர் தமிழ்மொழிக்கும் தொண்டாற்றி வருகின்றனர். சமயம், பண்பாடு, பிரதேசம் முதலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்சங்களால் ஒழுங்கமையப் பெற்றிருக்கும் இனக்குழுமத்தினர் தமிழ்மொழியைத் தமது தாய்மொழியாகவும் நிருவாக மொழியாகவும் அரசகரும மொழியாகவும் பயன்படுத்தி வருகின்றனர். இஸ்லாமியர்கள் - சைவர்கள் - வைணவர்கள் - சமணர்கள் - கிறிஸ்தவர்கள், இலங்கைத்தமிழர் - இந்தியத்தமிழர் எனப்பலரும் தமிழ்மொழியைப் பயன்படுத்தி வருகின்றனர். அதனால் தமிழ் ஒரு பல்லின மொழி என்ற அந்தஸ்தையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஐரோப்பியர் வருகைக்குப் பின்னரான தமிழ் இலக்கிய வரலாற்றைத் தொகுத்து நோக்குகிறபோது தமிழின் பல்லினப் பரவலாக்கம் தெளிவாகப் புலப்படும். பல்வேறு இனத்தவரும் தமிழைப் பயன்பாட்டு மொழியாகக் கொண்டதனால் அவரது உணர்வுகளும் தமிழ் மொழியிலேயே இலக்கியங்களாக வெளிவந்தன. இஸ்லாமியர் தமிழ்த் தொண்டு, கிறிஸ்தவர் தமிழ்த் தொண்டு, சமணர் தமிழ்த் தொண்டு முதலான போக்குகளின் சாரம் தமிழின் பல்லினப் பரவலாக்கத்தையே பறைசாற்றி நிற்கின்றது.

## 3.5 தமிழ் ஒரு பல்–பண்பாட்டு மொழி

செயற்பாட்டுத்தளத்தில் தமிழ் ஒரு பல்லின மொழியாகத் திகழ்வதைப்போலவே ஒரு பல்-பண்பாட்டு மொழியாகவும் திகழ்கிறது. உலகிற் சிறந்து விளங்கும் சில மொழிகளைப்போல தமிழ்மொழியும் பல்-பண்பாட்டுக் குழுமத்தினரால் பயன்படுத்தப்பட்டுவருவதோடு, அக்குழுமத்தினர் தமிழ்மொழிக்கும் தொண்டாற்றி வருகின்றனர். சமணப் பண்பாடு, வைணவப் பண்பாடு, சைவப் பண்பாடு, இந்துப் பண்பாடு, பௌத்தப் பண்பாடு, கிறிஸ்தவப் பண்பாடு, இஸ்லாமியப் பண்பாடு எனப் பல்நிலைப்பட்ட பண்பாட்டையும் உரையாடுகின்ற, புலப்படுத்துகின்ற,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிபலிக்கின்ற மொழியாகவும் தமிழ்மொழி திகழ்கிறது. சமணத்தமிழ் இலக்கியங்கள், வைணவத்தமிழ் இலக்கியங்கள், சைவத்தமிழ் இலக்கியங்கள், பௌத்தத்தமிழ் இலக்கியங்கள், கிறிஸ்தவத்தமிழ் இலக்கியங்கள், இஸ்லாமியத்தமிழ் இலக்கியங்கள் போன்ற வகைப்பாடுகள் அதனையே தெளிவுபடுத்தி நிற்கின்றன. சமணர் தமிழுக்காற்றிய தொண்டும் வைணவர் தமிழுக்காற்றிய தொண்டும் சைவர் தமிழுக்காற்றிய தொண்டும் பௌத்தர் தமிழுக்காற்றிய தொண்டும் கிறிஸ்தவர் தமிழுக்காற்றிய தொண்டும் இஸ்லாமியர் தமிழுக்காற்றிய தொண்டும் தமிழ் ஒரு பல்பண்பாட்டு மொழி என்பதையே பிரதிபலித்து நிற்கின்றன. திருக்குறள், நாலடியார், கம்பராமாணயம், கலிங்கத்துப்பரணி, தேம்பாவணி, சீறாப்புராணம் முதலானவை தமிழின் பல் பண்பாட்டுத் தளத்தையே புலப்படுத்தி நிற்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழியின் வகைகள்

## 4.1 கிளைமொழி வேறுபாடுகள்

மனித சமுதாயம் கருத்துப் பரிமாற்றம் செய்யப் பயன்படுத்தும் கருவிகளுள் மிகச் சிறந்தது மொழியாகும். அது மக்கள் ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொண்டு ஒத்துழைத்து வாழ்வதற்கு இன்றியமையாதது. மேலும், அது பேசுவோரது உள்ளத்தில் எழும் எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்த உதவுவதோடு மனித சமுதாயத்தின் சிந்தனை விருத்தியையும், திறனையும் வளர்க்கவும் பயன்படுகிறது. ஆகவே, நாகரீக வளர்ச்சியில் மொழி ஓர் உன்னத இடத்தை வகிக்கின்றது. அவ்வகையில் முக்கியத்துவம் பெறும் மொழிகளுள் தமிழ்மொழியும் ஒன்று. அது ஓர் இரட்டை வழக்கு மொழியாகும். அது பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு என இரு வேறுபட்ட மொழி வகைகளாக வளர்ந்து வந்துள்ளது.

வரலாற்று ரீதியாக வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு வகையான தமிழ்மொழி வழக்கை மக்கள் பயன்படுத்தி வந்தது போலவே, வெவ்வேறு இடங்களில் வாழ்ந்துவரும் மக்களும் வெவ்வேறு வகையான தமிழைப் பேசி வருவதைக் காணலாம். எடுத்துக்காட்டாக, இலங்கையில் யாழ்ப்பாணத் தமிழர்கள் பேசுகின்ற மொழியும் மட்டக்களப்பு தமிழர்கள் பேசுகின்ற மொழியும் வேறுபடுவதனைக் குறிப்பிடலாம். 'என்னால் முடியாது' என்ற எழுத்து வழக்குத் தமிழை யாழ்ப்பாணத்தார் 'எனக்கேலாது' எனவும் மட்டக்களப்பார் 'எனக்கொண்ணா' எனவும் வழங்குகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேபோன்று, வெவ்வேறு சமூகத்தைச் சார்ந்த மக்களும் தமது சமய, பண்பாட்டு வேறுபாடுகளுக்கேற்ப வெவ்வேறு மொழி வழக்குகளைப் பயன்படுத்துவதையும் பல்வேறு தொழிற் துறைகளில் ஈடுபடுபவர்கள் தத்தம் தொழிற்துறைகளுக்கேற்ப வெவ்வேறு மொழி வழக்குகளைப் பயன்படுத்துவதையும் அவதானிக்கலாம். ஆண்கள் - பெண்கள், கல்வியறிவுடையோர் - கல்வியறிவற்றோர் வெவ்வேறு மொழிவழக்கில் பேசுவதையும் மேலும் கல்வியறிவுடையோர் பேசுவதற்கொரு வழக்கையும் எழுதுவதற்கொரு வழக்கையும் பயன்படுத்துவதையும் காணலாம்.

இவ்வாறு காலத்திற்குக் காலம், பிரதேசத்திற்குப் பிரதேசம், சமூகத்திற்குச் சமூகம், தொழிலுக்குத் தொழில், ஆளுக்கு ஆள் வேறுபட்டு வழங்குகின்ற மொழி வழக்குகளை 'மொழி வகைகள்' எனலாம்.

தமிழ் பல்வேறு கிளைமொழிகளைக் கொண்டவொரு மொழியாகும். தமிழின் பிரதான கிளைமொழி வகைகளை தக்க உதாரணங்களோடு விரிவாக விளங்கிக் கொள்ளும்போது இதனைத் தெளிந்து கொள்ளலாம்.

மொழி ஒலிகளை அடையாளமாக வைத்துக் கொண்டு கருத்துக்களை உணர்வது. ஒலிகளும், அவற்றுக்கான கருத்துக்களும் உலகினுக்குப் பொதுவானவை. ஒலிகளுக்கும் கருத்துக்களுக்கும் தொடர்பினை ஏற்படுத்துகின்ற அடையாளங்கள் எண்ணிலடங்காதவை. அவை மொழிக்கு மொழி வேறுபடுவன. உலகில் சுமார் ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட பல்வகை மொழிகள் வழக்கிலுள்ளன. பறவைகள், விலங்குகள் முதலியன ஆபத்து, அழைப்பு போன்றவற்றைத் தெரிவிக்க ஒலிகளை எழுப்புகின்றனவாயினும் அவை தம் கருத்துக்களைத் தெளிவாகத் தெரிவப்பதில்லை. மனிதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமே தன்னுணர்வுகளையும் கருத்துக்களையும் மற்றவர்க்குத் தெளிவாகத் தெரிவிக்கக் கூடியவனாக இருக்கின்றான். இதன் மூலம் மனிதர்களிடையே தொடர்புகளேற்படுவதற்கு மொழியே பிரதானமாகிறது. பண்பாட்டு வளர்ச்சியிலும் மொழி ஓர் ஊடகமாகத் திகழ்கிறது. காரணம் மொழியின் வாயிலாகவே சமுதாயத்தின் எல்லாவகையான தொடர்பாடல்களும் ஏதாவது ஒரு வகையில் நிகழ்ந்த வண்ணமிருக்கின்றன.

பேசப்படுகின்ற, பேசப்பயன்படுத்துகின்ற மொழியை நாம் பேச்சு மொழியெனலாம். பேச்சு மொழி இடத்துக்கிடம், சமூகத்திற்குச் சமூகம் வேறுபடும். இவ்வாறு வேறுபடும் பேச்சு மொழி வகைகளே கிளை மொழிகள் எனப்படுகின்றன. ஒரு மொழி பரந்த பரப்பிற் பேசப்படும் பொழுது அதில் வேறுபாடுகள் காணப்படுதல் இயற்கையாகும். மக்கள் சிறு சிறு குழுக்களாக வாழும்போது மலை, ஆறு, கடல் போன்ற இயற்கையமைப்பால் பிரிக்கப்பட்டு அவர்களிடையே அதிக தொடர்பின்றி வாழ வேண்டியநிலை ஏற்படுகின்றது. இலங்கையும் இந்தியாவும் கடலால் பிரிக்கப்பட்டிருப்பதால் இவ்விரண்டு இடங்களிலும் பேசும் தமிழ் மொழியில் வேறுபாட்டைக் காணலாம்.

கிளை மொழியை வழங்கும் இடம் குறித்துப் பிரதேசக் கிளைமொழி *(Regional Dialect)* என்றும் பேசுகின்ற மக்களின் சமூக நிலை குறித்துச் சமூகக் கிளைமொழி *(Social Dialect)* என்றும் கூறுவர். பேச்சு மொழியை வரி வடிவத்தில் அளிக்கும் போது அதனைப் பார்வைக் கிளைமொழி *(Eye Dialect)* என்றும் கூறுவர். ஒரே மொழி பிரதேசத்திற்கு பிரதேசம், சாதிக்குச் சாதி, தொழிலுக்குத் தொழில் வேறுபட்டாலும் கூட அவற்றிடையே ஒரு பொதுத் தன்மையைக் காணலாம். எழுத்து மொழியுடன் பெரும்பாலும் ஒத்துச் செல்லும் பேச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கினைப் பொதுப் பேச்சு மொழி (Standard Spoken Language) அல்லது பொதுக் கிளைமொழி (Standard Dialect) என்பர், அறிஞர்.

மேலே குறிப்பிட்ட அடிப்படைகளைக் கொண்டு பேச்சுமொழியினைப் பிரதேசக் கிளைமொழி, சமூகக் கிளைமொழி, பொதுக் கிளைமொழி எனப் பிரதானமாக மூன்று வகையாக நோக்கலாம்.

## ௧.௨ பேச்சுமொழியும் எழுத்துமொழியும்

பேசப்படுவதும் கேட்கப்படுவதும் உண்மையான மொழி. அதேபோன்று எழுதப்படுவதும் வாசிக்கப்படுவதும் அதற்கடுத்த நிலையில் வைத்து எண்ணப்படும் மொழி. எழுத்துமொழி கட்புலன் சார்ந்தது, பேச்சுமொழி செவிப்புலன் சார்ந்தது. எழுத்துமொழியைக் கண்டுணர முடியும், பேச்சுமொழியைக் கேட்டுணர முடியும். எழுத்துமொழி எங்காவது உறைவது, பேச்சுமொழி செவிக்கெட்டியவுடன் மறைவது. எனவே எழுத்து மொழியை ஆராய்தல் எளிது. பேச்சு மொழியை ஆராய்தல் அரிது.

தமிழ் மொழியைப் பொறுத்த அளவில் பேச்சுவழக்கு, எழுத்துவழக்கு என்னும் இரு பெரும் வழக்குகள் இருந்துவருவதை அறியலாம். இவையிரண்டும் அமைப்பிலும் பயன்பாட்டிலும் வேறுபடுகின்றன. இத்தகையதொரு மொழிச் சூழலை மொழியிலாளர் மொழியின் இரு நிலைத்தன்மை என்று குறிப்பிடுவர். தமிழ் மொழியிலுள்ள இருநிலைத் தன்மையானது, மொழியின் சிறப்புப் பயன்பாடுகளையும் இயல்புப் பயன்பாடுகளையும் நிறைவு செய்வதாகவுள்ளது. சிறப்புப் பயன்பாடுகள் யாவும் தமிழ் மொழியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்துவழக்காலும் இயல்புப் பயன்பாடுகள் யாவும் பேச்சுவழக்காலும் நிறைவு செய்யப்பட்டு வருகின்றன.

பொதுவாக, பேச்சுவழக்கைப் பயன்படுத்தும் இடங்களி லெல்லாம் எழுத்துவழக்கைப் பயன்படுத்துவதில்லை. அதேபோன்று எழுத்துவழக்கைப் பயன்படுத்தும் இடங்களிலும் பேச்சு வழக்கைப் பயன்படுத்துவதில்லை. கல்வித்துறை, பத்திரிகைத்துறை போன்றவற்றில் பெருமளவு எழுத்துவழக்கும் நாளாந்த உரையாடல், கிராமிய இலக்கியங்கள் போன்றவற்றில் குறிப்பாகப் பேச்சுவழக்கும் பயன்படுத்தப்படுகின்றன. சில சந்தர்ப்பங்களில் இவ்விரு வழக்குகளும் பயன்படுத்தப்படுவதும் உண்டு. இத்தகைய வழக்கம் அவற்றைப் பயன்படுத்தும் மக்களின் சூழலினாலேயே தீர்மானிக்கப்படுகின்றது.

நாளாந்த வாழ்வில் ஒருவர் மற்றொருவருடன் சாதாரணமாக உரையாடுகின்றபோது பயன்படுத்துகின்ற மொழியை பேச்சுத்தமிழ் (Spoken Tamil) அல்லது பேச்சுமொழி எனலாம். பேச்சுமொழியை கிளைமொழி என்றும் வழங்கலாம். மொழியென்னும் மையத்திலிருந்து பல்வேறு வழக்குகளாகக் கிளைத்தெழுந்த வழக்குகளையே கிளைமொழி என்பர், அறிஞர். எனவே, பேச்சுவழக்குகள் கிளைமொழிகளாகும்.

தொடர்பாடலில் பேச்சுமொழி முக்கிய இடம்பெறுகின்றது. பேச்சுமொழியையே மனிதன் தனது வாய்மொழித் தொடர்பாடலுக்குப் பயன்படுத்துகின்றான். பண்டைக்காலந் தொட்டே தமிழிற் பேச்சுவழக்கும் எழுத்துவழக்கும் வெவ்வேறாக இருந்து வந்துள்ளதைச் சங்ககால இலக்கியங் களையும் இலக்கண நூல்களையும் ஆதாரமாகக் கொண்டு நோக்கலாம். தொல்காப்பியர் செந்தமிழை இயற்சொல்லாகக் கொண்டு, பிரதேச வழக்கினைத் திசைச்சொல் எனக் கூறுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சுத்தமிழ் காலங்காலமாகத் தன் வளர்ச்சிப் போக்கில் வேறுபட்டு வந்துள்ளது. அது எழுத்துவழக்கைப் போலன்றி மிக வேகமாக மாற்றங்களைப் பெறுகின்றது.

கல்வியறிவின் தன்மைக்கேற்ப பேச்சுவழக்கு வேறுபடுகின்றது. கற்றவர் பேச்சுவழக்கிற்கும் கல்வியறிவு குறைந்தவர் பேச்சுவழக்கிற்கும் கணிசமான வேறுபாடுண்டு. கற்றவர் எழுத்துவழக்குடன் ஓரளவு நெருங்கியதான மொழியைப் பயன்படுத்துவர். கல்வியறிவு குறைந்தோர் பேச்சுமொழி, எழுத்துமொழியிலும் கூடிய வேறுபாடுடையதாக அமைகிறது. கல்வியறிவு படிப்படியாக வளர வளர இதன் தாக்கம் பேச்சுவழக்கிலும் ஏற்படுகின்றது.

எழுதப்படுகின்ற மொழி எழுத்துமொழி எனப்படுகின்றது. இதனையே எழுத்துவழக்கென்றும் இலக்கிய வழக்கென்றும் கூறுவர். பேச்சுவழக்கை வரிவடிவிற் காட்டும்போது, அதனையே எழுத்துமொழி என்று கூறல் பொருந்தாது. ஏனெனில், பேசுவதைப் போன்று எழுதுவதில்லை. பேச்சுமொழியினதும் எழுத்துமொழியினதும் இலக்கண அமைதி வெவ்வேறானதாகும். நவீன மொழியியலாளரைப் பொறுத்தவரையில், எழுத்துமொழியிலும் பேச்சுமொழியே முதன்மையானது என்பர். இருப்பினும், இரண்டும் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் முதன்மையானவையாகத் திகழ்கின்றன.

பேச்சுமொழியானது, இயற்கையமைப்பால் பிரிக்கப்பட்ட பிரதேசங்களிலே வெவ்வேறாக அமைவதைப்போல எழுத்துமொழி அமைவதில்லை. அது காலங்கடந்து, நாடு கடந்து நிற்கின்ற பண்பினைக் கொண்டது. நமது முன்னோரின் எச்சங்களிலிருந்து, ஆய்வு முயற்சிகள் போன்ற வழிவகைகளால் கிடைக்கின்ற தகவல்களைப் பேணிப்பாதுகாத்து நமது வழித்தோன்றல்களுக்குக் கொடுப்பதற்கு எழுத்துமொழியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாவசியமாகின்றது. நமது அறிவுத்திறனை அடுத்த தலைமுறையினர் அறிந்துகொள்ள உதவுவதும் எழுத்து மொழியேயாகும். இவ்வாறு இறந்தகாலத்தையும் எதிர்காலத்தையும் நிகழ்காலத்துடன் இணைக்கின்றவொரு பாலமாக எழுத்துமொழி காணப்படுகின்றதென்பர், மொழியியலாளர்.

பேச்சுமொழியாற் பிரிந்திருக்கும் தமிழ் கூறும் நல்லுலகை எழுத்துமொழி இணைத்து நிற்கின்றது. பேச்சுமொழியினை அடியொட்டி எழுந்ததே எழுத்துமொழியாகும். ஆனால், எழுத்துமொழி கட்டாயமாகப் பேச்சுமொழியில் உள்ளதை உள்ளபடி பிரதிபலிக்க வேண்டுமென்பதில்லை. பொதுவாகப் பேச்சுமொழியின் செல்வாக்கு எழுத்துமொழியிலும் எழுத்துமொழியின் தாக்கம் பேச்சுமொழியிலும் இடம்பெறுவதுண்டு. இதனால் மொழி வளர்ச்சியடையு மென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறு பேச்சுமொழிக்கும் எழுத்துமொழிக்கும் இடையிலான வேறுபாட்டையும் அவை வேறுபடுவதற்கான காரணங் களையும் தெளிந்து கொள்ளலாம்.

## 4.3 இலங்கை – இந்தியத் தமிழ்

இந்தியாவிலிருந்து பாக்கு நீரிணையால் நிலத்தொடர் பற்றிருக்கும், இலங்கை வாழ் மக்களின் பேச்சுவழக்கிற்கும் தமிழகத்தில் வாழ்கின்ற மக்களின் பேச்சுவழக்கிற்கும் மிகுந்த வேறுபாடுகள் காணப்படுவதை அவதானிக்கலாம். இந்த வேறுபாடு ஒலியன் அமைப்பு, இலக்கண அமைப்பு, சொற்றொகுதி ஆகிய எல்லா அம்சங்களிலும் காணப் படுகின்றது. இந்தியத் தமிழில், இலங்கையிலிருந்து வேறுபடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதத்தில், மொழி முதலில் ஒலிப்புள்ள வல்லொலிகள் பயன்படுவதை இங்கு நாம் உதாரணமாகக் கூறலாம்.

(P) பயங்கரவாதம், பயம் - இலங்கைத் தமிழ்
(B) பயங்கரவாதம், பயம் - இந்தியத் தமிழ்

(K) காந்தி - இலங்கைத் தமிழ்
(G) காந்தி - இந்தியத் தமிழ்

இலங்கையிலும் இந்தியாவிலும் 'பணம்' என்பதனைச் சுட்டுவதற்கு முறையே காசு, துட்டு ஆகிய சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. அதேபோன்று ஒரே பொருளைச் சுட்ட வெவ்வேறு சொற்கள் இவ்விரு நாடுகளிலும் பயன் படுத்தப்படுகின்றன.

ஜொரம் - காய்ச்சல்
சாதம் - சோறு
கவுச்சி — மச்சம்
காரம் - உறைப்பு

இவ்வாறான அடிப்படைகளை வைத்துக்கொண்டு, தற்காலப் பேச்சுத்தமிழினை இந்தியத்தமிழ், இலங்கைத்தமிழ் எனப் பிரதேச ரீதியாக இருபெரும் பிரிவுகளாக வகுத்து நோக்கலாம். டாக்டர் கமில் சுவலபில் (Dr. Kamil Zvelebil) அவர்கள் தமிழின் கிளைமொழிகளை ஆராய்ந்து அதனை நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரித்துள்ளார். இலங்கைத் தமிழையும் மற்றுமொரு பிரிவாகக் கொள்கின்றார். ஒவ்வொரு கிளைமொழிப் பிரிவிற்கும் பல உட்கிளைமொழிகள் (Sub Dialects) உள்ளன என்றும் வருங்காலக் கிளைமொழி ஆய்வுதான் இதனை முடிவு செய்யுமென்றும் கூறுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச வாரியாகப் பேச்சுத்தமிழினை இலங்கைத் தமிழ், இந்தியத் தமிழ் என வகுத்துக் கொண்டாலும் அவையிரண்டும் மேலும் பல பிரிவுகளாக மொழியியலாளர்களால் பகுத்து நோக்கப்படுகின்றன.

## 4.4 பிரதேசக் கிளைமொழிகள்

இடத்திற்கு இடம் அல்லது பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபட்டு வழங்குகின்ற பேச்சுமொழியையே பிரதேசக் கிளைமொழி என்பர். டாக்டர் சு. சக்திவேல் போன்றோர் இதனை வட்டாரக் கிளைமொழி என்கின்றனர். இவ்வாறு பிரதேசத்துக்குப் பிரதேசம் மக்களுடைய பேச்சுவழக்கு வேறுபட்டமைவதற்கு அவர்களிடையே நெருங்கிய வெளித்தொடர்பின்மையும் புவியியல்ரீதியாக வித்தியாசமான வாழ்விடங்களுமே காரணிகளாகும்.

அதனடிப்படையில் இந்தியத் தமிழினை

1. வடக்குக் கிளைமொழி -
   சென்னை,செங்கல்பட்டு, ஆர்க்காடு மாவட்டங்கள்
2. மத்திய கிளைமொழி -
   திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங்கள்
3. மேற்குக் கிளைமொழி -
   கோயம்புத்தூர், சேலம், நீலகிரி, திண்டுக்கல், ஈரோடு மாவட்டங்கள்
4. தெற்குக் கிளைமொழி -
   திருநெல்வேலி, இராமநாதபுரம், கன்னியாகுமரி மாவட்டங்கள்
   என வகுத்து நோக்கலாம்.

இலங்கைத் தமிழினை

1. வடக்குக் கிளைமொழி -
   யாழ்., வன்னிப் பிரதேசங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. வடகிழக்குக் கிளைமொழி - திருகோணமலை மாவட்டம்
3. கிழக்குக் கிளைமொழி - மட்டு.,அம்பாறை மாவட்டங்கள்
4. மத்திய கிளைமொழி - மலையகப் பிரதேசங்கள்
5. தெற்குக் கிளைமொழி -

மேற் தவிர்ந்த ஏனைய பிரதேசங்கள் என வகுத்து நோக்கலாம்.

இலங்கையை இந்தியாவுடன் ஒப்பிடும்போது, அது சிறிய பரப்பினைக் கொண்டதாகக் காணப்பட்டாலும், இங்கும் தமிழகத்தைப்போல தமிழ்மொழியானது இடத்துக்கிடம் வேறுபடுவதை நிறையவே அவதானிக்கலாம்.

யாழ். வன்னிப் பிரதேசங்களில் வாழ்கின்ற மக்கள் ஒருவகையாகவும், திருமலைப் பிரதேச மக்கள் இன்னொரு வகையாகவும், மட்டு. அம்பாறை மக்கள் பிறிதொரு வகையாகவும், மலையக மக்கள் மற்றொரு வகையாகவும், நாட்டின் ஏனைய பாகத்தினர் மேலுமொரு வகையாகவும் பேசுவதை நாடளாவிய ரீதியில் அவதானிக்கலாம்.

ஒரு மொழியை எல்லோருமே ஒரே விதமாகப் பேசுவதில்லை. எவ்வாறு ஒரு மொழியை எல்லோரும் ஒரே மாதிரி எழுதாமல் வித்தியாசமாகக் சுழித்து, வளைத்து எழுதுகிறார்களோ, தேபோன்றே வித்தியாசமாகப் பேசுகின்றனர். இவ்வாறு பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபட்டுப் பேசுவதை பிரதேசக் கிளைமொழி எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.5 சமூகக் கிளைமொழிகள்

ஒரு மொழியானது பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபடுவதைப் போலவே சமூகத்திற்குச் சமூகம் வேறுபடுகின்றது. ஒவ்வொரு சமூகமும் தமது சமய, பண்பாட்டுத் தனித்தன்மைகளைப் பேண முற்படும்போது மொழியில் இம்மாற்றம் தோன்றுகிறது. இந்துக்கள் பேசுவதைப்போல இஸ்லாமியர் பேசுவதில்லை. இந்துக்களிலும் பிராமணரின் பேச்சுவழக்கு, பிற சமூகத்தவர்களிலிருந்து வேறுபட்டு நிற்கின்றது. இவ்வாறான வேறுபாடுகளைச் சமூகரீதியாக நோக்கும்போது அவற்றைச் சமூகக் கிளைமொழிகள் என்கின்றனர். சமூகக்கிளைமொழிகளில் ஒவ்வொரு சமூகத்தினதும் சமய, பண்பாட்டு, சடங்குகள் சார்ந்த சொற்கள் முக்கியத்துவம் பெற்றுக்காணப்படுகின்றன. அதனையொட்டிப் பேச்சுமொழி அமையும்போது அவ்வச் சமூகத்திற்குரிய சிறப்புச் சொற்களை அடையாளம் காணலாம். பிரதான சமூகக் கிளைமொழிகளாகப் பிராமணர் தமிழையும் இஸ்லாமியர் தமிழையும் குறிப்பிடலாம். இவை தவிர, ஹரிஜனர் (தாழ்த்தப்பட்ட மக்கள்) தமிழ், மலையகத் தமிழ் போன்ற சமூகக்கிளைமொழிகளும் காணப்படுகின்றன.

வெவ்வேறு தொழிற்துறைகளில் பணிபுரிகின்ற மக்கள் பேசுகின்ற தொழிற்துறைப் பேச்சுவழக்கும் சமூகக் கிளைமொழிகளுள் ஒன்றாகக் கருதப்படக் கூடியதே. தொழிற்துறைகளைப் பொறுத்தளவில் மீனவர் சமூகம், விவசாய சமூகம் போன்ற சமூகத்தினர் தமக்கெனத் தனித்துவமான பேச்சுவழக்கையும் பேச்சுவழக்குச் சொற்களையும் பயன்படுத்துகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.5 பொதுக்கிளைமொழி

இடத்திற்கு இடம், சமூகத்திற்குச் சமூகம் மொழி வழக்குகள் வேறுபட்டுக் காணப்பட்டாலும், பிரதேச, சமூக வேறுபாடுகளின்றி பேசுகின்ற எல்லோராலும் பயன்படுத்தப்படுகின்ற மொழிவழக்கும் உண்டு. அம்மொழி வழக்கைப் பொதுவாக மொழியியலாளர்கள் பொதுப் பேச்சுமொழி அல்லது பொதுக் கிளைமொழி அல்லது தராதர மொழி என்றழைப்பர். தமிழ்மொழியைப் பொறுத்தவரை இத்தகையதொரு பொதுப் பேச்சுமொழி தமிழில் திட்டவட்டமாக வளர்ச்சியடைந்திருக்கிறது எனக் கூற முடியாது என்று சிலர் வாதிடுவர். ஆயினும் பிரசங்கங்கள், விரிவுரைகள், கருத்தரங்குகள் போன்றவற்றின்போது இப்பொதுப் பேச்சுமொழியை அநேகமானோர் பயன்படுத்த முயல்வதையும் பயன்படுத்துவதையும் நிதர்சனமாகக் காணக்கூடியதாக உள்ளது. இப்பொதுப் பேச்சுமொழி வழக்கு ஏறத்தாழ எழுத்துத்தமிழ் அல்லது இலக்கியத்தமிழை அடிபொட்டியதாகவே காணப்படும். அதனால், எழுத்துத்தமிழ் அல்லது இலக்கியத் தமிழே பிரதேச, சமூக வேறுபாடுகள் மிகவும் குறைந்தவொரு பொதுவான மொழிவழக்காகக் காணப்படுகின்றது என்பர் சிலர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீனத் தமிழ்

## 5.1 நவீனம் – நவீனத்துவம் – நவீனமயமாக்கம்

பழையன கழித்து புதியன புகுத்தும் முயற்சியால் விளையும் அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டு அம்சங்கள் முதலானவற்றின் வளர்ச்சி நிலையைச் சுட்டி நிற்பதே நவீனத்தன்மை ஆகும். அதாவது, காலங்காலமாகப் பேணிவரும் பழைமையிலிருந்து விடுபட்டுப் புதுமையை நாடிநிற்றல் அல்லது புதுமையை நோக்கிப் பயணித்தல் நவீனத்தன்மை என வரையறுக்கப்படுகிறது. இந்நவீனத்தன்மை தொடர்பான வரையறைகளை அடிப்படையாகக் கொண்டே தமிழில் நவீன இலக்கியங்களின் தோற்றத்தைக் கருத்திற் கொள்ள வேண்டியிருக்கிறது.

பதினேழாம், பதினெட்டாம் நூற்றாண்டுகளில் ஐரோப்பியரின் எழுச்சியினால் விளைந்த முதலாளித்துவச் சமூக அமைப்பின் தோற்றத்தோடுதான் நவீனத்துவம் தொடர்பான கருத்தியல்களும் தமிழில் தோற்றம் பெற்றன. இவை பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதிகளில் கீழைத்தேய நாடுகளை - குறிப்பாக இந்தியா, இலங்கை போன்ற நாடுகளைப் பாதித்தன. முதலாளித்துவ சமூக அமைப்புத் தோன்றியபோது, பாரம்பரிய நிலப்பிரபுத்துவ நிறுவனங்களின் அமைப்பிலிருந்து பெரிதும் வேறுபட்ட வகையில் அரசியல் - சமூக – பொருளாதார - பண்பாட்டம்சங்களில் நிகழ்ந்த மாற்றங்கள், அறிவியல் எழுச்சி, தனிமனித சுதந்திரம், ஜனநாயக அரசியல், மக்களிடையே சமத்துவம், யாவருக்கும் (குறிப்பாக பெண்களுக்கு) சமவுரிமை, பொதுமக்கள் சார்பான இலக்கியங்கள், நவீன கலை இலக்கிய வடிவங்களின் தோற்றம் முதலிய நவீனத்துவம் சார்ந்த அம்சங்களை உருவாக்கின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐரோப்பியரின் எழுச்சியினால் விளைந்த முதலாளித்துவச் சமூக அமைப்பு இயல் நிகழ்வானது. இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் இயல்பாகவோ, முழுமையாகவோ வளர்ச்சியடையாத முதலாளித்துவ சமூக அமைப்பு, ஐரோப்பிய ஏகாதிபத்தியத்தின் விளைவாகத் திணிக்கப்பட்டது. அதனால், நிலப்பிரபுத்துவ சமுதாய அமைப்பின் நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறைகளும் பண்பாட்டம்சங்களும் கீழைத்தேயங்களில் நிலைபெற்றிருந்தன. இதனால், நவீனத்துவம் பல சிக்கல்களையும் உள்வாங்கிக் கொண்டே தன்னை நிலைநிறுத்திக் கொண்டது. இவற்றால் விளைந்த சமநிலையற்ற தன்மையையும் முரண்பாடுகளையும் உள்வாங்கிக் கொண்டே தமிழில் நவீன இலக்கியங்களின் தோற்றம் நிகழ்கிறது. தமிழ்மொழிசார்ந்த படைப்புக்களையும் இயங்குநிலையையும் மேற்குறித்த நவீனத்தன்மையுடன் பொருந்தப் பார்க்கவேண்டியமை கவனத்திற்குரியது.

## 5.௨ தமிழ்மொழி வரலாறு

ஒவ்வொரு மொழியும் தனக்கெனத் தனித்துவமான வரலாற்றை உடையது. அவ்வகையில் தனித்துவமான மிக நீண்ட வரலாற்றையுடைய பல மொழிகள் உள்ளன. அவற்றுள் கிரேக்கம், லத்தீன், அறபு, உருது, பாரசீக மொழிகள் குறிப்பிடத்தக்கவை. அவ்வாறான மொழிகளுள் தமிழ்மொழியும் ஒன்று. தமிழ் மொழி பன்னெடுங்காலமாக வளர்சியடைந்து செழுமையுற்றுக் கொண்டிருக்கிறது. அதற்கு தமிழ் மொழியின் இலக்கண - இலக்கிய வளம் சான்றாகிறது. அவ்வடிப்படையில் நின்று, தமிழ்மொழியின் வரலாற்றையும் அதனை அறிந்து கொள்ள உதவும் சான்றுகளையும் நோக்குவது சிறப்புடையதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு', 'எழுத்தறிவித்தவன் இறைவனாவான்' முதலியன மொழியின் தோற்றம் குறித்து வழங்கப்பட்டுவரும் மரபார்ந்த கூற்றுக்களாகும். இவற்றை அடிப்படையாகக் கொண்டு 'கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்த தமிழ்' என மொழிப்பெருமைவாதிகள் மொழிப் பழைமை வாதம் பேசினாலும் தமிழ்மொழியின் பழைமையை உணர்த்த தர்க்கரீதியான, அறிவியல்சார்ந்த சான்றுகளைக் கூறவேண்டியிருக்கிறது.

தமிழ்மொழி அதன் வரலாற்றுப் பெருமையால் இன்று செம்மொழி அந்தஸ்தைப் பெற்றிருக்கிறது. அதற்காகப் பலரும் பல வழிகளிலும் ஆய்வுகளைச் செய்து பணியாற்றியுள்ளனர். அவர்களது சான்றுகளைச் சார்ந்து சில விடயங்களை நோக்குவது சிறப்பானதாகும்.

ஒரு மொழியின் தோற்றம், வளர்ச்சி முதலானவற்றை காலவரன்முறை அடிப்படையில் நோக்கி விளக்கியுரைப்பது மொழி வரலாறாகும். அவ்வழி, தமிழ்மொழியின் தோற்றம், வளர்ச்சி முதலானவற்றை கால ஒழுங்கில் நோக்கியுரைப்பது தமிழ்மொழி வரலாறாகும். மொழி வரலாற்றை பேச்சுமொழி, எழுத்துமொழி(வரிவடிவம்) என இரு நிலைகளிலும் நோக்குதல் வேண்டும். இது தமிழ்மொழிக்கும் பொருந்தும்.

தமிழ்மொழி வரலாற்றை அறிந்து கொள்வதற்கான சான்றுகளாகக் கீழ்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

### அ) தமிழிற் தோன்றியுள்ள (செந்தமிழ்) இலக்கியங்கள்

தமிழில் இன்றும் கிடைக்கக் கூடியதாக இருக்கும் ஆரம்பகால இலக்கியங்கள் சங்ககால இலக்கியங்களே. அவற்றைச் செந்தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியங்கள் என்பர், சான்றோர். சங்க இலக்கியங்களுள் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்கள் குறிப்பிடத்தக்கன. இவை செம்மையானவை. வரிவடிவத்தைக் கொண்டவை. ஆகையால் இவற்றுக்கு முன்னரே தமிழில் வாய்மொழி இலக்கியங்களாகவோ, ஏட்டிலக்கியங்களாகவோ இலக்கியங்கள் எழுந்திருக்கலாம் என்று கருத இடமுண்டு.

சங்க இலக்கியங்களைச் சான்றாகக் கொண்டு தமிழ்மொழியின் தோற்றுவாயை அறியக் கூடியதாகவும் ஆராயக் கூடியதாகவும் உள்ளது. அதற்கு சங்க இலக்கியங்களின் சொல்வழக்குகளும் மொழியமைப்பும் உதவுகின்றன.

தமிழ்மொழியின் தொடர்ந்தேர்ச்சியான வளர்ச்சியைக் கணிப்பதற்கு சங்மருவிய கால பல்லவர்கால இலக்கியங்கள் உதவுகின்றன. அக்காலங்களில் குறிப்பாக எழுத்து, சொல்நிலைகளில் தமிழில் வடமொழிக் கலப்பு இடம்பெற்றமையை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

ஐரோப்பியர் வருகையை அடுத்து தமிழ் இலக்கியங்கள் ஆங்கில, போர்த்துக்கீசிய, ஒல்லாந்து, பிரான்சியச் சொற்களை உள்வாங்கிக் கொண்டு வளர்ச்சிபெற்று வந்துள்ளன.

நடைமுறையில் காலங்காலமாக எழுத்துச் சீர்திருத்தங்கள் இடம்பெற்று வந்துள்ளதனையும் இலக்கியங்கள் வெளிக்காட்டுகின்றன. பல்வேறு காலகட்டங்களிலும் இயற்றப்பட்ட இலக்கியங்களை ஒப்புநோக்கி, அவ்விலக்கியங களில் அமையப்பெற்றிருக்கும் வரிவடிவங்களைக் கணிப்பதன் மூலம் எழுத்துச் சீர்திருத்தங்கள் இடம்பெற்றவாற்றையும் அவற்றின் காலப்பகுதியையும் அறிந்துகொள்ளக்கூடியதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழில் நிறுத்தற் குறிப் பயன்பாட்டின் தோற்றத்தையும் தமிழ் எண் பயன்பாட்டிற்குப் பதிலாக அரேபிய எண் பயன்பட்டின் தோற்றத்தையும் இலக்கியங்கள் வெளிக்காட்டி நிற்கின்றன. மேற்குறித்தவற்றை அடிப்படையாகக் கொண்டு தமிழ்மொழி வரலாற்றினை அறிந்து கொள்ள உதவும் சான்றுகளுள் ஒன்றாக இலக்கியங்களைக் கொள்ளலாம்.

## ஆ) தமிழ்ச் சான்றோர் இயற்றிய இலக்கண நூல்கள்

தமிழில் இன்றும் முழுமையாகக் கிடைக்கக் கூடியதாக இருக்கும் ஆரம்பகால இலக்கண நூல் தொல்காப்பியமாகும். தொல்காப்பியத்திற்கு முன்னரேயே தமிழில் இலக்கண நூல்கள் இருந்தமைக்கான ஆதாரங்கள் தொல்காப்பியத்திலேயே உண்டு. தொல்காப்பியத்தில் கையாளப்பட்டுள்ள என்ப, மொழிப, என்மனார் புலவர் முதலானவற்றை கருத்திற் கொள்ளும்போது அதற்கு முன்னரேயே தமிழ் இலக்கணத்தின் செல்வாக்குக் காணப்பட்டுள்ளதை அறியலாம்.

இலக்கண நூல்கள் மொழியின் அக அமைப்பையும் புற அமைப்பையும் கட்டமைப்பதில் முக்கிய பங்காற்றுகின்றன. காலங்காலமாக வெளிவந்துள்ள இலக்கண நூல்களை ஒப்பிட்டு நோக்குவதன் மூலம் தமிழ்மொழியின் கட்டமைப்பில் காலத்துக்குக் காலம் ஏற்பட்ட மாற்றங்களை இலகுவாக அறியலாம். தொல்காப்பியம் - நன்னூல் எனவரும் தொடர்ச்சியில் இதனை அவதானிக்கலாம். உச்சரிப்பு, சொல்லாக்க நெறிமுறைகள், வாக்கிய அமைப்பு முதலானவற்றில் காலங்காலமாக ஏற்பட்டு வந்துள்ள மாற்றங்களை இவ்விலக்கண நூல்கள் புலப்படுத்துகின்றன. எனவே, இவற்றை அடிப்படையாகக் கொண்டும் தமிழ்மொழி வரலாற்றை அறிந்து கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இ) உரையாசிரியர்களின் உரைகள்

தமிழில் இயற்றப்பெற்ற செந்தமிழ் இலக்கியங்கள், இலக்கணங்கள் முதலானவற்றுக்குப் பிற்பட்ட காலங்களில் பொருளுணர்ந்து கொள்ளுதல் கடினமாக அமைந்தது. ஆகையினால் அவற்றைப் பொருளுணர்ந்து கற்பதற்காகப் பல்வேறு உரையாசிரியர்களினாலும் காலங்காலமாக உரைகள் எழுதப்பட்டு வந்துள்ளன. அவ்வாறு வெவ்வேறு காலங்களிலும் வெவ்வேறு உரையாசிரியர்களினாலும் எழுதப்பட்டு வந்துள்ள உரைகளை ஒப்புநோக்குவதன் மூலமும் தமிழ்மொழி வரலாற்றை அறிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது.

### ஈ) மேலைநாட்டார் எழுதிய இலக்கணங்கள்

ஐரோப்பியர் காலத்தில் சமயப்பிரச்சாரத்திற்காகத் தமிழகம் வந்த போதகர்கள், தாம்சார்ந்தவர்களின் தமிழ்மொழி அறிவுக்காகப் பல இலக்கண நூல்களை இயற்றினர். அவற்றுள் வீரமாமுனிவரின் செந்தமிழ் இலக்கணம், கொடுந்தமிழ் இலக்கணம் ஆகியன குறிப்பிடத்தக்கன. அவரைத்தவிர, சீகன் பால்க், எல்லீஸ், கால்டுவெல் முதலிய அறிஞர்களும் தமது பங்களிப்புக்களைச் செய்துள்ளனர். வீரமாமுனிவரின் கொடுந்தமிழ் இலக்கணம் அக்கால நடைமுறை இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு மேலைநாட்டார் எழுதிய இலக்கண நூல்களும் தமிழ்மொழி வரலாற்றை அறிந்து கொள்ளத் தக்க சான்றுகளாக அமைந்துள்ளன.

### உ) நிகண்டுகள் - அகராதிகள்

தமிழ்மொழி வரலாற்றை அறிந்து கொள்வதற்கான அடிப்படைச் சான்றுகளுள் நிகண்டுகள், அகராதிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியனவும் குறிப்பிடத்தக்கன. தமிழ்மொழி வரலாற்றினை அறிந்துகொள்ள செய்யுட்களால் இயற்றப்பட்ட நிகண்டுகள் பெரிதும் உதவாவிட்டாலும் மேலைத்தேயத் தமிழறிஞர்களால் இயற்றப்பட்ட அகராதிகள் பெரிதும் உதவுகின்றன. வீரமாமுனிவர் உட்படப் பலரும் இயற்றியுள்ள அகராதிகள், சென்னைப் பல்கலைக்கழக தமிழ் சொற்களஞ்சியம், தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக்கழக அகராதி - சொற்களஞ்சியம் - வாழ்வியற் களஞ்சியம் முதலானவை தமிழ்மொழி வரலாற்றை அறிந்துகொள்ளத் தக்க ஆவணங்களாகின்றன.

**ஊ) சாசனங்கள் - கல்வெட்டுக்கள், செப்பேடுகள், சுவடிகள்**

மொழி வரலாற்றினை அறிந்து கொள்ள உதவும் சான்றுகளுள் இலக்கிய, இலக்கணங்களைத் தவிர்த்து மிக முக்கியமான வையாகக் காணப்படுவன கல்வெட்டுக்களும் சாசனங் களுமாகும். ஏட்டிலக்கியங்கள் மிகப்பெரும்பான்மையாக செந்தமிழிலேயே எழுதப்பட்டுள்ளன. ஆனால் கல்வெட்டுக்கள், சாசனங்களில் கொடுந்தமிழ், பேச்சுத்தமிழுக்கு இடமளிக்கப் பட்டுள்ளது. கிறிஸ்துக்கு முந்தியன எனக் கருதப்படும் பல கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. ஏழாம் நூற்றாண்டு முதல் தற்காலம் வரை ஒவ்வொரு நூற்றாண்டுக்குமுரியவை என ஏராளமான கல்வெட்டுக்கள் கிடைக்கின்றன. தமிழின் வரிவடிவில் ஏற்பட்ட மாற்றங்களை அறியவும் இக்கல் வெட்டுக்களே தக்க சான்றுகளாகின்றன. எ-டு: தமிழ்- கிரந்தம்- வட்டெழுத்து- தமிழ் கல்வெட்டுக்கள் சாசனங்களில் சமூக வழக்குச் சொற்களும் பிரதேச வழக்குச் சொற்களும் மிக அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. எ-டு: கோயில் - தேவகுலம் எனப்பட்டது. பிராமணருக்கு வழங்கப்பட்ட நிலம் பிரம்மதேயம் எனப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில கல்வெட்டுக்கள், சாசனங்களில் சில குறிகளின் மூலம் சொற்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. அத்தோடு தமிழில் இடம்பெற்றுள்ள பிறமொழிக் கலப்புக்கள், இலக்கண அமைப்புக்கள் முதலான பல விடயங்களையும் கல்வெட்டுக்கள் வெளிக்காட்டி நிற்கின்றன.

## எ) பிறமொழியாளர்களின் குறிப்புரைகள்

தமிழ்மொழி வரலாற்றை அறிந்துகொள்வதற்கான சான்றுகளுள் பிறமொழியாளர்களின் குறிப்புரைகளும் அடங்குகின்றன. பிறநாட்டறிஞர்களின் கண்ணோட்டத்தில் புதிய மொழியாகிய தமிழ், ஆய்வு நோக்கில் நுணுக்கமாகப் பார்க்கப்பட்டுள்ளது. தமிழைத் திராவிட மொழிக் குடும்பத்துக்குரியதாகக் கண்டு பல ஆய்வுகள் பிறநாட்டறிஞர்களால் மேற்கொள்ளப் பட்டுள்ளன. கால்டுவெலின் 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' குறிப்பிடத்தக்கவொரு நூல். தமிழ்-திராவிட மொழிக்குடும்ப பிறப்புறவு *(Genealogical Relationship)* ஆராயப்பட்டுள்ளது.

எல்லீஸ், காமில் சுவலபில், அந்ரனோவ், கால்டுவெல், ஆஸ்கோ பார்ப்போலா, ஜோர்ஜ் எல். ஹார்ட், அலெக்ஸாண்டர் எம்.துப்யான்ஸ்கி போன்றோர் தமிழ்மொழி குறித்த ஆய்வுகளைக் குறிப்புக்களாகத் தந்துள்ளனர். பெறுமதிமிக்க அவ்வாய்வுகள் தமிழ்மொழி வரலாற்றை அறிந்துகொள்ளும் அறிவியற் சான்றுகளாகவும் அமைந்துள்ளன.

## ஏ) கிளைமொழிகள்

கிளைமொழிகள் ஒரு தாய் மொழியிலிருந்து தோன்றுவன. தமிழின் கிளைமொழிகள் வாயிலாகவும் அம்மொழியில் முன்பு பயன்படுத்தப்பட்ட அடிச்சொற்கள், சொற்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிமாறுதலுக்குள்ளான விதம் முதலான பல விடயங்களை அறியமுடிகிறது.

## 5.3 மொழிவளர்ச்சியும் அதற்குச் சாதகமாக அமையும் காரணிகளும்

மொழி ஒரு தொடர்பாடல் ஊடகம். மனித சமுதாயம் கருத்துப் பரிமாற்றம் செய்யப் பயன்படுத்தும் கருவிகளுள் மிகச் சிறந்தது மொழியாகும். அது மக்கள் ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொண்டு ஒத்துழைத்து வாழ்வதற்கு இன்றியமையாதது. மேலும், அது பேசுவோரது உள்ளத்தில் எழும் எண்ணங்களையும், உணர்ச்சிகளையும் வெளிப்படுத்த உதவுவதோடு; மனித சமுதாயத்தின் சிந்தனை விருத்தியையும், திறனையும் வளர்க்கவும் பயன்படுகிறது. ஆகவே, நாகரீக வளர்ச்சியில் மொழி ஓர் உன்னத இடத்தை வகிக்கின்றது. மனிதர்களிடையே தொடர்புகளேற்படுவதற்கு மொழியே பிரதானமாகிறது. பண்பாட்டு வளர்ச்சியிலும் மொழி ஓர் ஊடகமாகத் திகழ்கிறது. காரணம் மொழியின் வாயிலாகவே சமுதாயத்தின் எல்லாவகையான தொடர்பாடல்களும் ஏதாவது ஒரு வகையில் நிகழ்ந்த வண்ணமிருக்கின்றன. அம்மொழியானது காலத்துக்குக் காலம் வளர்ச்சியடைந்து கொண்டே இருக்கின்றது.

குறிப்பிட்ட காலகட்டத்தில் ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் தொடர்பாடல் தேவைகளுக்கேற்ப அச்சமூகத்தின் மொழிபெறும் இணக்கப்பாடு மொழிவளர்ச்சி எனப்படும். ஒரு குறிப்பிட்ட சமுதாயப்பணியை நிறைவேற்ற மொழிபெற்றுள்ள சொல்வளம், இலக்கண இலக்கிய வளம், மொழிப் பயன்பாட்டில் மொழி வழக்குகளை எளிதாகப் பயன்படுத்தக்கூடிய நிலை முதலானவற்றை மொழிவளர்ச்சி சுட்டி நிற்கிறது. மொழிப்பயன்பாட்டில் மொழிவழக்குகளை எளிதாகவும் தெளிவாகவும் கையாளக்கூடியதாக எந்தமொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளதோ அம்மொழி வளர்ச்சியடைந்த மொழியாகக் கொள்ளப்படும். அம்மொழி குறிப்பிட்ட மொழிச் சமூகமொன்றின் பல்வேறு சமுதாயத் தேவைகளையும் நிறைவேற்றும் வல்லமை பெற்றதாக இருக்கவேண்டும்.

மாறாத எதுவும் வளர்ச்சியடைவதில்லை என்பது நியதி. மொழியும் அதற்கு விதிவிலக்கல்ல. வாழும் மொழிகளெல்லாம் இடையறாது மாற்றத்திற்குள்ளாகின்றன. அதனால் அவை தொடர்ந்து வளர்ச்சியடைகின்றன. மாற்றமும் வளர்ச்சியும் ஒரு நிகழ்வின் இரு பக்கங்களாகும். மொழி ஒரு சமூகக் கருவியாகையால் சமூகத்தில் ஏற்படும் மாற்றங்களையும் வளர்ச்சியையும் அது பிரதிபலிக்கிறது. ஆரம்பகால சமுதாயத்தில் மொழிவளர்ச்சி கருத்திற் கொள்ளப்படா விட்டாலும் சமகால அறிவியல் தொழிநுட்ப உலகில் முக்கியத்துவம் பெற்றவொன்றாகக் காணப்படுகிறது.

மொழித்தூய்மைவாதிகள் மொழிமாற்றத்தையோ மொழிவளர்ச்சியையோ எளிதில் அங்கீகரிப்பதில்லை. சாதாரணமாக எந்த மக்கள் கூட்டமும் வளர்க்கும் நோக்கில் மொழியைப் பயன்படுத்துவதில்லை. மொழியைப் பல்வேறு நிலைகளிலும் பயன்படுத்தும்போது அது தானாகவே இயைபடைந்து வளர்கிறது. பழையன கழிதலும் புதியன புகுதலும் மொழிவளர்ச்சியின் போது நடைபெறுகின்றன.

வளர்ச்சியடைந்த மொழி மாற்றங்களுக்கேற்ப வளைந்து கொடுக்கக்கூடிய திறன்மிக்கதாகவும் அம்மொழியைப் பயன்படுத்துவோர் எவ்வித இடர்பாடுமின்றி பயன்படுத்தக் கூடியதாகவும் கல்வித்துறை, ஆட்சித்துறை முதலான துறைகளில் நிலைபெறும் வகையிலும் இருத்தல் வேண்டும். பல்வேறு விடயங்கள் மொழி வளர்ச்சிக்குத் துணைநிற்கும் காரணிகளாக விளங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்டவொரு மொழி மக்களின் பேச்சுமொழியாகவும் பயன்பாட்டு மொழியாகவும் இருக்கும்போது அம்மொழி வளர்ச்சி பெறுவதற்கான வாய்ப்புக் கிடைக்கிறது. ஏனெனில் வளர்ச்சியென்பது ஒரு செயற்பின்னணியிலேயே நிகழ்கிறது. ஆக வளர்ச்சியடையும் ஒரு மொழி பேச்சிலும் எழுத்திலும் பயன்பாட்டில் இருத்தல் அவசியமாகும். தமிழ், ஆங்கிலம், அறபு முதலான மொழிகள் உலகில் அதிகம் பேசப்படுவதனாலேயே அவை நன்கு வளர்ச்சியடைந்த மொழிகளாக விங்குகின்றன. பாளி, சமஸ்கிருதம் போன்ற மொழிகள் தற்காலத்தில் பேச்சு வழக்கில் முற்றாக செயலிழந்து பயன்பாட்டிலும் பெரிதும் வழக்கிறந்ததனால் வளர்ச்சி தடைப்பட்ட மொழிகளாக விளங்குகின்றன.

மேலும், மக்களின் பயன்பாட்டு மொழி என்னும்போது அன்றாட வாழ்க்கையில் அனைத்துத் துறைகளிலும் அம்மொழி பயன்படுத்தப்படுவதாக இருத்தல் வேண்டும். அதாவது, ஒரு மொழி ஒரு நாட்டின் ஆட்சிமொழியாக அல்லது அரசகரும மொழியாக இருக்கவேண்டும். அம்மொழி கல்வித் துறையில் பயன்படுத்தப்படும் மொழியாக இருத்தல் வேண்டும். அத்தோடு தகவல் தொழிநுட்பத் துறையில் பயன்படுத்தப்படும் மொழியாக இருத்தல் வேண்டும். மற்றும் தொழிற்துறைகளில் பயன்படுத்தப்படும் மொழியாகவும் இருத்தல் வேண்டும். அவற்றோடு, அம்மொழி பல்வேறு பண்பாட்டுப் பாவனை உள்ளதாகவும் இருத்தல் வேண்டும். அப்போதுதான் அம்மொழி வளர்ச்சியடைவதற்கான சாதகம் வாய்க்கிறது.

மொழிவழிச் சமூகமொன்றில் காலந்தோறும் ஏற்படும் சமூக மாற்றமும் வளர்ச்சியும், குறிப்பிட்ட மொழிபேசும் மக்களின் சிந்தனை வளர்ச்சியும் ஒரு மொழி வளர்ச்சிக்குச் சாதகமாக அமைந்து விடுகின்றன. மாற்றத்தையும் வளர்ச்சியையும் சுட்டும் நடத்தைகளுக்கான மொழிப்பயன்பாட்டின் வளர்ச்சியே இங்கு மொழிவளர்ச்சியாகி விடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிப்பற்று, மொழியுணர்வு, மொழிப்பெருமைவாதம், மொழித்தூய்மைவாதம் போன்றவற்றினூடாகத் தோற்றம்பெறும் மனநிலை மாற்றம் மொழிவளர்ச்சிக்குச் சாதகமான காரணமாகிவிடுகிறது. ஏனெனில் மொழிப்பற்று, மொழியுணர்வு முதலானவை எப்போதுமே மொழி வளர்ச்சிக்குத் துணைநிற்கும் காரணிகளாக விளங்குகின்றன. குறிப்பிட்ட மொழியொன்றில் மொழிப்பற்றும் மொழியுணர்வும் மொழிப் பெருமைவாதத்தையும் மொழித் தூய்மைவாதத்தையும் உருவாக்கிவிட, அம்மொழிபேசுவோர் திட்டமிட்ட அடிப்படையில் மொழிவளர்ச்சிக் கூறுகளில் அக்கறை செலுத்துகின்றனர். எடுத்துக்காட்டாக, பிறமொழிக் கலப்பைக் கட்டுப்படுத்தி புதிய சொல்லாக்க முயற்சிகளில் ஈடுபடுவதைக் குறிப்பிடலாம்.

பிறமொழிக்கலப்பைக் கட்டுப்படுத்த, கடன் சொற்களைத் தவிர்த்து, கலைச்சொல்லாக்க முயற்சிகளில் ஈடுபடுகின்றனர். மொழிவளர்ச்சி குறிப்பிட்ட மொழிபேசுவோரின் ஊக்கத்திலும் தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. குறிப்பிட்ட மொழியின் இலக்கண, இலக்கிய வளம் இந்த ஊக்கத்தை மேம்படுத்துகிறது. மொழிபெயர்ப்பு முயற்சிகளும் மொழிவளர்ச்சிக்குச் சாதகமாக அமைகின்றன. சிறப்புற்றிருக்கும் ஒரு மொழியிற் சிறந்து விளங்கும் பொருட்பரப்புக்களை மொழிபெயர்க்கும்போது இலக்குமொழி மூலமொழியின் உருவ, உள்ளடக்கச் சிந்தனைகளை உள்வாங்கி வளம்பெற வாய்ப்புக் கிடைக்கிறது. ஆகவே, மொழிபெயர்ப்பு முயற்சிகளும் மொழிவளர்ச்சிக்குத் துணைநிற்கின்றன.

இவ்வாறு பல்வேறு விடயங்கள் மொழிவளர்ச்சிக்குச் சாதகமாக அமைகின்றன / துணைநிற்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5.4 மொழிமாற்றம்

ஒலி, ஒலியன், உருபன் முதலானவை ஒரு மொழியிலிருந்து இன்னொரு மொழியில் வந்து கலத்தல் மொழிக்கலப்பு எனப்படும். இம்மொழிக்கலப்பு மொழித் தொடர்பினாலேயே நிகழ்கிறது. இம்மொழிக்கலப்பு மொழிமாற்றத்திற்கு வழிவகுக்கிறது. ஆகவே, மொழித்தொடர்பினால் ஏற்படும் மொழிக்கலப்பின் விளைவாக ஒரு மொழியில் ஏற்படும் மொழிரீதியான மாற்றம் மொழிமாற்றம் எனப்படும். கல்வி, வர்த்தகம், சமயம், தகவல் தொழிநுட்ப வளர்ச்சி முதலானவை மொழித் தொடர்பிற்கான காரணங்களாகின்றன. இம்மொழித் தொடர்பினை, நேரடித் தொடர்பு, மறைமுகத் தொடர்பு என இரு வகையாக நோக்கலாம். தற்காலத்தில் மொழித் தொடர்பிற்கான வாய்ப்புக்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. மொழித் தொடர்பினால் ஏற்படும் மொழிக்கலப்பு மொழிமாற்றத்திற்கு வழிவகுக்கிறது. பெரும்பாலும் கடன்வாங்குவதனூடாகவே மொழிமாற்றம் நிகழ்கிறது. மொழிமாற்றத்தில் கடன் சொற்களே அதிக பங்கினை வகிக்கின்றன.

## 5.5 மொழித்தூய்மைவாதம்

மொழித்தொடர்பு, அதனாலேற்படும் மொழிக்கலப்பு, அது ஏற்படுத்தும் மொழிமாற்றம் என்பனவற்றின் அடிப்படையிலேயே மொழித்தூய்மை நோக்கத்தக்கது. முழுமையாக எவ்வித வெளித்தொடர்பும் அற்ற ஒரு சமூகத்தில் மட்டுமே மொழித்தூய்மை குறித்து பிரஸ்தாபிக்க முடியும். ஆனால், அவ்வாறானதொரு சமூகத்தைத் தற்காலத்தில் காண்பதரிது அல்லது காண முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழி வளர்ச்சி நடவடிக்கைகளில், பிறமொழிக் கூறுகளை விலக்கி, தாய்மொழிக் கூறுகளை மட்டும் பயன்படுத்து வதையே மொழித்தூய்மை என்ற சொற்றொடர் குறித்து நிற்கிறது. இதற்காதரவாக முன்வைக்கப்படும் கருத்துக்களை மொழித்தூய்மைவாதம் என்பர். மொழித்தூய்மைவாதம் மொழிக்கலப்பிற்கு எதிரானது. அல்லது இரண்டும் நேரெதிரானவை. மொழிவளர்ச்சி நடவடிக்கைகளில் பிறமொழிக் கூறுகளைத் தவிர்த்து தாய்மொழிக் கூறுகளை மட்டும் பயன்படுத்தும் கோட்பாடு மொழித்தூய்மைவாதம் எனப்படுகிறது. இதனை வலியுறுத்துவோர் மொழித்தூய்மை வாதிகள் எனப்படுகின்றனர். எல்லா மொழிகளிலும் மொழித்தூய்மைவாதம் வலியுறுத்தப்படுவதில்லை. மொழித்தூய்மைவாதம் வலியுறுத்தப்படுவதற்கு சில நிபந்தனைகள் காணப்படல் வேண்டும்.

## 5.6 தமிழில் கலைச்சொற்கள்

நவீன தொடர்பாடற் தேவைகளுக்கமைவாக நவீன தமிழ்ச் சமுதாயத்தின் தேவைகள் அதிகரித்துள்ளன. புதிய மொழிநடையை விருத்தி செய்தல், மொழியை எளிமையாக்கல், நவீன தமிழ் உரைநடையை விருத்தி செய்தல், தமிழ்ச் சொற்களஞ்சியத்தை விருத்தி செய்தல் முதலானவை சில குறிப்பிடத்தக்க தேவைகளாகும். இவற்றுள், தமிழ்ச் சொற்களஞ்சியத்தை விருத்திசெய்தலென்பது கலைச்சொல்லாக்கம் குறித்த தேவையை வலியுறுத்தி நிற்கிறது. கலைச்சொல்லாக்கமானது திட்டமிட்ட மொழிவளர்ச்சி நடவடிக்கைகளின் ஓர் அம்சமாகக் காணப்படுகிறது.

ஒரு மொழியில் இல்லாத சொல்லுக்கு வேற்றுமொழியிலிருந்து நேரடியாகச் சொற்களைப் பெற்றோ, ஒலிபெயர்த்தோ அல்லது மொழிபெயர்த்தோ புதிய சொற்களை ஆக்கிக்கொள்வது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைச்சொல்லாக்கம் எனப்படும். இவ்வாறு ஆக்கப்படும் துறைசார்ந்த சிறப்புவழக்குச் சொற்களே கலைச்சொற்கள் எனப்படுகின்றன.

எடுத்துக்காட்டு: வேற்றுமை - வேறுபாடு, வித்தியாசம் *(Different)* – பொது வழக்கு

வேற்றுமை - இலக்கணத்தில் சொல்லின் பொருளை வேறுபடுத்தும் உருபுகள் ஐ, ஆல், கு, இன் போன்றன - சிறப்பு வழக்கு

தமிழில் சில சொற்கள் பொதுச்சொற்களாகவும் கலைச்சொற்களாகவும் பயன்படுகின்றன. பல சொற்கள் தனிக்கலைச்சொற்களாகப் பயன்படுகின்றன. *Internet* - இணையம், *Telephone* – தொலைபேசி, *Technology* – தொழிநுட்பவியல் முதலானவற்றைத் தனிக்கலைச்சொற்களுக்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

தமிழில் கலைச்சொல்லாக்கம் என்பது மிகப் பழைமை வாய்ந்தது. தொல்காப்பியர் காலத்திலிருந்தே கலைச்சொற்கள் வழக்கிலுள்ளன. திணை, பால், எண், இடம், இருத்தல், இரங்கல், முல்லை, குறிஞ்சி முதலானவை சங்காலக் கலைச்சொற்களே. ஆரம்பத்தில் தம்மால் சொற்களை ஆக்கிக்கொள்ள முடியாதவிடத்து பிராகிருதம், பாளி, சமஸ்கிருதம் போன்ற மொழிகளிலிருந்து சொற்களைக் கடன்பெற்றோ மொழிபெயர்த்தோ வழங்கினர். இதற்கென விதிகளும் வகுக்கப்பட்டிருந்தன. எடுத்துக்காட்டாக நன்னூலில் சமஸ்கிருதச் சொல்லைத் தமிழ்ப்படுத்தவென விதிகள் வகுக்கப்பட்டுள்ளன. அவ்விதிகளின்படியே அக்காலத்தில் சொற்கள் வழங்கப்பெற்றன. புஷ்ப் - புட்பம், ஜல - சலம், கர்ம – கருமம் முதலானவை அவ்விதிகளின்படி அமைந்தவையே. அவற்றினடிப்படையிலேயே பிற்காலத்தில் ஆங்கில மொழிச் சொற்கள் முதலானவையும் *London* -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலண்டன், *Rubber* - இறப்பர், *Docter* - இதாக்குத்தர், *Bottle* – போத்தல் எனத் தமிழ்ப்படுத்தப்பட்டன.

19ஆம் நூற்றாண்டு முதல் புதிய துறைசார்ந்த சிறப்புவழக்குச் சொற்களின் தேவை அதிகரிக்கிறது. ஐரோப்பிய மொழிச்சொற்கள் ஏராளமாகத் தமிழில் பயன்படுத்தப்படத் தொடங்கியதும் கலைச்சொல்லாக்கத்தில் பல்வேறு சிக்கல்கள் எழுந்தன. தமிழ்ப் பயன்பாட்டிற்குத் தேவையான பல்வேறு ஐரோப்பிய மொழிச் சொற்கள் பல்வேறு தரப்பினராலும் பல்வேறு முறைகளில் கையாளப்பட்டன. இதனால் ஒரே ஐரோப்பியச் சொல்லுக்குப் பல தமிழ்ச் சொற்கள் பயன்படத் தொடங்கின.

*Hydrogen* என்பது ஐதரசன், ஹைட்ரஜன், ஹைதரசன் எனவும் *Oxygen* என்பது ஒக்சிஜன், ஒட்சிசன், ஆக்சிஜன் எனவும் எழுதப்பட்டன.

முறையானவொரு எழுத்துப்பெயர்ப்பு அல்லது ஒலிபெயர்ப்பு இன்மையால் இவ்வாறு பலரும் பலவகையில் எழுத முற்பட்டனர். இவை குழப்பத்தையும் ஏற்படுத்தின. பல சொற்களை உள்ளவாறே எழுத்துப்பெயர்ப்பு அல்லது ஒலிபெயர்ப்புச் செய்யமுற்பட்டபோது சில ஒலிகளுக்குத் தமிழில் வரிவடிமில்லாமையும் சிக்கலைத் தோற்றுவித்தது. $CO_2$, $H_2O$ முதலான மொழிசாராக் கூறுகளைத் தமிழ்ப்படுத்துவதா? இல்லையா? என்பதிலும் *HIV, ICRC, NASA* முதலான தலைப்பெழுத்துச் சொற்களைக் சுருக்கக் குறியீடுகளாகப் பயன்படுத்தும்போது என்ன செய்வது? என்பதிலும் தெளிவில்லை.

அதன் விளைவால், தமிழ்க் கலைச்சொல்லாக்க முயற்சிகளில் இலங்கையர் அதிக அக்கறை கொண்டனர். அறிவியலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையமாகக் கொண்ட பலமொழிபெயர்ப்பு நூல்கள் இக்காலத்தில் இலங்கையில் வெளிவந்தன. அம்மொழி பெயர்ப்புக்களில் ஐரோப்பிய மொழிச்சொற்கள் பல நேர்த்தியான முறையில் தமிழாக்கஞ் செய்யப்பட்டன. தொடர்ச்சியாக, 1848இல் சாமுவேல் ஃபிஷ் க்றீன் என்ற அமெரிக்கரும் இலங்கையில் இருந்துகொண்டு முதன்முதலில் கலைச்சொல்லாக்க முயற்சிகளில் ஈடுபட்டார். அவர் முயற்சியால் தமிழில் பல அறிவியல் நூல்கள் எழுதப்பட்டன. பல கலைச்சொல் தொகுதிகள் வெளியிடப்பட்டன. அதனால், இலங்கை அறிவியற் தமிழின் தாயகம் எனத் தமிழறிஞர்களால் அழைக்கப்பட்டது. அவர்,

அ) முதலில் தமிழில் தேட வேண்டும். அதில் இல்லாவிட்டால்
ஆ) வடமொழியில் தேட வேண்டும். அதிலும் இல்லாவிட்டால்
இ) ஆங்கிலமொழியில் தேட வேண்டும்.

என கலைச்சொல்லாக்க விதிமுறைகளையும் வகுத்திருந்தார். இதனையே இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் பாரதியாரும் குறிப்பிட்டார். தொடர்ந்து தனியார் முயற்சிகளாகப் பல கலைச்சொல் பட்டியல்கள் வெளியாகிக் கொண்டிருந்தன. இந்நிலையில் சென்னை மாநில அரசு கலைச்சொல் குழுவொன்றை அமைத்தது. பொறியியலாளரான பா.வே.மாணிக்க நாயக்கர் குழு உறுப்பினராக இருந்து கலைச்சொல்லாக்கத்தில் ஈடுபட்டார். ஏறத்தாள இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட கலைச்சொற்களை உரிய விளக்கங்களுடன் வெளியிட்டார். அநேகமான சொற்கள் தமிழில் இருந்து பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இம்முயற்சியை அடுத்துத் தொடர்ச்சியாகப் பல குழுக்கள் அமைக்கப்பட்டன.

1930இல் சட்டச்சொல் அகராதிக் குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 1932இல் | கலைச்சொல் குழு |
| 1940இல் | சீனிவாச சாஸ்திரி குழு |
| 1959இல் | கல்லூரித் தமிழ்க்குழு |
| 1965இல் | சட்டநூல் மொழிபெயர்ப்புக் குழு |

எனத் தமிழகத்தில் பல குழுக்கள் அமைக்கப்பட்டன. இலங்கையிலும் 1950இல் ஏறத்தாள ஐம்பது கலைச்சொற் பட்டியல்கள் வெளியிடப்பட்டன.

1982 முதல் தஞ்சாவூர்த் தமிழ்ப்பல்கலைக்கழகம் கலைச்சொல்லாக்க முயற்சியில் ஈடுபட்டு வருகிறது. இலங்கையிலும் 1999 முதல் தேசிய கலை இலக்கியப் பேரவையின் அனுசரணையோடு முழுமையான அளவில் கலைச்சொல்லாக்க முயற்சி தொடங்கப்பட்டது.

வட சொற்கள் அதிகமாக இருந்தமையாலும் அதனை அடுத்து ஆங்கிலச் சொற்கள் அதிகமாக இருந்தமையாலும் 1932இல் வெளிவந்த கலைச்சொல் பட்டியலுக்குத் தமிழகத்தில் கடுமையான எதிர்ப்புக்கிளம்பியது. அதன்விளைவாகச் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் 1934இல் கலைச்சொல்லாக்கக் கருத்தரங்கொன்றை நடத்தியது. தொடர்ச்சியாக நடந்த பல கூட்டங்களைத் தொடர்ந்து 1936இல் கலைச்சொற் பட்டியலொன்று வெளியிடப்பட்டது. அதில் 5300 சொற்கள் இருந்தன. இராஜாஜியின் முழு ஆதரவோடு சுவாமி விபுலானந்தர் தலைமையில் மீண்டும் அது திருத்தப்பட்டு 10000 சொற்களைக் கொண்ட பட்டியலொன்று 1938இல் வெளியிடப்பட்டது. இப்பட்டியலில் கிரந்த எழுத்துக்கள் தவிர்க்கப்பட்டு தமிழ்ச் சொற்களே அதிகம் சேர்க்கப்பட்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைச்சொல்லாக்க முயற்சிகள் முனைப்போடு இடம்பெற்ற அக்காலப்பகுதியில் கலைச்சொல்லாக்க நெறிமுறைகள் குறித்து பலரும் எழுதத் தொடங்கியிருந்தனர். இவ்வாறு எழுதியோருள் பா.வே. மாணிக்க நாயக்கர், கா.சுப்பிரமணியபிள்ளை, ஔவை துரைசாமிப்பிள்ளை ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். கலைச்சொல்லாக்க நெறிமுறைகள் குறித்து எழுதிய பலரும் கலைச்சொற்கள் தமிழ்ச் சொற்களாவே இருக்கவேண்டும் என்பதிலும் வடசொற்கள் தவிர்க்கப்பட வேண்டும் என்பதிலும் உடன்பட்டிருந்தனர். தமிழில் சொல்லில்லாதபோது ஆங்கிலத்தைத் தமிழ்ப்படுத்திக் கொள்ளலாம் என்ற அவர்கள், கிறீக், லத்தீன் முதலான மொழிகளிலுள்ள மூலச்சொற்களின் வேர்ப்பொருளை அறிந்து சொற்கள் உருவாக்கப்பட வேண்டும் என்றனர்.

மேற்குறித்த காலப்பகுதி தனித்தமிழ் இயக்கம் உருக்கொண்ட காலப்பகுதியாகும். தனித்தமிழ் இயக்கம் கலைச்சொல்லாக்க விதிமுறைகள் குறித்து பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது.

அ) தமிழ்க்கூறுகளை மட்டும் பயன்படுத்த வேண்டும்.

ஆ) இயற்பெயர்களை (ஊர்ப்பெயர்கள்-ஆட்பெயர்கள்) தமிழ்ப்படுத்த வேண்டும்.

இன்றைய தொடர்பாடற்துறையின் அபரிமிதமான வளர்ச்சி, முனைப்புடனான கலைச்சொல்லாக்கத்தின் தேவையை உணர்த்தி நிற்கிறது. கலைச்சொல்லாக்கத்தின் அடிப்படைகளையும் நெறிமுறைகளையும் தெளிவாகப் புரிந்து கொள்ளாத பலர் மனம்போன போக்கில் சொற்களை ஆக்கிக் கொள்வது கவலையளிக்கிறது. கலைச்சொல்லாக்கத்தை வசதியாக்கிக் கொள்ள மேல்வரும் விதிகள் சிலவற்றைக் கடைப்பிடித்தொழுக முனையலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. கலைச்சொற்கள் சுருக்கமானவையாகவும் பொருட்செறிவும் ஆழமும் கொண்டனவாகவும் அமைய வேண்டும். நாளடைவில் அவை தமிழோடு தமிழாகக் கலக்கும் பண்புடையனவாகவும் இருக்கவேண்டும்.

2. கலைச்சொற்கள் வெறும் மொழிபெயர்ப்பாக மட்டுமன்றி, சொற்கள் குறிக்கும் பொருளின் விளக்கமாகவும் அமையவேண்டும்.

3. மூலச்சொல்லின் வேர்ப்பொருளை அறிந்து கலைச்சொற்களைத் தமிழில் உருவாக்கும்போது கருத்தமைவையும் கருத்திற் கொண்டு உருவாக்குவதே சிறந்த வழிமுறையாகும்.

4. கலைச்சொல்லாக்கம் சிக்கலாகுமிடத்து வழக்கில் பயன்பட்டுவரும் திசைச்சொற்களை அப்படியே தமிழ்ச்சொற்களாக்கிக் கொள்ளவேண்டும். தற்காலத்தில் தமிழில் கலைச்சொல் ஆக்குமுறைகள் மேல்வரும் படிமுறையின் அடிப்படையில் அமைகின்றன.

**அ) பழஞ்சொற்களைப் பயன்படுத்தல்:**
எழுத்து வழக்கிலோ பேச்சுவழக்கிலோ தாம் விரும்பும் கருத்தமைவுக்கேற்ற சொல் தமிழில் இருக்கும்போது அதனை அப்படியே கலைச்சொல்லாகப் பயன்படுத்தல். அருவி, கருவி, மருந்து, மருத்துவர் முதலான சொற்களை முறையே *Waterfall, Tool, Madicine, Doctor* ஆகிய கருத்தமைவுகளைச் சுட்டப்பயன்படுத்தல்.

**ஆ) சொற்பொருள் விரிவு:**
ஒரு மொழியிலுள்ள சொல்லுக்கான பொருளை விரிவாக்கிப் புதிய கருத்தமைவைச் சுட்டப் பயன்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Phoneme* - ஒலியன்

*Morpheme* - உருபன்

*Chair* - தலைமை

*Hospital* - மருத்துவமனை

இ) புதுச்சொற்படைப்பு:

கூடிய வரையில் தமிழ்மொழி மரபையும் சொல்லாக்க விதிகளையும் பின்பற்றி, ஒரு கருத்தமைவைக் குறிக்கத் தகுந்த புதிய சொல்லொன்றை ஆக்கிக் கொள்ளுதல்.

*Computer* - கணினி

*Internet* - இணையம்

*Terminal* - முனையம்

ஈ) மொழிபெயர்ப்பு:

ஒரு கருத்தமைவைச் சுட்டத் தமிழில் தகுந்த சொல் இல்லாதபோது அக்கருத்தமைவைச் சுட்டிநிற்கும் பிறமொழிச் சொல்லை மொழிபெயர்த்துக் கொள்ளுதல்.

*Telephone* - தொலைபேசி

*Proposal* - முன்மொழிவு

*Microphone* - ஒலிவாங்கி

உ) கடன்பெறல்:

தமிழில் தகுந்த கலைச்சொல் இல்லாதபோதும் புதுச்சொல் படைப்பதில் சிக்கலுள்ளபோதும் மொழிபெயர்ப்பதில் தடங்கலுள்ளபோதும் பிறமொழிச் சொற்களை அப்படியே தமிழில் கடன்வாங்கிக் கொள்ளுதல்.

*Pencil* - பென்சில்

*Laser* - லேசர்

*Radar* - ரேடார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5.7 தமிழில் எழுத்துச் சீர்திருத்தம்

எழுத்துச் சீர்திருத்தம் என்பதும் திட்டமிட்ட மொழிவளர்ச்சியின் ஓர் அங்கமாகவே விளங்குகிறது. அவ்வகையில் ஒரு மொழியினுடைய எழுத்துமுறையில் ஏற்படுத்தப்படுகின்ற எல்லாவகையான மாற்றங்களையும் எழுத்துச்சீர்திருத்தம் எனலாம். அதாவது எழுத்துச்சீர்திருத்தம் எனப்படுவது மேல்வருவனவற்றுள் ஏதேனும் ஒரு அடிப்படையைக் கொண்டிருக்கலாம்.

1. நடைமுறையில் இருக்கின்ற வரிவடிவத்தை முழுமையாகத் தவிர்த்து புதியதொரு வரிவடிவத்தை பயன்படுத்தல். மலேசிய மக்களின் மொழியான மலே மொழி 1980களின் பின்னர் அரபு வரிவடிவத்தை முற்றாகத் தவிர்த்து ரோமன் வரிவடிவத்தைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளது. அதேபோன்று துருக்கி மொழியும் அரபு வரிவடிவத்தை முற்றாகத் தவிர்த்து ரோமன் வரிவடிவத்தைப் பயன்படுத்தத் தொடங்கியமையும் குறிப்பிடத்தக்கது.

2. வழக்கிலுள்ள எழுத்துக்களின் எண்ணிக்கையைக் குறைத்தல். இதன்போது வரிவடிவத்தின் எண்ணிக்கை குறையும். சிங்களமொழியில் அவ்வாறு சில பயனற்ற எழுத்துக்களை நீக்கியுள்ளனர்.

3. வழக்கிலுள்ள எழுத்துக்களுக்கு மேலதிகமாக தேவையின் நிமித்தம் புதிய எழுத்துக்களை உருவாக்கிச் சேர்த்தல். குறிப்பாக ஒரு மொழியிலுள்ள ஒலிவடிவங்களுக்கேற்பவாறு தேவையான புதிய எழுத்துக்களை உருவாக்குவதை இதனுள்ளடக்கலாம்.

4. வரிவடிவத்தில் மாற்றத்தைச் செய்தல். அதாவது குறிப்பிட்ட வரிவடிவத்திலுள்ள எழுத்துக்களை நீக்கி அவற்றுக்குப் பதிலாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு எழுத்துக்களை உருவாக்கிச் சேர்த்தல். தமிழில் இவ்வாறான மாற்றங்கள் காலத்திற்குக் காலம் நிகழ்ந்து வந்திருக்கின்றன.

5. எழுத்துக்கூட்டலில் மாற்றத்தைக் கொண்டு வருதல். தமிழில் ஐ, ஔ ஆகியன முறையே அய், அவ் எனவும் எழுதப்படுகின்றன.

பண்டைக்காலத்தில் இருந்தே தமிழ், வரிவடிவ மாற்றத்தைக் கண்டு வந்துள்ளது. தொல்காப்பியர் காலத்தில் தமிழ் பிராமி எழுத்துக்களினாலேயே வழக்குப்பெற்று வந்துள்ளது. ஐரோப்பியர் காலத்தில் வீரமாமுனிவரின் முயற்சியினாலும் சில சீர்திருத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. காலங்காலமாக மாற்றமுற்று வந்த தமிழ்மொழியின் தற்போதைய எழுத்து வழக்கு பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின்னரேயே நிலைபேறடைந்தது. மிகவேகமாக மாறிவரும் உலகப் பண்பாட்டுச் சூழலில் கல்வி நோக்கிலும் அறிவியல்-தொழிநுட்ப நோக்கிலும் தற்போதைய தமிழ் எழுத்து முறைமை சிக்கனமற்றதாக உள்ளதென மொழிவல்லு நர்கள் கருதுகின்றனர். இதனாலேயே தமிழில் தொடர்ச்சியாக எழுத்துச் சீர்திருத்தத்தின் அவசியம் வலியுறுத்தப்படுகிறது. எனினும் தமிழில் எழுத்துச் சீர்திருத்தம் அவசியமில்லை என வாதிடுவோரும் உ ள்ளனர். எழுத்துச் சீர்திருத்தத்தின் அவசியம் குறித்த வாத-விவாதம், தமிழ் எழுத்து வரிவடிவத்தை முற்றாக நீக்கி உரோமன் வரிவடிவத்தைக் கையாளலாமா? என்பது வரை நீடித்துள்ளது. இருபதாம் நூற்றாண்டில் இடம்பெற்ற எழுத்துச் சீர்திருத்த முயற்சிகள் மேல்வருமாறு:

1915 முதல் தமிழில் எழுத்துச் சீர்திருத்தம் குறித்த கருத்துக்கள் ஆரம்பிக்கின்றன. பாரதியார் முதலானோர் தமிழிற் காணப்பட்ட எழுத்துக் குறைகள் குறித்து கட்டுரைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதத் தொடங்கியிருந்தனர். வ. உ. சிதம்பரனார் முதலியோர் தமிழில் எழுத்துச் சீர்திருத்தம் குறித்த வாத விவாதங்களில் ஈடுபட்டனர்.

1921 இல் சென்னையில் தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்திற்கான பிரேரணை முன்வைக்கப்பட்டது.

1921 முதல் 1931 வரை பா.வே. மாணிக்கநாயக்கர் முதலானோர எழுத்துச்சீர்திருத்த முயற்சிகளில் ஈடுபட்டனர். ஈ.வே.ராமசாமிப் பெரியார் முதலானோரும் எழுத்துச் சீர்திருத்த நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். பதின்மூன்று எழுத்துக்கள் சீராக்கப்பட்டன.

1934 இல் பெரியாரின் சீர்திருத்தக் கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது. திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியன தமது நடவடிக்கைகளில் சீர்திருத்தப்பட்ட எழுத்துக்களைப் பயன்படுத்தத் தொடங்கின. 1950 இல் சென்னை மாகாண அரசு, தமிழ் எழுத்துச் சீர்திருத்தக் குழுவொன்றை நிறுவியது. தெ.பொ.மீனாட்சிசுந்தரனாரும் அக்குழு உறுப்பினர்களுள் ஒருவராக இருந்தார். இக்குழுவின் எழுத்துச் சீர்திருத்த அறிக்கை அரசிடம் கையளிக்கப்பட்டது. ஆனால் பலரதும் எதிர்ப்பினால் அதன் அமுலாக்கம் கைவிடப்பட்டது. 1953இல் தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் 'ஐம்பதில் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதினார். அக்கட்டுரை முன்னர் சென்னை அரசிடம் கையளிக்கப்பட்ட அறிக்கையைத் தழுவியதாக எழுதப்பட்டிருந்தது.

1977 இல் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் வேண்டுமா? வேண்டாமா? என்ற தலைப்பிலான கருத்தரங்கொன்று நடைபெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1978 இல் ஈ.வே.ராமசாமிப் பெரியாரின் தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்திற்கு தமிழ்நாட்டரசு அரச அங்கீகாரம் வழங்கியது. பதின்மூன்று எழுத்துக்களினதும் சீர்திருத்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பின்னர் மலேசியாவிலும் இச்சீர்திருத்தத்திற்கு அங்கீகாரமளிக்கப்பட்டது.

1988/1989 களில் இலங்கை அரசும் அத்திருத்தத்தை சட்டரீதியாக அங்கீகரித்து ஏற்றுக்கொண்டது. செய்யப்பட வேண்டிய எழுத்துச் சீர்திருத்தம் பின்வரும் அடிப்படைகளைக் கொண்டிருக்க வேண்டும் என அறிஞர்களால் பரிந்துரைக்கப்படுகிறது.

அ) ஓர் உயிரெழுத்துக்கு ஒரு துணைக்குறியைக் கொண்டுவரல்

ஆ) துணைக்குறிகள் மெய்களோடு இணைந்து வராமல் தனித்துவரக் கூடியதாக இருத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடையியலும் பல் – தள மொழிப்பாவனையும்

## 5.1 நடையியல்

*Style* என்ற சொல்லில் இருந்தே *Stylistics* என்ற ஆங்கிலச்சொல் ஆக்கம் பெற்றுள்ளது. இது தமிழில் நடையியல் என்று வழக்குப் பெற்றுள்ளது. *Style* என்ற சொல் ஆரம்ப காலத்தில் எழுத்தாணி என்ற பொருளில் வழங்கப் பெற்றுள்ளது. கி.பி 1300களுக்குப் பின்னரேயே அது தனியொருவரின் மொழிநடையைக் குறிக்க ஆரம்பித்தது. மரபிலக்கணங்களில் நடை என்ற சொல், சொல்லோசை, சொற்றொடர்களில் மொழி கையாளப்படும் தன்மை, பண்பு, திறன், போக்கு போன்றவற்றைக் காணும் சொல்லாகப் பலவகையிலும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. ஒரு படைப்பாளனின் நடையை ஆராய்வதன் பிரதான பயன், ஆசிரியர் பெயர் தெரியாத குறிப்பிட்ட சில நூல்களையும் இன்னாரது நூல் எனத் தெளிந்து கொள்ள முடிவதே.

'எண்ணங்களுக்குப் போர்த்தப்படும் ஆடையே நடை' என்பர் அறிஞர். ஒரு படைப்பாளி 'மொழியைக் கையாளும் திறன்' மொழிநடையாகும். ஒரு படைப்பாளி தான் கொண்ட மனக்கருத்தைப் படைப்பாக உருவாக்கும்போது அது எதிர்பார்த்த பயனையும் விளைவையும் தருவதற்கு மொழிநடை அவசியமாகிறது. மேலும் அது அப்படைப் பாளனையும் தனித்து அடையாளப்படுத்துகிறது. தவிரவும் ஒரு படைப்பாளனின் அறிவு, அனுபவம், திறமை, அவன் சார்ந்திருக்கும் சமூகத்தாக்கம் இவற்றின் அடிப்படையிலும் மொழிநடை கவனம் பெறுகிறது. படைப்பாசிரியர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனைத் திறனுக்கும் கற்பனை வளத்துக்கும் ஏற்றவாறே வார்த்தை, வாக்கியம் ஆகியன அமைகின்றன.

எழுதப்பட்ட நடையினை ஆய்வு செய்வதே இன்றைய நடையியலின் அடிப்படையாகும். மொழி என்பது சிந்தனை வெளிப்பாட்டிற்குரிய கருவிகளுள் மிக ஆற்றல் வாய்ந்தது. எனவே, ஒரு படைப்பாளனின் படைப்புக் குறித்த ஆய்வில் அவனது மொழிநடை குறித்த நோக்கும் கணிப்பும் இன்றியமையாதனவாகின்றன. நடை என்பது "தனித்தன்மையை வெளிப்படுத்தவல்ல ஒரு வெளிப்பாட்டு உணர்ச்சி" என்பதும் அறிஞர் கருத்து. "நடை என்பது ஓர் ஆசிரியரின் மேற்சட்டை போன்றதன்று, அது உடம்பின் தோல் போன்றது" என்கிறார் அறிஞர் ஜே.எம். முர்ரே.

தற்கால நடையியலின் தந்தையாக சார்ள்ஸ் பார்லி என்பவரே கணிக்கப்படுகிறார். அவர், 'மொழியிற்காணப்படும் உணர்ச்சிக் கூறுகளின் ஆய்வே நடையியலாகும்' என்கிறார்.

விபரிப்பு நடை, விளக்க நடை, கட்டுரை நடை, கவிதை நடை, செய்யுள் நடை, உரைநடை, எளிய நடை, தொடர் நடை, கடின நடை, ஆய்வு நடை, கருத்து நடை, பேச்சு நடை, வினா நடை, உணர்ச்சி நடை, மிடுக்கு நடை, வேக நடை, அறவுரை நடை, புள்ளிவிவர நடை என நடை பல வகைப்படும்.

தொடக்காலத் தமிழில் முதலில் செய்யுள் நடையே வழக்கில் இருந்தது. பின்னர் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் வழக்குப் பெறத் தொடங்கியது. உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளுக்கு எடுத்துக்காட்டாகச் சிலப்பதிகாரத்தைக் குறிப்பிடலாம். தொடர்ந்து உரையும் பாட்டும் கலந்தவொரு நடையான சம்பு நடை அறிமுகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுகிறது. தமிழ் உரைநடை வளர்ச்சியில் சிறப்பிடம் பெற்று விளங்குவது இறையனார் அகப்பொருளுரை. இதுவும் உரையிடையிட்ட செய்யுட்களாலானது. சமகாலத்திலேயே சாசன நடையொன்றும் முக்கியத்துவம் பெறுகிறது. செப்பேடுகள், கல்வெட்டுக்கள் முதலானவற்றில் எழுதும் நடையான இது பல்லவர்காலத்தில் வழக்குப் பெற்றது. அக்கால சாசனங்களில் வடசொற்கள் கலந்து எழுதப்பட்டன. பொதுமக்கள் படிக்கவேண்டி இருந்தமையினால் பேச்சுவழக்கும் ஒரோவிடத்து சாசன நடையில் கையாளப்பட்டது. தமிழ்ச் சொற்களும் வடசொற்களும் கலந்து வந்த நடை மணிப்பிரவாள நடை எனப்பட்டது. சாசனங்களில் குறிப்பாக இம் மணிப்பிரவாள நடை கையாளப்பட்டிருந்தது. ஆரியரின் வருகையினால் தமிழகத்தில் வடமொழி ஆதிக்கம் நிலவுகிறது. இக்காலத்தில் வடமொழி நூல்களை அடியொற்றி ஸ்ரீ புராணம், கயசிந்தாமணி முதலிய இலக்கியப் படைப்புக்கள் மணிப்பிரவாள நடையில் வெளிவந்தன.

அடுத்து, நூற்பாக்களுக்கு விளக்கந்தரும் வகையில் அமைந்த உரையாசிரியர் நடை முக்கியத்துவம் பெறுகிறது. உரையாசிரியர்கள் நூற்பாக்களின் கருத்துக்களை விளக்கும் நோக்கில் இந்நடையைக் கையாண்டதனால் அது விளக்கநடையாகவும் விளங்கியது. நூற்பாக்களின் கருத்துகளைச் சிறு சிறு வாக்கியங்களால் விளக்கி எழுதியதனால் அது எளியநடையாகவும் காணப்பட்டது. உரையாசிரியர்களுள் இளம்பூரணர் வினா விடை நடையொன்றையும் பேராசிரியர் பொருள் விளக்கத்துக்குத் தேவையான இலக்கணக் குறிப்புக்கள் நிறைந்த நடையொன்றையும் சேனாவரையர் தெளிவும் சுருக்கமும் நிறைந்த வினா விடை நடையொன்றையும் கையாண்டமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐரோப்பியர் வருகைக்குப் பின் தமிழில் உரைநடை புதிய பரிணாமம் பெறுகிறது. அவ்வகையில் தமிழ் உரைநடையின் தந்தை எனப்போற்றப்படுகின்ற வீரமாமுனிவரின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. அவர் பேச்சுவழக்குச் சொற்களைக் கையாண்டு, சிறு சிறு வாக்கியங்களில், சாதாரண கல்வியறிவுடையோரும் படித்து இன்புறக்கூடியவகையில் தமிழில் எளிமையான உரைநடையொன்றை அமைத்துக் காட்டினார். அதற்கு அவரது பரமார்த்தகுரு கதை சிறந்த எடுத்துக்காட்டாகும். மேலும், அவர் தொன்னூல் விளக்கம் முதலானவற்றில் சிறந்த உரையாசிரியர் நடையொன்றையும் கையாண்டார்.

ஐரோப்பியர் வருகைக்கு முன் இலக்கண, இலக்கியங்களுக்கு உரையெழுதப் பயன்பட்ட உரைநடை வீரமாமுனிவரோடு இலக்கியம் படைக்கப் பயன்பட்டமை குறிப்பிடத்தக்கது. வீரமாமுனிவருக்குப் பின் சிவஞானமுனிவர், சபாபதி நாவலர் போன்றோரது உரைநடை முயற்சிகள் குறிப்பிடத்தக்கவை. அவர்கள் பெரும்பாலும் பிறமொழிச் சொல் கலவாது இனிய இலக்கணத் தமிழில் எடுப்பாக எழுதப்படும் ஒரு நடையைத் தமிழில் கையாளத் தொடங்கினர். அந்நடை செந்தமிழ் நடை எனப்பெயர் பெற்று நிலைத்தது.

தமிழ் உரைநடை வரலாற்றில் குறிப்பிடத்தக்கவொரு காலம் ஆறுமுக நாவலரது காலமாகும். ஆறுமுக நாவலர் அவரது பங்களிப்பின் மேன்மையால் தற்காலத் தமிழ் உரை நடையின் தந்தை எனவும் வசனநடை கைவந்த வல்லாளர் எனவும் அறிஞர்களால் போற்றப்பட்டார். அவர் கையாண்ட நடை, கடின சந்தி விகாரங்களை நீக்கிய, ஆங்கில மொழிக்குரிய குறியீட்டுமுறைப் பயன்பாடு கொண்ட, சிறு சிறு வாக்கியங்களாலான பொதுமக்களுக்குரிய எளிதானவொரு உரைநடையாக விளங்கியது. அந்நடை தெளிவு, வழுவின்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலான அம்சங்களைக் கவனத்திற் கொண்டதாகவும் விளங்கியது.

அச்சியந்திரங்களின் வருகையோடும் பயன்பாட்டோடும் தமிழில் பத்திரிகைத் துறை என்றவொரு புதிய துறைவழக்கு அறிமுகமாகிறது. அப்பத்திரிகைகளில் எழுதுவதற்கென வொரு புதிய நடை பத்திரிகை நடையாக வளர்ச்சி பெறுகிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழில் அறிமுகமாகி வளர்ச்சிபெற்ற புனைகதைத்துறை, நாவல், சிறுகதை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டவொரு இலக்கிய நடையொன்றை உருவாக்க வழிவகுத்தது.

பதினெட்டாம், பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட அறிவியல் எழுச்சியின் காரணமாகத் தமிழிலும் அறிவியல் நூற்கள், ஆய்வுக்கட்டுரைகள் ஆகியன எழுதப்படலாயின. அவ்வெழுத்துக்களில் உணர்ச்சிக் கலப்பில்லாத, எடுத்துக்கொண்ட விடயத்தைத் தர்க்கமுறையில் விளக்கும் ஓர் அறிவியல் நடை கையாளப்பட்டது. அந்நடை ஆங்கில, வடமொழிச் சொற்கள் கலந்த ஒரு கலப்புத் தமிழ்நடையாக விளங்கியமை குறிப்பிடத்தக்கது.

இருபதாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் தமிழில் பிறமொழிச் செல்வாக்கு அதிகரித்துக் காணப்பட்டது. அக்காலத்தில் பிறமொழி கலவாது தூய தமிழில் எழுதவேண்டும் என்ற வைராக்கியத்துடன் சிலர் எழுதமுற்பட்டனர். தனித்தமிழ் இயக்கத்தின் செல்வாக்கோடு முனைப்புப் பெற்ற அம்முயற்சி, தனித்தமிழ் நடையொன்றை வளர்ச்சிபெறச் செய்தது. ஆட்பெயர் உட்பட வடமொழிச் செல்வாக்கோடு திகழ்ந்த பல சொற்கள் தனித்தமிழ் நடையில் எழுதப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலக் கல்வி விருத்தி, ஐரோப்பியர் நாகரிகத் தொடர்பு ஆகியவற்றால் விளைந்த மறுமலர்ச்சி, காலத்துக்கேற்ற புதிய நடையான மறுமலர்ச்சி நடையொன்றையும் தமிழில் அறிமுகப்படுத்தியது. பழைய இலக்கணக் கட்டுக்கோப்பைத் தளர்த்தி பேச்சுமொழிக்குக் கிட்டிய பழகு தமிழில் எழுதும் நடையாக இந்நடை விளங்கியது. இது பெரும்பாலும் பொதுமக்கள் பேச்சுவழக்கினை அடிப்படையாகக் கொண்டு விளங்கியது. புதிய புதிய அணிகளும் குறியீடுகளும் படிமங்களும் புதிய சொற்றொடர் இயைபும் இந்நடையிற் சிறப்பாகக் கையாளப்பட்டன.

1960, 1970களில் திராவிட கழக வளர்ச்சியின் பின்புலத்தோடு, ஓசைச் சிறப்புடன் கூடியவொரு செந்தமிழ் நடை தமிழில் வளர்ச்சி பெறுகிறது. அறிஞர் கு. அண்ணாதுரை, ரா.பி.சேதுப்பிள்ளை, கலைஞர் மு.கருணாநிதி முதலானோர் இந்நடையைக் கையாண்டனர். இந்நடை உணர்ச்சியை வெளிப்படுத்தும் பிரசாரத்துக்குப் பயன்படும் ஒரு நடையாக விளங்கியது.

ஆங்கிலேயருக்குப் பின் சட்டங்கள், விதிகள், ஒழுங்குகள், ஒப்பந்தங்கள், அறிக்கைகள், பிரகடனங்கள் முதலானவற்றைத் தெளிவாகக்கூறும் வெள்ளை நடையொன்று தமிழில் தோன்றி வளர்ந்தது. பெரும்பாலும் அணி அலங்காரங்கள் இன்றி எல்லோரும் எளிதில் பொருள்புரியக் கூடியதான இயற்சொற்களால் எழுதப்படும் ஒரு நடையாக இந்நடை விளங்குகிறது.

இவ்வாறு தமிழில் பல்வேறு நடைகளைக் கையாண்டு எழுதும் வழக்கு காலங்காலமாகச் செல்வாக்குப் பெற்று வளர்ந்து வந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழில் வெளிவந்துள்ள நடை குறித்துப் பேசும் இலக்கண நூல்களுள் பவணந்தி முனிவரின் நன்னூல் குறிப்பிடத்தக்கது. ஒரு கட்டுரையின் நடை எவ்வாறு அமையவேண்டும் என்பது குறித்து அல்லது ஒரு நூலிற்கான அழகு குறித்து நன்னூல் பின்வருமாறு குறிப்பிடுகிறது.

'சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்
நவின்றோர்க்கு இனிமை நன்மொழி புணர்த்தல்
ஓசையுடைமை ஆழமுடைத்தாதல்
முறையின் வைப்பே உலகமலையாமை
விழுமியது பயத்தல் விளங்குதார ணத்த
தாகுதல் நூலிற்கு அழகெனும் பத்தே'

## 6.2 திறன்மிகு வாக்கிய ஆக்கம்

சொற்கள் ஒரு குறிப்பிட்ட ஒழுங்குமுறைக்கேற்ப, ஒன்றுடன் ஒன்று அமைப்பு ரீதியாக இணைந்து, ஒரு முற்றுப்பொருள் தருமாயின் அது வாக்கியம் எனப்படும். வெறுமனே சொற்களின் சேர்க்கை வாக்கியமாகாது. அவை பொருள்தரக்கூடிய வகையில் ஒன்றுடன் ஒன்று இணைய வேண்டும். பல்கலைக்கழகத்தில் வீட்டுக்கு இருந்து சென்றேன் நேற்று நான் நண்பர்களுடன் ஆகிய சொற்கள் இணைந்து ஒரு வாக்கியமாக மாட்டா. ஏனெனில் அவை பொருள்தரக் கூடிய வகையில் இணையவில்லை. ஆனால் அவை நேற்று நான் நண்பர்களுடன் பல்கலைக்கழகத்தில் இருந்து வீட்டுக்கு சென்றேன் என இணையும்போது வாக்கியமாகின்றது. அதேபோன்று பல்கலைக்கழகத்தில் இருந்து நேற்று நான் நண்பர்களுடன் வீட்டுக்குச் சென்றேன், நேற்று நண்பர்களுடன் நான் பல்கலைக்கழகத்திலிருந்து வீட்டுக்குச் சென்றேன் எனவும் வாக்கியங்களை ஆக்கிக் கொள்ளலாம். இவ்வாக்கியங்கள் வெளிப்படுத்த விரும்புகின்ற கருத்தினைத் தெளிவாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலப்படுத்துகின்றன. ஆகையால் இவ்வாறான வாக்கியங்களை திறன்மிகு வாக்கியங்கள் எனலாம். இவ்வாறான திறன்மிகு வாக்கியங்களை ஆக்கிக் கொள்ள இலக்கணப் பயிற்சியும் தேர்ந்த வாசிப்பும் இன்றியமையாதனவாகின்றன.

## 6.3 தமிழ் வாக்கிய அமைப்பு

சொற்கள் ஒரு குறிப்பிட்ட ஒழுங்குமுறைக்கேற்ப ஒன்றுடன் ஒன்று அமைப்பு ரீதியாக இணைந்து ஒரு முற்றுப்பொருள் தரும் வாக்கியங்களைப்போலவே தனிச்சொற்களும் வாக்கியங்களாகின்றன. நில், எடு, மறையாதே போன்றவற்றை யும் வாக்கியங்களாகக் கொள்ளலாம். இவ்வாக்கியங்களில் எழுவாய்ப் பெயர்கள் மறைந்து நிற்கின்றன.

ஒரு வாக்கியத்தின் முக்கியமான உறுப்பு சொற்றொடர். சொற்றொடரில் எழுவாய்த் தொடர், பயனிலைத் தொடர் என இரு தொடர்கள் முக்கியம் பெறுகின்றன. ஒரு தொடரில் குறைந்தது ஒரு சொல்லாவது இருக்கும்.

சொற்றொடர் வகைகள்

அ) பெயர்த் தொடர்

ஆ) வினைத் தொடர்

இ) பெயரடைத் தொடர்

ஈ) வினையடைத் தொடர்

மேற்குறிப்பிட்டவாறு வாக்கியத் தொடர் என்பதும் குறிப்பிடத்தக்கவொன்றாகும். தமிழ் வாக்கிய அமைப்புக் குறித்த மேலதிகத் தகவல்களை எம்.ஏ நுஃமானின் 'அடிப்படைத் தமிழ் இலக்கணம்' என்ற நூலிற் காண்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5.4 நிறுத்தற் குறிகள்

திறன்மிகு வாக்கியங்களை ஆக்கமுனைவோர், கட்டுரைகளை எழுதவிரும்புவோர் பல்வேறு விடயங்களைக் கவனத்திற் கொள்ளல் அவசியமாகும். அவற்றுள் முக்கியமானவொன்று நிறுத்தற்குறிப் பயன்பாடாகும். தமிழில் செய்யுள் மரபு தனது செல்வாக்கை நிலைநிறுத்தியிருந்தவரை நிறுத்தற் குறியீடுகள் குறித்த பிரக்ஞை எழவில்லை. ஐரோப்பியரின் வருகையினால் தமிழில் செல்வாக்குப் பெறத்தொடங்கிய உரை மரபோடு நிறுத்தற்குறிகள் குறித்த எண்ணம் முனைப்புப் பெறத் தொடங்கிற்று. தமிழ் உரைப்பாரம்பரியத்தில் ஆறுமுக நாவலரின் செல்வாக்கு நிலைபெறும்வரை நீண்ட வசனங்கள் முற்றுப் புள்ளியுடன் முடிவுபெறும் வழக்குக் காணப்பட்டது. 'வசனநடை கைவந்த வல்லாளரா' யிருந்த ஆறுமுக நாவலர் 'தற்காலத் தமிழ் உரைநடை' யின் தந்தையாகப் போற்றப் பெற்றமைக்கு அவரது உரைப்பாரம்பரியமே அடிப்படை யாகியது. ஆங்கில உரைப்பாரம்பரியத்தின் அடிப்படைகளை உள்வாங்கிக் கொண்ட ஆறுமுக நாவலர், தமிழ் உரையாக்கத்தில் பல மாற்றங்களைச் செய்துகாட்டினார். அவற்றுள் அவரது நிறுத்தற் குறிப் பயன்பாடு குறிப்பிடத்தக்கதொன்று. பிற்காலத்தில் தமிழ் உரைநடை ஆறுமுக நாவலரின் வழிகாட்டலினால் சிறந்து விளங்கிற்று. தற்காலத் தமிழில் வழங்கும் முக்கியமான நிறுத்தற்குறிகள் பின்வருமாறு:

**காற்புள்ளி ( , )**

1. ஒரே எழுவாயைக் கொண்டு அடுக்கி வரும் முற்று வினைகளுக்கிடையில் வரும்.

   எ-டு: நீங்கள் அனுப்பிய கவிதையைப் படித்தேன், ரசித்தேன், சுவைத்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. ஒரே பெயரைத் தழுவும் சொற்களுக்கிடையிலும் தொடர்களுக்கிடையிலும் வரும்.
   எ-டு: மனிதத்தில் சாதி, மத, நிற வேறுபாடுகள் கிடையாது.
3. ஒரே வினையைத் தழுவும் சொற்களுக்கிடையிலும் தொடர்களுக்கிடையிலும் வரும்.
   எ-டு: அந்தப் பாடல் இனிமையானதாக, உள்ளத்திற்கு அமைதியை ஏற்படுத்துவதாக, கடந்த காலத்தை நினைவூட்டுவதாக அமைந்திருந்தது.
4. தொடர்புபடுத்திக் கூறப்படும் சொற்கள், தொடர்கள், எண்கள் ஆகியவற்றுக்கிடையில் வரும்.
   எ-டு: 1950, 1960 களில் இடம்பெற்ற மறுமலர்ச்சி
   எ-டு: பொய், களவு அறியாதவன்
   எ-டு: பார்க்க, பேசக் கூடாது.
5. ஒரே சொல் அல்லது தொடர் இருமுறை அடுக்கி வரும் போது அவற்றுக்கிடையில் வரும்.
   எ-டு: கேவலம், கேவலம் என்கிறீர்களே!
   எ-டு: எழுந்திரு, எழுந்திரு என்று கூறியும் நீ கேட்க வில்லை.
6. ஒரு வாக்கியத்தை அதன் முன்னுள்ள வாக்கியத்துடன் தொடர்புபடுத்தும் சொற்களையும் தொடர்களையும் அடுத்து வரும்.
   எ-டு: அவர் தலைசிறந்த கவிஞர். ஆனால், தலைக்கனம் பிடித்தவர்.
7. வாக்கியத்தின் தொடக்கத்தில் வாக்கியத்திற்கு வினையாக வரும் பொதுவாக முதலான சொற்களை அடுத்து வரும்.
   எ-டு: பொதுவாக, அவள் படிப்பதை விரும்புவதில்லை.
8. அதாவது, குறிப்பாக எனும் சொற்களைக் கொண்ட தொடருக்கு முன்னால் வரும்.
   எ-டு: இந்தியர்கள், குறிப்பாகத் தமிழர்கள் சிறந்த உழைப் பாளிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. ஒரு முழுமையான கூற்றுவாக்கியத்தைத் தொடர்ந்து வரும் 'இல்லையா', 'அல்லவா' போன்ற சொற்களுக்கு முன்னால் வரும்.

எ-டு: நீ நேற்று வரவில்லை, அல்லவா?

10. அழுத்தத்திற்காக ஒழுங்கு முறை மாற்றி எழுதப்படும் தொடர்களுக்கிடையில் வரும்.

எ-டு: அவன் வாழ்க்கையில் முன்னேறினான், நன்றாக உழைத்து.

11. ஒரே வாக்கியத்தில் அடுக்கிவரும் வினாத் தொடர்களுக்கிடையில் வரும்.

எ-டு: அவன் தருவானா, மாட்டானா?

12. ஒரே வாக்கியத்தில் அடுத்து வரும் ஏவல் வினைகளுக்கு இடையில் வரும்.

எ-டு: அவரைத் தடுக்காதே, பேசவிடு

13. எழுவாய்க்கும் பயனிலைக்கும் இடையில் தொடர்வரும் போது எழுவாயை அடுத்து வரும்.

எ-டு: அவர், அந்நிறுவனத்தில் நீண்ட காலம் பணியாற்று கிறார்.

14. விடையளிக்கும் போது விடையின் ஒரு பகுதியாக வரும் வினாப்பகுதியினை அடுத்து வரும்.

எ-டு: நீங்கள் யாரா, நான் இந்த ஊர்த்தலைவன்.

15. வாக்கியத்தின் தொடக்கத்தில் வரும் ஆமாம், இல்லை, ஓ, ஓஹோ போன்ற சொற்களை அடுத்து வரும்.

எ-டு: ஆமாம், நான் ஒரு பைத்தியக்காரன்.

16. இரு வினாக்களுக்கிடையில் வரும் இல்லை என்ற சொல்லை அடுத்து வரும்.

எ-டு: இது ஒரு பாடசாலையா? இல்லை, சந்தையா?

17. தொடர் விழிப்புச் சொற்களை இணைக்க வரும்.

எ-டு: மாணவர்களே!, பெற்றோர்களே!!,

18. முகவரியை கிடையாகத் தரும்போது வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எ-டு: மொழித்துறை, கலைப்பீடம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

19. தலைப்பு எழுத்தைப் பெயருக்குப் பின்னால் எழுதும் போது பெயரை அடுத்து வரும்
எ-டு: சிவத்தம்பி, கா.

20. பட்டங்களைச் சுருக்கித் தொடராகத் தரும்போது இடையில் வரும்.
எ-டு: B.A., M.A, M. Phill, PhD

21. மாதத்தின் பெயரைத் தொடர்ந்து வரும் திகதிக்கும் ஆண்டுக்கும் இடையில் வரும்.
எ-டு: டிசம்பர் 31, 2016

## அரைப்புள்ளி ( ; )

1. ஒரு குறிப்பிட்ட கருத்தை மையமாகக் கொண்ட முற்றுத் தொடர்களுக்கிடையில் வரும்.
எ-டு: பெற்றோர் அதனை விரும்பவில்லை; மாணவர்களும் அதனை ஆதரிக்கவில்லை; விரிவுரையாளர்களும் அதனை அனுமதிக்கவில்லை

2. ஒப்புமைப்படுத்தல், மாறுபட்ட நிலைகளைக்காட்டல் ஆகிய அம்சங்களைக் குறிக்கும் முற்றுத் தொடர்களுக்கு இடையில் வரும்.
எ-டு: அரசன் அன்றறுப்பான்; தெய்வம் நின்றறுக்கும்.

3. காரணத்தையும் விளைவுகளையும் குறித்து வரும் முற்றுத் தொடர்களுக்கிடையில் வரும்.
எ-டு: அவர்கள் கேட்டார்கள்; நாங்கள் கொடுத்தோம்.

4. ஒரு தொகுப்பு, ஒன்றுக்கு மேற்பட்ட விபரங்களைக் கொண்டிருக்கும் போது தொகுப்புகளுக்கிடையில் வரும்.
எ-டு: நேகா, லூசியன் இல்லம்; ரீமா, மெரிலியன் இல்லம்; ஜியோடியா, தெரேசியன் இல்லம்; விதுசிகா, எக்னீசியன் இல்லம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முக்காற்புள்ளி ( : )

1. செய்தியை அறிமுகப்படுத்த, என்னவென்றால், போன்ற சொற்கள் இல்லாதபோது வரும்.
   எ-டு: அவையாவன:
   பின்வருமாறு:
   அனைவரும் எதிர்பார்த்த கேள்வி :
2. தலைப்பினை அடுத்து வரும் குறிப்பான விளக்கத்தைக் குறித்துக்காட்ட வரும்.
   எ-டு: நீங்கள் பரீட்சைக்குப் படிக்க வேண்டியவை: ஒலியியல், ஒலியனியல், உருபனியல்
3. சொற்களின் அல்லது சொற்றொடர்களின் வரையறையை அல்லது விளக்கத்தை அறிமுகப்படுத்தும்போது வரும்.
   எ-டு: சொத்து வரி : முழுச் சொத்தின் மீதான மதிப்பு வரி.
4. ஒரு கூற்றை அறிமுகப்படுத்தும் முன்னால் குறிப்பிட்ட பாத்திரத்தைக் குறித்துக்காட்டவும் 'கூறியதாவது' போன்ற சொற்கள் பயன்படுத்தப்படாதபோதும் வரும்.
   எ-டு: ஆசிரியர் : நீ நேற்று ஏன் வரவில்லை?
   மாணவன் : எனக்கு நேற்று வயிற்று வலி.
5. விபரங்களைப் பட்டியல் முறையில் ஒன்றன் பின் ஒன்றாகத் தரமுற்படும்போது வரும்.
   எ-டு: பெயர் :
   எ-டு: வயது :
6. ஒரு நிகழ்ச்சி நிரலை நேர ஒழுங்கோடும் நிகழ்ச்சியோடும் தொகுத்து வழங்கும்போது வரும்.
   எ-டு: மு.ப. 9.00 : பதிவு
   மு.ப. 9.30 : தேசிய கீதம்
   மு.ப. 9.35 : வரவேற்புரை
   மு.ப. 9.45 : தலைமையுரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முற்றுப்புள்ளி ( . )

1. ஒரு கூற்று வாக்கியத்தின் முடிவில் வரும்.
   எ-டு: கமலா வந்தாள்.
2. ஏவல் வாக்கியத்தின் முடிவில் வரும்.
   எ-டு: அந்தப் புத்தகத்தை எடு.
3. மேற்கோள்குறி பெற்றுவரும் வாக்கியத்தின் இறுதியில் மேற்கோள் குறிக்கு முன்னால் வரும்.
   எ-டு: "உலகில் இருப்பது ஒரு சாதி, அது தான் மனித சாதி."
4. கிடக்கை வரிசையில் அமையும் பட்டியலின் இறுதியில் வரும்.
   எ-டு: அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
5. ஒரு வாக்கியம் முழுவதும் பிறை அடைப்பிற்குள் வரும் போது அதன் வசன முடிவில் வரும்.

## புள்ளி ( . )

1. எழுத்துக்கள் சுருக்கக் குறியீடாகப் பயன்படும்போது அவற்றுக்கிடையே வரும்.
   எ-டு: ஐ.நா கி.பி
2. ஒருவரின் பெயருக்கு முன்னோ பின்னோ வரும் தலைப்பு எழுத்துக்களை அடுத்து வரும்.
   எ-டு: அ. சண்முகதாசன்
3. எண்ணால் குறிக்கப்படும் திகதி, மாதம் ஆ கியவற்றினை அடுத்து வரும்.
   எ-டு: 01.01.20013

## தொடரிசைக்குறி (...)

1. வாக்கியத்தில் தவிர்க்கப்படும் பகுதியைக் குறிக்க வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. வாக்கியத்தின் இறுதியில் சிந்தனை தொடர்ச்சியைக்காட்ட
எ-டு: நீங்கள் கூறுவதும் சரியாக இருக்கலாம்...
3. சொற்களின் தொடர்ச்சியைக் காட்ட
எ-டு: ம்... , வரா...

## வினாக்குறி ( ? )

1. வினா வாக்கியத்தின் முடிவில் வரும்.
எ-டு: விடுமுறைக்கு வீட்டுக்கு வருவாயா?
2. ஐயம், நம்பிக்கையின்மை ஆகியவற்றை அடுத்து
எ-டு: சிபாரிசு இல்லாமல் வேலை கிடைக்குமா?
3. வினாக்குறிப்பு அடங்கிய முற்றுப் பெறாத வாக்கியத்தின் முடிவில்
எ-டு: நாங்கள் விரிவுரைக்குப் போகிறோம் நீங்கள்.....?
4. வியப்போடு ஒன்றை வினவும் போது கேள்விக் குறியையும் உணர்ச்சிக்குறியையும் சேர்த்து பயன்படுத்தல்
எ-டு: அமெரிக்காவிற்கா? போகின்றீர்கள்!

## வியப்புக்குறி ( ! )

1. உணர்ச்சியை வெளிப்படுத்தும் வாக்கியங்களின் முடிவில் வரும்.
எ-டு: எவ்வளவு அழகான நகரம்!
2. உணர்ச்சியைக் குறிக்கும் சொற்களை வரும்.
எ-டு: ஆகா! ஆச்சரியம்!
3. கவனத்தை ஈர்க்கும் சொற்களை அடுத்து வரும்.
எ-டு: பாம்பு! பாம்பு!!
4. விளிச்சொற்களை அல்லது விளித்தொடரை அடுத்து வரும்.
எ-டு: தாமரர்களே!
எ-டு: இலங்கை வாழ் மக்களே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. வாழ்த்து, வசை முதலியவற்றைத் தெரிவிக்கும் வினையை அடுத்து வரும்.
எ-டு: அமைச்சர் வாழ்க!
எ-டு: அராஜகம் ஒழிக!

6. வியங்கோள் வினை இரட்டித்து வரும்போது இரண்டாவதாய் வரும் சொல்லை அடுத்து வரும்.
எ-டு: வருக வருக!

## இரட்டை மேற்கோள் ( " " )

1. ஒருவரின் கூற்றைத் தனித்துக் காட்ட
எ-டு: "இன்று போய் நாளை வா"

## ஒற்றை மேற்கோள் ( ' ' )

1. ஒருவரின் கூற்றுக்குள் வரும் இன்னொருவரின் கூற்றைத் தனித்துக் காட்டும்போது வரும்.
2. வாக்கியத்தில் அழுத்திக் கூறும் சொற்களைக் குறிக்க வரும்.
3. ஒருவரின் எண்ணத்தை வெளிப்படுத்தும் கூற்றைத் தனித்துக் காட்டும்போது வரும்.
எ-டு: கண்டவுடனேயே 'கேட்டுவிட வேண்டும் என்று நினைத்தான்'
4. எழுதுபவர் தம் நோக்கில் ஒரு சொல்லையோ தொடரையோ தனித்துக்காட்ட
'அவன் நல்லவன்' என்றா நீங்கள் கருதுகின்றீர்கள்.
5. சந்திப்பின் போது தெரிவிக்கும் சொற்கள், பழமொழி ஆகியவற்றைத் தனித்துக் காட்ட வரும்.
எ-டு: 'மின்னுவதெல்லாம் பொன்னல்ல'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனி மேற்கோள் ( ' )

எ-டு: *30*, மே,' 12

மேற்படிக் குறி ( " )

1. தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
2. கிழக்குப் "
3. பேராதனைப் "
4. சப்ரகமுவப் "

## 6.5 உரையாக்கம்

தமிழில் திறன்மிகு பந்திகளையும் உரைப்பகுதிகளையும் கட்டுரைகளையும் எழுதவிரும்புவோர், முதலில் திறன்மிகு வாக்கிய ஆக்கத்தில் அக்கறை செலுத்தவேண்டும். முற்குறிப்பிட்ட உரையாக்க முயற்சிகளில் ஈடுபடுவோர் தமது நோக்கத்தை அடைந்து கொள்வதற்கும் வினைத்திறன்மிக்க விளைவுகளைப் பெறுவதற்கும் முதலில் தமிழ் வாக்கிய அமைப்பில் அறிவும் பயிற்சியும் பெறல் வேண்டும். அந்த அறிவும் பயிற்சியும் திறன்மிகு வாக்கியங்களை ஆக்கிக்கொள்ள துணைபுரியும். அவ்வாறு ஆக்கிக் கொள்ளப்படும் திறன்மிகு வாக்கியங்களைக் கொண்டு உரைப்பகுதிகளைத் தயாரிக்கும்போது நிறுத்தற் குறிகளின் பயன்பாடு இன்றியமையாததாகின்றது. உருவ, உள்ளடக்கரீயாக திறன்மிகு உரையாக்கப் பகுதி, கட்டுரை முதலானவை எவ்வாறு அமைய வேண்டும் என்பதைத் தமிழ் இலக்கண நூலான நன்னூல் தெளிவாகக் குறிப்பிடுகிறது. உரையாக்கத்தில் தவிர்க்க வேண்டியனவற்றையும் சேர்க்க வேண்டியனவற்றையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்னூல் பட்டியலிட்டுக் காட்டியிருப்பது மிகுந்த கவனத்திற்குரியது.

உரையாக்கத்தின்போது,

- எழுதுபவர் வாசகர்களை மையமாகக்கொண்டு புதிய தகவல்களைப் பரிமாற முயற்சிக்க வேண்டும்.
- அதற்கு ஆதாரமாகத் தனித்துவமான உரையாக்க முறைமையொன்றை உருவாக்கிக்கொள்ள முயற்சிக்க வேண்டும். அது வாசிப்பதற்கு எளிதானதாக இருக்க வேண்டும்.
- எழுத்துக்கு உயிர்த்துடிப்பைத் தரும் சொற்சுருக்கம், பொருட்செறிவு, சிறு சிறு வாக்கிய அமைப்பு முதலான வற்றில் கரிசனை கொள்ளவேண்டும்.
- பரிமாறவிரும்பும் தகவல்களுக்குத் தேவையான விவரங்களை மட்டுமே கவனத்திற் கொள்ளவேண்டும்.
- கூற விரும்புவனவற்றைத் தர்க்கரீதியாக எடுத்துரைக்க முற்பட வேண்டும்.
- சொல்வதை நேரடியாகச் சொல்ல வேண்டும்.

எழுதுபவரின் ஆளுமையைப் பிரதிபலிக்கும் புதிய கருத்துக்களை எழுத்தாற்றலோடு வெளிக்காட்ட வேண்டும். எழுதுபவர் கடினமான சொற்களையும் கலைச்சொற்களையும் தவிர்க்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடைமுறை இலக்கணம்

## ７.1 தமிழ் எழுத்துக்களின் பரம்பல்

தமிழில் வழங்கும் எல்லா எழுத்துக்களும் சொற்களின் முதல், இடை, கடை என எல்லா இடங்களிலும் வருவதில்லை. ஒரு எழுத்து எல்லா எழுத்துக்களுடனும் சேர்ந்தும் வருவதில்லை. தமிழ் எழுத்துக்கள் எவ்வெந்த இடங்களில் எவ்வெவ் எழுத்துக்களோடு சேர்ந்துவரும் என்பதற்குச் சில விதிகள் உள்ளன. இவ்வாறு சொல்லாக்கத்தில் எழுத்துக்கள் பயின்றுவரும் முறைமை எழுத்துக்களின் பரம்பல் எனக்குறிப்பிடப்படுகிறது.

### முதல்நிலை எழுத்துக்கள்

சொல்லாக்கத்தில் எழுத்துக்கள் பயின்றுவரும் முறைமையின் அடிப்படையில் அவற்றை முதல்நிலை, இறுதிநிலை, இடைநிலை என மூன்று வகைப்படுத்தலாம். முதல்நிலை என்பது ஒரு எழுத்து சொல்லாக்கத்தில் சொல்லின் முதலில் இடம்பெறுவதைக் குறிக்கும்.

மொழி முதலில் வரும் எழுத்துக்கள் குறித்து நன்னூலார் கூறியுள்ளவை பின்வருமாறு:

**"பன்னீ ருயிருங் க ச த ந ப ம வ ய**
**ஞ ங வீ ரைந்துயிர் மெய்யு மொழிமுதல்."**

*(நன்னூல் காண்டிகையுரை: எழுத்ததிகாரம், நூற்பா- 102)*

அதாவது "பன்னிரண்டு உயிரெழுத்துக்களும் க முதல் ங ஈறாகச் சொல்லப்பட்ட பத்து உயிர்மெய் எழுத்துக்களும் சொல்லுக்கு முதலாகும்." என்கிறார் நன்னூலார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எ-டு: அடை, ஆடை, இடை, ஈடு, உடை, ஊடல், எடு, ஏடு, ஐயம், ஒதி, ஓதி, ஔவியம் எனவும் களி, சவடி, தளிர், நலம், படை, மலை, வளம், யவனர், ஞமலி, அங்ஙனம் எனவும் வரும்.

**"உ ஊ ஒ ஓ வலவொடு வம்முதல்."**
*(நன்னூல் காண்டிகையுரை: எழுத்ததிகாரம், நூற்பா- 103)*
அதாவது "உ, ஊ, ஒ, ஓ என்னும் நான்கும் அல்லாத எட்டு உயிர்களோடும் வகரமெய் சொல்லுக்கு முதலாகும்." என்கிறார் நன்னூலார்.

எ-டு: வளி, வாளி, விளி, வீறு, வெளி, வேளை, வைகல், வெளவு என வரும்.

**"அ ஆ உ ஊ ஓ ஔ யம்முதல்."**
*(நன்னூல் காண்டிகையுரை: எழுத்ததிகாரம், நூற்பா- 104)*
அதாவது "அ, ஆ, உ, ஊ, ஓ, ஔ என்னும் ஆறு உயிர்களோடும் யகரமெய் சொல்லுக்கு முதலாகும்." என்கிறார் நன்னூலார்.

எ-டு: யவனர், யானை, யுகம், யூகி, யோகி, யௌவனம் என வரும்.

**"அ ஆ எ ஒவ்வோ டாகும் ஞம்முதல்."**
*(நன்னூல் காண்டிகையுரை: எழுத்ததிகாரம், நூற்பா- 105)*
அதாவது "அ, ஆ, எ, ஒ என்னும் நான்கு உயிர்களோடும் ஞகர மெய் சொல்லுக்கு முதலாகும்." என்கிறார் நன்னூலார்.
எ-டு: ஞமலி, ஞாலம், ஞெகிழி, ஞொள்கிற்று என வரும்.

**"சுட்டியா வெகர வினாவழி யவ்வை
ஒட்டி ஙவ்வு முதலா கும்மே."**
*(நன்னூல் காண்டிகையுரை: எழுத்ததிகாரம், நூற்பா- 106)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது "சுட்டும் யா வினாவும் எகர வினாவுமாகிய இடைச் சொற்களின் பின், அகரத்தைச் சேர்ந்து ஙகர மெய் சொல்லுக்கு முதலாகும்." என்கிறார் நன்னூலார்.

எ-டு: அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம், எங்ஙனம், யாங்ஙனம் என வரும்.

நன்னூலாரின் மொழிமுதல் எழுத்துக்கள் குறித்த கருத்துக்கள் தற்காலத் தமிழில் பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகியிருப்பதை அவதானிக்கலாம். அவ்வாறான மாற்றங்கள் பின்வருமாறு:

தற்காலத்தில் தமிழ்ச் சொற்களில் தௌ மொழிமுதலில் வருவதில்லை. தமிழில் கலந்துள்ள அரபு முதலிய பிறமொழிச் சொற்களில் தௌ மொழிமுதலில் வருகின்றது.

எ-டு: தௌபீக், தௌஹீத்

க ச த ப ந ம ஆகிய எழுத்துக்களின் ஔகார வரிசை சொல்லாக்கத்தில் மிக அரிதாகவே பயன்படுகின்றது.

வகரம் 'ஓ' உடன் மொழி முதலில் வருகின்றது.

எ-டு: வோட்டு (vote) என்னும் ஆங்கிலச்சொல்லும் தற்காலத்தில் வழக்கத்தில் உள்ளது.

ஞமலி, ஞிமிறு, ஞொள்கு போன்ற பழந்தமிழ்ச் சொற்கள் இன்று வழக்கில் இல்லை. ஞகரம் ஆகாரத்துடன் மட்டுமே தற்காலத் தமிழில் முதல்நிலையில் வருகின்றது.

எ-டு: ஞாயிறு, ஞாலம், ஞாபகம், ஞானி

ட, ற, ர, ல ஆகிய மெய் எழுத்துக்கள் தமிழில் வந்து சேர்ந்த பிறமொழிச் சொற்களில் முதல்நிலையில் வருகின்றன.

எ-டு: ட- டப்பா, டாக்டர், டின், டீசல், டுமீல், டூப்பு, டை, டொபி, டோபி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ற- றங்குப்பெட்டி, றாக்கை, றிஸ்வான், றீப்பை, றெஜினா, றேடியோ, றைவர், றோட்டு (இலங்கை வழக்கு)

ர- ரசிகன், ராகவி, ரிஷபம், ரீங்காரம், ருசி, ரூட், ரெட்டி, ரேந்தை,

ல- லட்டு, லாடம், லிங்கம், லீலை, லுங்கி, லூசு, லைலா, லொத்தர், லோபி, லௌகீகம்

ஜ, ஷ, ஸ, ஹ ஆகிய கிரந்த எழுத்துக்களும் தமிழில் வந்து சேர்ந்த பிறமொழிச் சொற்களில் முதல்நிலையில் வருகின்றன.
எ-டு:

ஜ- ஜல்லிக்கட்டு, ஜனநாயகம், ஜாலம், ஜின், ஜீன், ஜென்மம், ஜேம்ஸ்

ஷ- ஷரத்து, ஷாகிரா

ஸ- ஸலாம், ஸாபிரா, ஸிராஜ்,

ஹ- ஹர்தால், ஹலால், ஹாபி, ஹிம்சை, ஹோமியோபதி

ங், ண், ஞ், ள், ழ் ஆகிய மெய் எழுத்துக்கள் சொல்லின் முதல் நிலையில் வருவதில்லை. எனினும் தத்தம் பெயரைச் சுட்டும்போது அவையும் சொல் முதலில் வருகின்றன.
எ-டு: ஙகரம், ணகரம், ளகரம், ழகரம்

சில எழுத்தாளர்கள் பிரஞ்சு நாட்டு அறிஞர்களின் பெயர்களைத் தமிழ்ப்படுத்தி எழுதும்போது ழகரத்தை முதல்நிலையில் பயன்படுத்துகின்றனர்.
எ-டு: ழான் லக்கான், ழீன் பால் சாத்ரே

பிறமொழிப் பெயர்கள் சிலவற்றை எழுதுகையில் தனிமெய்கள் சொல் முதலில் வருகின்றன.
எ-டு: ஸ்பெய்ன், ஸ்ரொக்ஹோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறுதிநிலை எழுத்துக்கள்

இறுதிநிலை என்பது ஒரு எழுத்து சொல்லாக்கத்தில் சொல்லின் இறுதியில் இடம்பெறுவதைக் குறிக்கும்.

மொழி ஈற்றில் வரும் எழுத்துக்கள் குறித்து நன்னூலார் கூறியுள்ளவை பின்வருமாறு:

**"ஆவி ஞணநமன யரலவ ழளமெய்**
**சாயு முகரநா லாறுமீறே"**

(நன்னூல் காண்டிகையுரை: எழுத்ததிகாரம், நூற்பா- 107)

அதாவது "தனித்தும் மெய்யோடும் வரும் பன்னிரண்டு உயிர்களும் ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள ஆகிய பதினொரு மெய்களும் குற்றியலுகரமும் ஆகிய இருபத்துநான்கெழுத்தும் மொழிக்கு ஈறாகும்." என்கிறார் நன்னூலார்.

எ-டு: ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ எனவும் விள, பலா, கரி, தீ, கடு, பூ, சேஎ, தே, தை, நொ, போ, கௌ எனவும் உரிஞ், மண், பொருந், மரம், பொன், வேய்,வேர், வேல், தெவ், வீழ், வாள், அஃகு எனவும் வரும்.

**"குற்றுயி ரளபி னீறா மெகரம்**
**மெய்யோ டேலா தொந் நவ்வொ டாமௌ**
**ககர வகரமோ டாகு மென்ப."**

(நன்னூல் காண்டிகையுரை: எழுத்ததிகாரம், நூற்பா- 108)

அதாவது "அ, இ, உ, எ, ஒ என்னும் குற்றுயிர்கள் அளபெடையிலே வரிவடிவில் அறிகுறியாகத் தனித்து ஈறாகும். எகரம் மெய்யோடு ஈறாகாது. ஒகரம் நகர மெய்யோடு ஈறாகும். ஔகாரங் ககர வகரங்களிரண்டுடனும் ஈறாகும்." என்கிறார் நன்னூலார்.

எ-டு: பலாஅ, தீஇ, பூஉ, சேஎ, கைஇ, கோஒ, கௌஉ எனவும் நொ எனவும் கௌ, வௌ எனவும் வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நின்ற நெறியே யுயிர்மெய் முதலீறே."
(நன்னூல் காண்டிகையுரை: எழுத்ததிகாரம், நூற்பா- 109)
அதாவது "மெய் முன்னும் உயிர் பின்னுமாக ஒலித்து நின்ற வழியே உயிர்மெய்க்கு மெய் முதலாகும், உயிர் ஈறாகும்." என்கிறார் நன்னூலார்.

நன்னூலாரின் மொழி ஈற்று எழுத்துக்கள் குறித்த கருத்துக்கள் தற்காலத் தமிழில் பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகி யிருப்பதை அவதானிக்கலாம். அவ்வாறான மாற்றங்கள் பின்வருமாறு:

எ, ஒ, ஒள ஆகிய உயிர் எழுத்துக்கள் சொல்லாக்கத்தில் இறுதிநிலையில் வருவதில்லை.

ஒளகாரம் பழந்தமிழில் கௌ, வௌ ஆகிய சொற்களில் மட்டும் இறுதியில் இடம்பெற்றது. இச்சொற்கள் கௌவு, வௌவு என பிற்காலத்தில் வடிவ மாற்றம் அடைந்தன.

ஏகாரம் இடைச்சொல்லாகவே இறுதிநிலையில் இடம் பெறுகின்றது.
எ-டு: நானே, அவனே

ஓகாரம் பெரும்பாலும் இடைச்சொல்லாகவே இறுதிநிலையில் இடம் பெறுகின்றது.
எ-டு: நீயோ, யாரோ, அறிந்தோ, அறியாமலோ

தற்காலத்தில் வ், ஞ், ந் ஆகிய மெய்கள் சொல் இறுதியில் இடம்பெறுவதில்லை. தற்காலத் தமிழில் பிறமொழிச் சொற்கள், இடப் பெயர்கள், ஆட்பெயர்களை எழுதும்போது வகர மெய் இறுதியில் இடம்பெறுகின்றது.
எ-டு: கொர்பச்சேவ், எண்டனோவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ச் சொற்களில் வல்லின மெய்கள் இறுதிநிலையில் வருவதில்லை. தற்காலத் தமிழில் பிறமொழிச் சொற்கள், இடப் பெயர்கள், ஆட்பெயர்களை எழுதும்போது இவையும் இறுதியில் இடம்பெறுகின்றன. எ-டு:

க்- ஈராக், பேங்கொக், கேக்
ச்- சூரிச், கிறீன்விச்
ட்- லெனின்கிறாட், டேவிட்
த்- பாக்தாத், அரபாத்
ப்- ஜோசப், அஷ்ரஃப்
ற்- பெற்றியற், பெப்பர்மின்ற்

பிறமொழிப் பெயர்களைத் தமிழில் எழுதும்போது ஜ், ஷ், ஹ், ஸ் ஆகிய கிரந்த எழுத்துக்களும் தற்காலத் தமிழில் சொல் இறுதியில் வருகின்றன.

ஜ்- ஜோர்ஜ், மின்ஹாஜ், மிஹ்ராஜ்
ஷ்- புஷ், ரமேஷ்,
ஹ்- அல்லாஹ், பாராஹ், சாராஹ்
ஸ்- பெர்ணாண்டஸ், றமீஸ், பீரிஸ், மார்க்ஸ்

தென்கிழக்காசிய இடப்பெயர்கள், ஆட்பெயர்களை எழுதும்போது தற்காலத் தமிழில் ஙகர மெய்யும் இறுதிநிலையில் இடம்பெறுகின்றது.

எ-டு: ஹொங்கொங், பீஜிங், மாஓசேதுங்

தமிழ் எழுத்து முறைமை, உச்சரிப்பு முறைமை, எழுத்துக் கூட்டல் முதலானவற்றுக்கு எம்.ஏ. நுஃமானின் 'அடிப்படைத் தமிழ் இலக்கணம்' என்ற இலக்கண நூலைக் கருத்திற் கொள்க.

## ७.२ அடிப்படைப் புணர்ச்சி விதிகள்

சொல்லின் உறுப்புக்கள் அல்லது சொற்கள் ஒன்றோடொன்று இணைந்து வருவது புணர்ச்சி எனப்படுகிறது.

சொல்லின் பகுதிகள் அல்லது சொற்கள் ஒன்றுடன் ஒன்று இணைந்து வரும் அமைப்பை அடிப்படையாகக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புணர்ச்சியை அகப்புணர்ச்சி, புறப்புணர்ச்சி என மொழியியலாளர் நோக்குவர்.

## அகப்புணர்ச்சி:

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சொல்லின் உறுப்புக்கள் இணைந்து ஒரு சொல்லாக அமைவது அகப்புணர்ச்சி எனப்படும். எ-டு: போ + ன் + ஓம் = போனோம்

## புறப்புணர்ச்சி:

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சொற்கள் சொற்றொடராகவோ அல்லது வாக்கியமாகவோ இணைவது புறப்புணர்ச்சி எனப்படும்.

எ-டு: கடற்கரை + ஓரம் + காற்றுவாங்க + போனோம்
கடற்கரையோரம் காற்றுவாங்கப் போனோம்

அகப்புணர்ச்சியில் சொல் உறுப்புக்கள் இடைவெளியின்றி புணர்ச்சி விகாரங்களுடன் இணைத்து எழுதப்படுகின்றன. புறப்புணர்ச்சியில் சொற்கள் இடைவெளிவிட்டு பெரும்பாலும் புணர்ச்சி விகாரங்கள் இன்றி பிரித்து எழுதப்படுகின்றன.

## இயல்புப் புணர்ச்சி:

நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் புணரும்போது நிலைமொழி, வருமொழி வடிவங்களில் எவ்வித மாற்றமும் ஏற்படாமல் புணர்ந்தால் அது இயல்புப் புணர்ச்சியாகும்.

எ-டு: வீடு + கள் = வீடுகள்
குடி + நீர் = குடிநீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### விகாரப்புணர்ச்சி:

நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் புணரும்போது நிலைமொழி அல்லது வருமொழி வடிவங்களில் ஏதாவது மாற்றம் ஏற்பட்டால் அது விகாரப் புணர்ச்சியாகும்.
எ-டு: கடல் + கரை = கடற்கரை

விகாரப்புணர்ச்சி தோன்றல் விகாரம், திரிதல் விகாரம், கெடுதல் விகாரம் என மூவகைப்படும்.
தோன்றல்: பலா + பழம் = பலாப்பழம்
திரிதல்: பால் + குடம் = பாற்குடம்
கெடுதல்: சேரர் + சோழர் + பாண்டியர் = சேர சோழ பாண்டியர்

### வேற்றுமைப் புணர்ச்சி - அல்வழிப் புணர்ச்சி:

எழுவாய் வேற்றுமையும் விளி வேற்றுமையும் தவிர்ந்த ஐ, ஆல், கு, இன், அது, கண் முதலிய வேற்றுமை உருபுகள் வெளிப்படையாகவும் மறைவாகவும் வருமாறு சொற்கள் புணர்வது வேற்றுமைப் புணர்ச்சி எனப்படும். அவ்வேற்றுமைப் புணர்ச்சி தவிர்ந்த எல்லா வகைப் புணர்ச்சிகளும் அல்வழிப் புணர்ச்சி எனப்படும்.

### உயிரீற்றுப் புணர்ச்சியும் மெய்யீற்றுப் புணர்ச்சியும்

நிலைமொழி ஈறு, வருமொழி முதல் எழுத்துக்களை அடிப்படையாகக் கொண்டு தமிழில் சொற்கள் புணரும் அமைப்பை நான்கு வகையாக நோக்கலாம். அவையாவன:

உயிர் + உயிர் - அலை + ஓசை = அலையோசை
உயிர் +மெய் - அலை + கடல் = அலைகடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய் + மெய் - கடல் + கரை = கடற்கரை
மெய் + உயிர் - கடல் + அலை = கடலலை

மேற்குறித்த அமைப்பில் நிலைமொழி ஈற்றினை மையமாகக் கொண்டு புணர்ச்சியைப் பிரதானமாக இருவகைப்படுத்துவர். அவையாவன:
அ) உயிரீற்றுப் புணர்ச்சி
ஆ) மெய்யீற்றுப் புணர்ச்சி

## உயிரீற்றுப் புணர்ச்சி

நிலைமொழி ஈற்றெழுத்து உயிராகவும் வருமொழி முதல் எழுத்து உயிர் அல்லது மெய்யாகவும் இருக்க சொற்கள் புணர்வது உயிரீற்றுப் புணர்ச்சி எனப்படும். இது
உயிர் முன் உயிர் புணர்தல்
உயிர் முன் மெய் புணர்தல் என இரு வகையாக அமையும்.

## உயிர் முன் உயிர் புணர்தல்

நிலைமொழி இறுதியில் உயிரும் வருமொழி முதலில் உயிரும் வந்தால் இடையில் யகர மெய் அல்லது வகர மெய் தோன்றிப் புணரும். இவ்வாறு தோன்றும் மெய்யை உடம்படுமெய் என்பர். இது குறித்து நன்னூலார் பின்வருமாறு குறிப்பிடு கின்றார்.
"இ ஈ ஐவழி யவ்வு மேனை
உயிர்வழி வவ்வு மேமுனிவ் விருமையும்
உயிர்வரி னுடம்படு மெய்யென் றாகும்."
(நன்னூல் நூற்பா - 162)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யகர மெய் தோன்றுதல்:

நிலைமொழி இறுதியில் இ, ஈ, ஐ ஆகிய உயிர்களுள் ஏதாவது ஒன்று வந்தால் வருமொழி முதலில் எந்த உயிர் வந்தாலும் யகரமெய் உடம்படு மெய்யாகத் தோன்றும். எ-டு:

கிளி + ஐ - கிளி + ய் + ஐ - கிளியை
தீ + ஐ - தீ + ய் + ஐ - தீயை
பனை + ஐ - பனை + ய் + ஐ - பனையை
எலி + ஆல் - எலி + ய் + ஆல் - எலியால்
ஈ + ஆல் - ஈ + ய் + ஆல் - ஈயால்
பூனை + ஆல் - பூனை + ய் + ஆல் - பூனையால்

### வகர மெய் தோன்றுதல்:

இ, ஈ, ஐ மூன்றும் தவிர மொழி இறுதியில் வரும் உயிர் எழுத்துகளுள் ஏதாவது ஒன்று நிலைமொழி இறுதியில் வந்தால், வருமொழி முதலில் எந்த உயிர் வந்தாலும் வகரமெய் உடம்படு மெய்யாகத் தோன்றும். எ-டு:

பலா + ஐ - பலா + வ் + ஐ - பலாவை
பசு + ஐ - பசு + வ் + ஐ - பசுவை
பூ + ஐ - பூ + வ் + ஐ - பூவை
பலா + ஆல் - பலா + வ் + ஆல் - பலாவால்
பசு + ஆல் - பசு + வ் + ஆல் - பசுவால்
பூ + ஆல் - பூ + வ் + ஆல் - பூவால்

### குற்றியலுகரப் புணர்ச்சி:

குற்றியலுகர ஈற்றுச் சொற்களுக்கு முன் வருமொழி முதலில் உயிர் எழுத்து வந்தால், குற்றியலுகரம் கெட்டுப் புணரும். ஆறு வகையான குற்றியலுகரமும் புணர்ச்சியில் கெடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நெடில்தொடர் காசு + ஐ -காசை
- ஆய்தத்தொடர் எஃகு + ஐ -எஃகை
- உயிர்த்தொடர் விறகு + ஐ -விறகை
- வன்தொடர் நாக்கு + ஐ -நாக்கை
- மென்றொடர் பஞ்சு + ஐ -பஞ்சை
- இடைத்தொடர் மார்பு + ஐ -மார்பை

பழந்தமிழில் முற்றியலுகரமாகக் கருதப்பட்ட ஆனால் தற்காலத்தில் குற்றியலுகரமாக ஒலிக்கும் பின்வரும் சொற்களில் வரும் ஈற்றுகரம் கெடும்.

அது, இது, எது
அது + ஐ - அதை
இது + ஐ - இதை
எது + ஐ - எதை

கதவு, வளவு, கனவு....
கதவு + ஐ - கதவை
வளவு + ஐ - வளவை
கனவு + ஐ - கனவை

இருமு, தும்மு, எண்ணு....
உருமு + அல் - உருமல்
தும்மு + அல் - தும்மல்
எண்ணு + அல்- எண்ணல்

மேற்காட்டிய எடுத்துக்காட்டுகள் எல்லாம் அகப்புணர்ச்சிக் குரியவை. புறப்புணர்ச்சியில் தற்காலத்தமிழில் உயிர்முன் பெரும்பாலும் குற்றியலுகரம் கெடுவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிர் முன் மெய் புணர்தல்

இதனை இரண்டாக வகுத்து நோக்கலாம். ஒன்று உயிர் முன் வல்லினம் புணர்தல். மற்றொன்று உயிர்முன் மெல்லினம் அல்லது இடையினம் புணர்தல்

### உயிர் முன் வல்லினம் புணர்தல்:

க், ச், த், ப் ஆகிய வல்லின மெய்கள் உயிரீற்றுப் புணர்ச்சியில் மிகும் இடங்கள் கீழே விளக்கப்படுகின்றன. அகப் புணர்ச்சி, புறப் புணர்ச்சி இரண்டிலும் இவை மிகுகின்றன.

அ, இ, எ ஆகிய சுட்டு, வினா எழுத்துக்களை அடுத்து வரும் வல்லினம் மிகும். (உ-ம்)

அ + காலம் - அக்காலம்
அ + படம் - அப்படம்
இ + காலம் - இக்காலம்

அந்த, இந்த, எந்த ஆகிய சுட்டு, வினாச்சொற்களை அடுத்து வரும் வல்லினம் மிகும். (உ-ம்)

அந்த + படம் - அந்தப் படம்
இந்த + புத்தகம் - இந்தப் புத்தகம்
எந்த+ குழந்தை - எந்தக் குழந்தை

செய்ய என்னும் வாய்ப்பாட்டு அகர ஈற்று வினை எச்சத்தை அடுத்து வரும் வல்லினம் மிகும். (உ-ம்)

செய்ய + சொன்னான் - செய்யச் சொன்னான்
போக + பார்த்தேன் - போகப் பார்த்தேன்
சொல்ல + தொடங்கினான் - சொல்லத் தொடங்கினான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகார ஈற்று எதிர்மறைப் பெயரெச்சத்தை அடுத்து வரும் வல்லினம் மிகும். (உ-ம்)

தீரா + பசி - தீராப்பசி

மாறா + காதல் - மாறாக்காதல்

மீளா + துயில் - மீளாத்துயில்

நீங்கா + சுமை - நீங்காச்சுமை

இகர ஈற்று வினை எச்சத்தை அடுத்து வரும் வல்லினம் மிகும். (உ-ம்)

ஓடி + போனான் - ஓடிப் போனான்

காட்டி + கொடுத்தான் - காட்டிக் கொடுத்தான்

அப்படி, இப்படி, எப்படி, இனி ஆகிய வினையடைகளை அடுத்து வரும் வல்லினம் மிகும். (உ-ம்)

அப்படி + சொன்னார் - அப்படிச் சொன்னார்

இப்படி + பார்த்தான் - இப்படிப் பார்த்தான்

எப்படி + கேட்டான் - எப்படிக் கேட்டான்

இனி + தூங்கலாம் - இனித் தூங்கலாம்

இரண்டாம் வேற்றுமை உருபு ஏற்ற பெயர்ச் சொற்களை அடுத்து வரும் வல்லினம் மிகும். (உ-ம்)

என்னை + பார்த்தான் - என்னைப் பார்த்தான்

நாயை + துரத்து - நாயைத் துரத்து

நான்காம் வேற்றுமை உருபு ஏற்ற பெயர்ச் சொற்களை அடுத்து வரும் வல்லினம் மிகும். (உ-ம்)

அவருக்கு + சொன்னான் - அவருக்குச் சொன்னான்

பாம்புக்கு + பயந்தேன் - பாம்புக்குப் பயந்தேன்

வன்றொடர்க் குற்றியலுகரத்தை அடுத்து வரும் வல்லினம் மிகும். (உ-ம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டு + பாடு - பாட்டுப் பாடு
நேற்று + பார்த்தேன் - நேற்றுப் பார்த்தேன்

வேற்றுமைத் தொகைச் சொற்களில் உயிரீற்றை அடுத்து வரும் வல்லினம் மிகும். (உ-ம்)

யானை + பாகன் - யானைப் பாகன்
குருவி + கூடு - குருவிக் கூடு

வினைத்தொகை தவிர்ந்த தொகைச் சொற்களில் பெரும்பாலும் வல்லினம் மிகும். (உ-ம்)

-தீப்பெட்டி -உழவுத்தொழில்
-கைக்குட்டை -பண்புத்தொகை
-இராப்பகல் - வீட்டுத்தோட்டம்

அங்கு, இங்கு, எங்கு ஆகிய சொற்களை அடுத்து வரும் வல்லினம் மிகும் என பழைய இலக்கண நூல்கள் கூறும். (உ-ம்)

-அங்குச் சென்றேன் -இங்குச் சென்றேன்
-எங்குச் சென்றாய்

ஆனால் தற்காலத் தமிழில் வல்லினம் மிகாமல் எழுதுவதே பெருவழக்கு. (உ-ம்)

-அங்கு சென்றேன் -இங்கு சென்றேன்
-எங்கு சென்றாய்

பெயரெச்சம், பெயரடை ஆகியவற்றை அடுத்து வல்லினம் மிகுவதில்லை. (உ-ம் : வந்த பையன், நல்ல கவிதை). தற்காலத்தில் தமிழ்நாட்டு எழுத்தாளர் சிலர் நவீனக் கவிதை, நவீனத் தமிழ் என எழுதுகிறார்கள். இது வேண்டாத புணர்ச்சியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உயிர்முன் மெல்லினம் அல்லது இடையினம் புணர்தல்:

அ, இ, எ ஆகிய சுட்டு வினா எழுத்துக்களின் முன் வரும் ஞ, ந, ம ஆகிய மெல்லின எழுத்துக்கள் மிகும். அகரம் வந்தால் வகரம் மிகும்.

அ + வீடு - அவ்வீடு
அ + மனிதன் - அம்மனிதன்
அ + ஞானம் - அஞ்ஞானம்
அ + யானை - அவ்யானை

ஏனைய எல்லா இடங்களிலும் இயல்பாகப் புணரும்.

எந்த + நூல் - எந்த நூல்
அந்த + மனிதன் - அந்த மனிதன்
பெரிய + யானை - பெரிய யானை

## 7.3 மூவிடப் பெயர்கள்

தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூவிடங்களையும் குறித்துவரும் பெயர்கள் மூவிடப் பெயர்கள் எனப்படுகின்றன. ஒரு உரையாடலில் பேசுவோன் - தன்மை என்றும் கேட்போன் - முன்னிலை என்றும் பேசப்படும் பொருள் - படர்க்கை என்றும் குறிக்கப்படுகிறது. அவ்வகையில்

பேசுவோனைச் சுட்டும் பெயர் தன்மைப் பெயர்.
கேட்போனைச் சுட்டும் பெயர் முன்னிலைப் பெயர்.
பேசப்படுவதைச் சுட்டும் பெயர் படர்க்கைப் பெயர்.

### தன்மைப் பெயர்

தற்காலத் தமிழில் நான், நாம், நாங்கள் ஆகிய மூன்று தன்மைப் பெயர்கள் வழக்கில் உள்ளன. பழந்தமிழில் யான், யாம், யாங்கள் ஆகிய தன்மைப் பெயர்கள் வழக்கிலிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்காலத்தில் ஒரோவிடத்து சிலர் இதனைப் பயன்படுத்து கின்றனர்.

நான் - தன்மை ஒருமை

நாம், நாங்கள் - தன்மைப் பன்மை

வேற்றுமை உருபுகளை ஏற்கும்போது இவை முறையே என், எம், எங்கள் என மாற்றமடைகின்றன.

நான் + ஐ - என் + ஐ = என்னை

நாம் + ஐ - எம்+ ஐ = எம்மை

நாங்கள்+ ஐ - எங்கள்+ ஐ = எங்களை

**உளப்பாட்டுத் தன்மைப் பன்மை - உளப்படுத்தாத் தன்மைப் பன்மை**

பொதுவாக நாம், நாங்கள் இரண்டும் தன்மைப் பன்மைப் பெயர்கள். எனினும் பயன்பாட்டில் இவையிரண்டுக்கும் இடையே வேறுபாடு உண்டு.

இது நமது பாடசாலை. - இந்த் வாக்கியம் பேசுவோனையும் கேட்போரையும் உள்ளடக்குவதால் உளப்பாட்டுத் தன்மைப் பன்மை.

இது எங்கள் பாடசாலை. இவ்வாக்கியம் பேசுவோனை உள்ளடக்கும் கேட்போரை உள்ளடக்காது. அதனால் இது உளப்படுத்தாத் தன்மைப் பன்மை.

சில பிரதேசப் பேச்சு வழக்கிலே நாம், நாங்கள் ஆகிய சொற்களிடையே வேறுபாடு காணப்படுவதில்லை.

**முன்னிலைப் பெயர்**

நீ, நீங்கள், தாங்கள் ஆகியன ஒரு உரையாடலில் கேட்போனைச் சுட்டுவதனால் அவை முன்னிலைப் பெயர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்காலத் தமிழில் நீ, நீங்கள், தாங்கள் ஆகியனவே முன்னிலைப் பெயர்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. சில பிரதேசக் கிளைமொழிகளில் நீர் என்ற பெயர் பயன்படுத்தப்படுகின்றது. நீயிர், நீவிர், எல்லீர் ஆகியன பழந்தமிழில் முன்னிலைப் பெயர்களாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

முன்னிலைப் பெயர்களில்

நீ - ஒருமைப் பெயர்(சமமரியாதை, அந்தஸ்துக் குறைந்தவர்களைக் குறிப்பிடவும்)

நீங்கள் - பன்மைப் பெயர், மரியாதை ஒருமைப் பெயர்

தாங்கள் - அதி உயர் மரியாதை ஒருமைப்பெயர்

நீ எனும் முன்னிலை ஒருமை கிழக்கு, மலையகப் பகுதிகளில் பாசமிகுதியால் பெரியோரைச் சுட்ட பயன்படுகிறது. உ-ம் : அம்மா நீ எங்கே போகிறாய்

## படர்க்கைப் பெயர்

படர்க்கைப் பெயர்கள் அ, இ ஆகிய சுட்டடியாகப் பிறக்கின்றன. தன்மை, முன்னிலைப் பெயர்களில் உயர்திணை - அஃறிணை வேறுபாடில்லை. படர்க்கைப் பெயர்களில் உயர்திணை - அஃறிணை வேறுபாடுண்டு. தன்மை, முன்னிலைப் பெயர்களில் ஆண்பால் - பெண்பால் வேறுபாடில்லை. படர்க்கைப் பெயர்களில் ஆண்பால் - பெண்பால் வேறுபாடுண்டு. முன்னிலைப் பெயர்களைப் போல் படர்க்கைப் பெயர்களிலும் மரியாதை உணர்த்தும் பெயர், மரியாதை உணர்த்தாப் பெயர் வேறுபாடுண்டு.

இவன், இவள் முதலிய படரக்கைப் பெயர்கள் பேசுவோனுக்கு அண்மையில் இருப்போரையும் அவன், அவள் முதலிய படர்க்கைப் பெயர்கள் பேசுவோன், கேட்போன் ஆகியோருக்குச் சேய்மையில் இருப்போரையும் சுட்டுவன. (பழந்தமிழில் உ என்ற இடைச்சுட்டின் அடியாகப் பிறந்த உவன், உவள், உவர், உவர்கள், உது, உவை ஆகிய படர்க்கைப் பெயர்களும் வழங்கின. தற்காலத்தில் இவற்றை யாழ்ப்பாணப் பேச்சுவழக்கில் அவதானிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர், அவர் ஆகியவற்றை தமிழ் இலக்கண நூல்கள் படர்க்கைப் பண்மைகளாகக் குறிப்பிடுகின்றன. ஆனால் இவை தற்காலத்தில் மரியாதை ஒருமையில் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. இவை எழுத்துத் தமிழில் ஆண், பெண் இருபாலாருக்கும் பொதுவானவை.

## 7.4 தமிழில் வேற்றுமைகள்

வாக்கியத்தில் பெயர்சொற்களின் இலக்கணத் தொழிற்பாடு வேறுபடுவது வேற்றுமை எனப்படும். இலக்கணத் தொழிற்பாடு என்பது ஒரு வாக்கியத்தில் ஒரு பெயர்ச்சொல்லுக்கும் வினைச்சொல்லுக்கும் இடையிலுள்ள வாக்கிய ரீதியான உறவைக் குறிக்கும்.

எடுத்துக்காட்டாக: 'இராமன் கண்ணனைப் பார்த்தான்' என்னும் வாக்கியத்தில் 'இராமன்' 'கண்ணன்' என்னும் இரண்டு பெயர்சொற்கள் உள்ளன. இவ்விரு பெயர்ச்சொற்களும் 'பார்' என்னும் வினையுடன் வாக்கிய ரீதியாக எழுவாய் - செயப்படுபொருள் என்னும் வகையில் உறவு கொண்டுள்ளன. அதாவது 'இராமன்' எழுவாயாகவும் 'கண்ணன்' செயப்படுபொருளாகவும் தொழிற்படுகின்றன. 'பார்த்தான்' என்னும் செயலைப் புரிபவன் 'இராமன்'. அந்தச் செயலுக்கு உட்படுபவன் 'கண்ணன்'. 'பார்' என்னும் வினைச்சொல்லோடு இவ்விரு பெயர்ச் சொற்களும் கொண்டுள்ள இந்த உறவின் அடிப்படையிலேயே இந்த வாக்கியத்தின் பொருள் புரிந்து கொள்ளப்படுகிறது.

'இராமன் கண்ணனைப் பார்த்தான்' என வாக்கியம் அமையும் போது பார்த்தவனும் பார்க்கப்பட்டவனும் வேறுபடுகிறார்கள். அதாவது இவ்வாக்கியத்தில் 'கண்ணன்' எழுவாய் 'இராமன்' செயப்படுபொருள் என மாறுகின்றன. இவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்கியத்தில் உள்ள வினைக்கும் பெயர்ச்சொற்களுக்கும் இடையிலுள்ள இலக்கண உறவு வேறுபடும்போது வாக்கியத்தின் பொருள் வேறுபடுகின்றது. இந்த வேறுபாடே வேற்றுமை எனப்படுகின்றது.

தமிழில் வேற்றுமை எத்தனை என்பதில் கருத்து வேறுபாடு உள்ளது. தொல்காப்பியம் தமிழில் வேற்றுமை ஏழு என்றும் விளி வேற்றுமையுடன் சேர்த்து எட்டு என்றும் கூறும். நன்னூலும் வேற்றுமை எட்டு எனக் கூறும். வேற்றுமை குறித்து நன்னூலார் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

**"ஏற்கு மெவ்வகைப் பெயர்க்குமீ றாய்ப்பொருள்**
**வேற்றுமை செய்வன எட்டே வேற்றுமை"**

*(நன்னூல் காண்டிகையுரை: சொல்லதிகாரம், நூற்பா-291)*

அதாவது "தம்மை ஏற்றுக் கொள்ளக்கூடிய எவ்வகைப்பட்ட பெயர்களுக்கும் இறுதியிலே நின்று, அப்பெயரின் பொருளை வேற்றுமைப்படுத்துகின்ற வேற்றுமைகள் எட்டு ஆகும்" எனக் கூறுகின்றார். இது தன்னை ஏற்ற பெயரின் பொருளை வேற்றுமை செய்யும் உருபாதலால் 'வேற்றுமை' என்ற காரியவாகு பெயரைப் பெற்றுள்ளது. வேற்றுமை செய்தல் என்பது வேறு பொருள் தரச்செய்தல் என்பதாகும்.

விளி வேற்றுமையானது பெயரது விகாரம் எனக் கொண்டு அதனை முதல்வேற்றுமையுடன் சேர்த்து வேற்றுமை ஏழெனச் சிலர் கொள்வதனால், அவருடைய கருத்தினை மறுத்து 'எட்டே வேற்றுமை' என்று நன்னூலார் அடித்துக் கூறுகின்றார்.

பிற்கால மொழி ஆய்வாளர்கள் தமிழில் வேற்றுமை எட்டை விட அதிகம் என்பர். தமிழ் இலக்கணக்காரர் கூறும் வேற்றுமைப் பாகுபாட்டின் குறைகள் சிலவற்றை அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டிக்காட்டியுள்ளனர். குறிப்பாக, மூன்றாம் வேற்றுமை என்று தமிழ் இலக்கண நூல்கள் கூறும் வேற்றுமையை இரண்டு வேற்றுமைகளாகக் கொள்ள வேண்டும் என்பர். அவ்வகையில் தமிழில் வேற்றுமை ஒன்பது எனக் கருதுவர்.

வேற்றுமைக்கு எவ்வாறு பெயரிடுவது என்பது தொடர்பாகவும் கருத்து வேறுபாடு உண்டு. வேற்றுமைகளை வரிசைப்படுத்தி முதலாம் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை, மூன்றாம் வேற்றுமை எனக் கூறும் மரபு உண்டு. தொல்காப்பியம் முதலாம் வேற்றுமையை எழுவாய் வேற்றுமை என்று வேற்றுமைப் பொருள் அடிப்படையிலும், ஏனைய வேற்றுமைகளை வரிசைப்படுத்தி ஐ வேற்றுமை, ஒடு வேற்றுமை, கு வேற்றுமை என்று உருபு அடிப்படையிலும் பெயரிட்டு அழைக்கின்றது. தற்கால மொழியியலாளர்கள் வேற்றுமைப் பொருளின் அடிப்படையில் எழுவாய் வேற்றுமை, செயப்படுபொருள் வேற்றுமை, கருவி வேற்றுமை என வகைப்படுத்துவர். நன்னூலார் வேற்றுமையின் பெயரையும் முறையையும் பின்வருமாறு கூறுகின்றார்.

**"பெயரே ஐ ஆல் கு இன் அது கண்**
**விளியென் றாகு மவற்றின் பெயர்முறை"**
(நன்னூல் காண்டிகையுரை: சொல்லதிகாரம், நூற்பா-292)

முன்னர் குறிப்பிட்ட எட்டு வேற்றுமைகள் எனப்பட்டவற்றின் முறையாவன: பெயர், ஐ, ஆல், கு, இன், அது, கண், விளி என்றாகும். விகாரப்பாடற்ற பெயரே முதல்வேற்றுமை யாதலினால் 'பெயரே' எனக் குறிப்பிட்டுள்ளார். விளித்தற் பொருளுடையதாகையால் எட்டாம் வேற்றுமையை 'விளி' என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுவாய் வேற்றுமை:

இதனை முதலாம் வேற்றுமை என இலக்கண நூல்கள் கூறும். ஒரு பெயர்ச்சொல் வாக்கியத்தில் எழுவாயாகச் செயற்படுவது எழுவாய் வேற்றுமை எனப்படும். எழுவாய் வேற்றுமைக்கு உருபு இல்லை. உருபு ஏற்காத பெயர்ச்சொல்லே எழுவாயாகச் செயற்படுகின்றது.

கண்ணன் வந்தான்.
நான் அழுதேன்.
மரம் விழுந்தது.

ஆகிய வாக்கியங்களில் கண்ணன் நான் மரம் ஆகிய பெயர்ச்சொற்கள் எழுவாயாக உள்ளன. இவை திரிபு அடையாத பெயர்ச்சொற்கள். கண்ணன் ஒரு ஆசிரியன் என்னும் வாக்கியத்தில் கண்ணன் ஆசிரியன் ஆகிய இரண்டு சொற்களும் திரிபு அடையாத சொற்களே. திரிபு அடையாத சொற்கள் எல்லாம் எழுவாய் ஆவதில்லை. இவ்வாக்கியத்தில் கண்ணன் என்பதே எழுவாய், ஆசிரியன் பயனிலை. இதனைப் பெயர்ப் பயனிலை என்போம். ஒரு வாக்கியத்தில் ஒன்றுக்கு அதிகமான பெயர்ச்சொற்கள் இருக்கலாம். இராமன் சீதையோடும் இலக்குமணனோடும் காட்டுக்குப் போனான். இந்த வாக்கியத்தில் இராமன், சீதை, இலக்குமணன், காடு ஆகிய நான்கு பெயர்ச்சொற்கள் உள்ளன. இதில் எழுவாய்ப் பெயர் எது? திரிபு இல்லாத பெயர் என்னும் வகையில் இராமன் என்பதே எழுவாய் எனக் கூறலாம். ஆனால் இராமன், சீதை, இலக்குமணன் ஆகியோரோடு காட்டுக்குப் போனான். இந்த வாக்கியத்தில் இராமன், சீதை, இலக்குமணன் ஆகிய மூன்று பெயர்களும் திரிபடையவில்லை. இவற்றுள் எழுவாய் வேற்றுமைப் பெயரை எப்படி அறிவது? போனான் என்னும் வினையோடு திணை, பால், எண், இட உறவுகொண்டுள்ள பெயரே எழுவாய் வேற்றுமைப் பெயர் அல்லது எழுவாய் எனக் கூறலாம். மேலுள்ள வாக்கியத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இராமன்' என்பதே 'போனான்' என்பதுடன் திணை, பால், எண், இட உறவு கொண்டுள்ளது. ஆகவே 'இராமன்' என்பதே இவ்வாக்கியத்தில் எழுவாய் என்று தீர்மானிக்கலாம். ஒரு வாக்கியத்தின் பயனிலையுடன் திணை, பால், எண், இட உறவு கொண்டுள்ள பெயரே அதன் எழுவாய் என பொதுவாகக் கூறலாம்.

## எழுவாய்க்கு செல்லுருபு உண்டா?

எழுவாய்க்கு உருபு இல்லை. நன்னூலார் எழுவாய் வேற்றுமை தொடர்பில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

**"அவற்றுள்**
**எழுவா யுருபு திரிபில் பெயரே**
**வினைபெயர் வினாக்கொள லதன்பய னிலையே"**
(நன்னூல் காண்டிகையுரை: சொல்லதிகாரம், நூற்பா-295)

முன் சொல்லப்பட்ட எட்டு வேற்றுமைகளுள் முதலாம் வேற்றுமையின் உருபு ஐ முதலிய உருபேற்றுத் திரிதலில்லாத பெயரே ஆகும். வினையையும் பெயரையும் வினாவையும் கொள்ள வருதல் அதன் பயனிலையாகும். எனவே, எழுவாய்க்கு உருபில்லை எனலாம்.
சாந்தன் வந்தான் - வினை கொண்டு வந்தது
வீரன் அவன் - பெயர் கொண்டு வந்தது
அவன் யார்? – வினாக் கொண்டு வந்தது
**'எழுவாய் உருபு திரிபில் பெயரே'** என நன்னூல் கூறும். (உருபு ஏற்று) திரிபு அடையாத பெயரே எழுவாய் என்பது இதன் பொருள். எனினும் சில பாடநூல் ஆசிரியர்கள் எழுவாய்க்குச் சொல்லுருபு உண்டு என கூறியுள்ளனர். என்பவன், என்பவள், என்பவர், என்பது, என்பவை, ஆனவன், ஆனவள், ஆனவர் முதலியவை எழுவாயின் சொல்லுருபுகள் என இவர்கள் கூறுவர். இது தவறான கருத்தாகும். உண்மையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை எழுவாயின் சொல்லுருபுகள் அல்ல. இவையும் பெயர்ச்சொற்களே. வாக்கியத்தில் ஒரு தலைமைப் பெயரை அடுத்து வந்து அதனை அறிமுகம் செய்யும் பணியை இவை செய்கின்றன. எடுத்துக்காட்டாக,

குமரன் உங்களைத் தேடி வந்தார்.

குமரன் என்பவர் உங்களைத் தேடி வந்தார்.

ஆகிய இரண்டு வாக்கியங்களும் ஒருவரால் ஒரே சந்தர்ப்பத்தில் பயன்படுத்தக்கூடிய வாக்கியங்கள் அல்ல. அதாவது ஒன்றுக்குப் பதிலாக மற்றதை நாம் பயன்படுத்த முடியாது. குமரனை நன்கு தெரிந்த ஒருவர்தான் முதலாவது வாக்கியத்தை பயன்படுத்துவார். பேசுவோருக்கும் கேட்போருக்கும் அல்லது இருவரில் ஒருவருக்காவது குமரன் முன்பின் அறிமுகம் அற்றவராக இருந்தால் தான் இரண்டாவது வாக்கியம் பயன்படுத்தப்படும். இங்கு 'என்பவர்' என்பது அதற்கு முன் உள்ள பெயருடன் இணைந்து அப்பெயரை அறிமுகப்படுத்தும் பணியைச் செய்கின்றது. இதனை அறிமுகச் சொல் எனலாம். இது எழுவாயாக மட்டுமன்றி விளி தவிர்ந்த பிற எல்லா வேற்றுமை உருபுகளையும் ஏற்றுவரும். பின்வரும் எடுத்துக்காட்டுகளை நோக்குக.

சீலன் என்பவரைக் கண்டேன்.

சீலன் என்பவருடன் பேசினேன்.

சீலன் என்பவரிடம் கொடுத்தேன்.

சீலன் என்பவருடைய வீடு.

ஒரு வேற்றுமை உருபு அல்லது சொல்லுருபு பிற வேற்றுமை உருபுகளுடன் இணைந்து வருவதில்லை. அவ்வகையில் என்பவன், என்பவர் முதலிய சொற்கள் சொல்லுருபுகள் அல்ல பெயர்ச் சொற்களே என்பது தெளிவு. சீலன் என்பவருக்குப் பதிலாக சீலன் என்னும் ஒருவர், சீலன் என்னும் பெயருடைய ஒருவர், போன்ற தொடர்புகளையும் நாம் பயன்படுத்த முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயப்படுபொருள் வேற்றுமை:

இதனை இரண்டாம் வேற்றுமை என இலக்கண நூல்கள் கூறும். இவ்வேற்றுமை 'ஐ' உருபினால் உணர்த்தப்படும். வாக்கியத்தில் ஒரு பெயர்ச்சொல் செயற்படுபொருளாக தொழிற்படுவதை இவ் வேற்றுமை குறிக்கின்றது. வாலி இராமனைப் பார்த்தான். வேலன் மரத்தை வெட்டினான். ஜமீல் தலையை சொறிந்தான் ஆகிய வாக்கியங்களில் இராமன், மரம், தலை என்பன செயற்படுபொருளாகும். ஒருவாக்கியத்தில் வினையின் பயனுக்கு உட்படும் பெயர்ச்சொல் செயற்படுபொருள் எனப்படும். மேல் உள்ள வாக்கியங்களில் 'பார்த்தல்' என்னும் வினைக்கு உட்படுவது இராமன். 'வெட்டுதல்' என்னும் வினைக்கு உட்படுவது மரம். 'சொறிதல்' என்னும் வினைக்கு உட்படுவது தலை. இதை வேறு வகையில் சொல்வதானால் பார்க்கப்பட்டவன் இராமன், வெட்டப்பட்டது மரம், சொறியப்பட்டது தலை எனலாம்.

**"இரண்டா வதனுரு பையே யதன்பொருள்**
**ஆக்க லழித்த லடைத ணீத்தல்**
**ஓத்த லுடைமை யாதி யாகும்"**

(நன்னூல் காண்டிகையுரை: சொல்லதிகாரம், நூற்பா - 296) என நன்னூலார் கூறுகின்றார்.

அதாவது, "இரண்டாம் வேற்றுமையின் உருபு முன்சொல்லப்பட்ட ஐ ஒன்றேயாகும். அதன் பொருள்களாவன: ஆக்கப்படு பொருள், அழிக்கப்படு பொருள், அடையப்படு பொருள், துறக்கப்படு பொருள், ஒக்கப்படு பொருள், உடைமைப் பொருள் முதலியனவாகும்." என்கின்றார்.

வீட்டைக் கட்டினான் - ஆக்கப்படு பொருள்
வீட்டை உடைத்தான் - அழிக்கப்படு பொருள்
நாட்டை அடைந்தான் - அடையப்படு பொருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரைத் துறந்தான் - துறக்கப்படு பொருள்
கிளியை ஒத்தவள் - ஒக்கப்படு பொருள்
பணத்தை உடையவன் - உடைமைப் பொருள்

போன்ற வாக்கியங்களை இதற்கு எடுத்துக்காட்டாகக் காட்டுவர். இவ்வாக்கியத்தில் ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை ஆகிய பொருள்கள் வினையின் பொருள்களே அன்றி வேற்றுமையின் பொருள் அல்ல என தற்கால அறிஞர் கூறுவர். இப்படிப் பார்த்தால் தலையை சொறிந்தான், கண்ணத்தை கிள்ளினான் போன்ற வாக்கியங்களில் இரண்டாம் வேற்றுமையின் பொருளைச் சொறிதல் பொருள், கிள்ளல் பொருள் என்றெல்லாம் விபரிக்க வேண்டியிருக்கும் என கு.பரமசிவம் என்னும் மொழியியல் அறிஞர் தனது 'இக்காலத் தமிழ் மரபு' என்னும் நூலில் கிண்டலாகக் கூறுகின்றார். காலைப் பிடித்தான், இரும்பை வளைத்தான், கண்ணைச் சிமிட்டினான் என நாம் இன்னும் இவை போன்ற அநேக எடுத்துக்காட்டுக்களைத் தரமுடியும். இரண்டாம் வேற்றுமையின் பொருளை இவ்வாறு நீட்டிச் செல்வதைவிட ஒரு பெயர்ச்சொல் வாக்கியத்தில் செயற்படுபொருளாகத் தொழிற்படுவதே இரண்டாம் வேற்றுமை எனச் சுருக்கமாகக் கூறலாம்.

- சில வகையான பெயர்ச்சொற்களுடன் 'ஐ' உருபு எப்போதும் இணைந்தே வரும். எடுத்துக்காட்டு: அப்பாவைப் பார்த்தேன், கண்ணனைக் கண்டேன். இவற்றை 'ஐ' உருபு இல்லாமல் எழுத முடியாது. அப்பா பார்த்தேன், கண்ணன் கண்டேன் என எழுத முடியாது.

- சில பெயர்சொற்களுடன் இரண்டாம் வேற்றுமை உருபு இணைந்தும் வரும், இணையாமலும் வரும். எடுத்துக்காட்டு: மரத்தை வெட்டினேன், மரம் வெட்டினேன். இவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும்போது 'ஐ' உருபு ஏற்ற பெயர் ஒரு குறிப்பான பொருளைத் தருகின்றது. அதாவது வெட்டப்பட்ட மரம் பேசுவோனுக்கும் கேட்போனுக்கும் அடையாளம் தெரிந்த மரம் எனும் பொருள் தருகின்றது. 'ஐ' உருபு ஏற்காத பெயர் பொதுப் பெருளைத் தருகின்றது. அதாவது இந்த வாக்கியத்தில் இடம்பெறும் மரம் பேசுவோனுக்கும் கேட்போனுக்கும் அடையாளம் தெரிந்த ஒரு குறிப்பிட்ட மரத்தை அன்றி பொதுவான ஏதோ ஒரு மரத்தைக் குறிக்கின்றது.

- பேசுவோனுக்கும் கேட்போனுக்கும் அடையாளம் தெரிந்த குறிப்பான ஒன்றை சுட்டும் பெயரைக் குறிப்புடைய பெயர் *(definite noun)* என்பர். அவ்வாறு இல்லாத பொதுவான ஒன்றைச் சுட்டும் பெயரைக் குறிப்பில்லாப் பெயர் *(indefinite noun)* என்பர். கண்ணன், ஜமால் போன்ற இயற்பெயர்கள் அம்மா, அப்பா, சூரியன், சந்திரன் போன்ற குறிப்பான ஒன்றை மட்டும் சுட்டும் பெயர்கள், அந்த, இந்த, எந்த, ஆகிய சுட்டு வினா அடை ஏற்ற பெயர்கள் எனது, உனது போன்ற உடைமைப் பெயர்களை அடுத்துவரும் பெயர்கள் முதலியவை குறிப்புடைய பெயர்கள் எனப்படும். இத்தகைய பெயர்கள் எப்பொழுதும் 'ஐ' உருபை ஏற்றே வரும். எடுத்துக்காட்டு:

> நான் ஸ்ரீமாவைத் தேடினேன்
> அப்பா அம்மாவை திட்டினார்.
> மேகம் சந்திரனை மறைத்தது.
> நான் அந்த மரத்தை வெட்டினேன்.
> எனது புத்தகத்தைக் காணவில்லை.

- மாணவன், ஆசிரியர், மனிதர்கள் போன்ற குறிப்பில்லா உயர்திணைப் பெயர்கள் எல்லாம் (சில விதிவிலக்காக) 'ஐ' உருபை ஏற்றே வரும். எடுத்துக்காட்டு:

> ஆசிரியர் அதிபரை மதிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர் ஆசிரியரை மதிக்க வேண்டும்.

- குறிப்பில்லா அஃறிணைப் பெயர்களுடன் 'ஐ' உருபு சேர்ந்து வராது. எடுத்துக்காட்டு:

அமான் படம் பார்க்கப் போனான்.
நான் சோறு சாப்பிட்டேன்.

-'ஐ' உருபு சேர்ந்து வரும் போது அஃறிணைப் பெயர்கள் குறிப்புடைய பெயர்களாகும். எடுத்துக்காட்டு.

அமான் பணம் கொண்டு வந்தான்.
அமான் பணத்தைக் கொண்டு வந்தான்.

முதல் வாக்கியத்தில் பணம் குறிப்பில்லாப் பெயர். இரண்டாவது வாக்கியத்தில் பணம் குறிப்புடைய பெயர்.

-சில உயர்திணைப் பெயர்கள் 'ஐ' உருபு ஏற்காமல் குறிப்பில்லாப் பெயராக வருகின்றன. எடுத்துக்காட்டு:

நாங்கள் பெண் பார்க்கப் போனோம்.
கமலாவுக்கு மாப்பிள்ளை பார்க்கின்றார்கள்.

இங்கு பெண், மாப்பிள்ளை ஆகிய உயர்திணைப் பெயர்கள் குறிப்பான ஒரு பெண்ணை அல்லது மாப்பிள்ளையைச் சுட்டாது. குறிப்பில்லாப் பெயர்களாக வந்துள்ளன. நாங்கள் பெண்ணைப் பார்க்கப் போனோம், நாங்கள் மாப்பிள்ளையை பார்த்தோம். ஆகிய வாக்கியங்களில் 'ஐ' உருபு ஏற்ற பெண், மாப்பிள்ளை ஆகிய பெயர்கள் குறிப்புடைய பெயர்களாகும். அதாவது ஒரு குறித்த பெண்ணை, ஒரு குறிப்பிட்ட மாப்பிள்ளையை அவை காட்டுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருவி வேற்றுமை:

இதனை மூன்றாம் வேற்றுமை என இலக்கண நூல்கள் காட்டும். இவ் வேற்றுமை 'ஆல்' என்னும் உருபினால் உணர்த்தப்படுகின்றது. ஒரு வாக்கியத்தில் ஒரு பெயர்ச்சொல் வினை நிகழ்வுக்குறிய கருவியாக அல்லது கருத்தாவாகச் செயற்படுவதை இவ் வேற்றுமை சுட்டும். –ஆல் உருபு கருவி கருத்தாப் பொருள்களில் வரும் என இலக்கண நூல்கள் கூறுகின்றன.

**"மூன்றா வதனுரு பாலா னோடொடு**
**கருவி கருத்தா உடனிகழ் வதன்பொருள்"**
(நன்னூல் காண்டிகையுரை: சொல்லதிகாரம், நூற்பா - 297)

அதாவது, "மூன்றாம் வேற்றுமையின் உருபுகளாவன ஆல், ஆன், ஒடு, ஓடு ஆகியனவாகும். அவ்வுருபுகளின் பொருள்களாவன கருவிப் பொருள், கருத்தாப் பொருள், உடனிகழ்ச்சிப் பொருள் ஆகிய மூன்றுமாகும்." என நன்னூல் கூறுகின்றது.

நான் சாவியால் கதவைத் திறந்தேன்.
மணி பென்சிலால் ஓவியம் வரைந்தான்.

மேலுள்ள வாக்கியங்களில் சாவி திறப்பதற்குரிய கருவியாகவும் பென்சில் வரைவதற்குறிய கருவியாகவும் தொழிற்படுகின்றன.
சிலப்பதிகாரம் இளங்கோவடிகளால் பாடப்பட்டது.
அபிதவால் ஆங்கிலம் பேச முடியும்.

மேல் உள்ள வாக்கியங்களில் இளங்கோவடிகள், கண்ணன் ஆகிய பெயர்ச்சொற்கள் கருத்தாப் பொருளில் வந்துள்ளன. தற்காலத்தில் -ஆல் உருபு கருவி, கருத்தாப்பொருளில் மட்டுமன்றி பின்வரும் வேறு சில பொருள்களிலும் வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணப் பொருள் :

நேஹா மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தாள்.
பாயிட் துன்பத்தால் மெலிந்து விட்டான்.
அவன் உழைப்பால் உயர்ந்தவன்.

மேல் உள்ள வாக்கியங்களில் துள்ளிக் குதித்ததற்கு மகிழ்ச்சி காரணம். மெலிந்ததற்கு துன்பம் காரணம். உயர்ச்சிக்கு உழைப்பு காரணம்.

மூலப்பொருள் :

தங்கத்தால் செய்த வளையல்.
மரத்தால் செய்த நாற்காலி.
கோதுமை மாவினால் செய்த ரொட்டி.

மேல் உள்ள தொடர்களில் தங்கம் வளையல் செய்வதற்குறிய மூலப்பொருள். மரம் நாற்காலி செய்வதற்குறிய மூலப்பொருள். கோதுமை மா ரொட்டி செய்வதற்குறிய மூலப்பொருள்.

- ஆல் உருபு சிறுபான்மை நீங்கல் பொருளிலும் வருகின்றது. எ-டு : 'மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்ததுபோல்' மேற்காட்டிய பழமொழியில் மரத்தால் என்பது மரத்திலிருந்து என்னும் பொருளில் வந்துள்ளது. யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழிலில் -ஆல் உருபு நீங்கற்பொருளில் வரக் காணலாம். எடுத்துக்காட்டு: நான் இப்போதுதான் கொழும்பால் வந்தேன். இவ்வாக்கியத்தில் கொழும்பால் என்பது கொழும்பில் இருந்து என்று பொருள் தரும்.

பழந்தமிழில் -ஆல் உருபோடு –ஆன் உருபும் கருவிப் பொருளில் பயன்பட்டது. எடுத்துக்காட்டு:

கத்தியால் வெட்டினான்.
கத்தியான் வெட்டினான்.

தற்காலத் தமிழில் -ஆன் உருபு வழக்கில் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கொண்டு', 'மூலம்' ஆகிய சொல்லுருபுகள் தற்கால தமிழில் கருவிப் பொருளில் வழங்குகின்றன. எடுத்துக்காட்டு:
கத்தி கொண்டு மரத்தை வெட்டினான்.
புகைவண்டி மூலம் கொழும்புக்குச் சென்றோம்.
'கொண்டு' என்னும் சொல்லுருபு பொதுவாக 'ஐ' உருபு பெற்ற பெயர்ச் சொல்லை அடுத்து வருகின்றது. எடுத்துக்காட்டு:
கத்தியைக் கொண்டு மரத்தை வெட்டினான்.
அமைச்சரைக் கொண்டு காரியத்தை சாதித்துக்கொள்ளலாம்.

## உடன் நிகழ்ச்சி வேற்றுமை

தமிழ் இலக்கண நூல்கள் இதனையும் மூன்றாம் வேற்றுமையுள் அடக்கிக் கூறுகின்றன. ஆயினும் தற்கால மொழியியல் அறிஞர்கள் இவ் வேற்றுமை உருபாலும் பொருளாலும் வேறுபடுவதனால் தனியான வேற்றுமையாகக் கொள்வர். 'ஓடு', 'உடன்' ஆகிய உருபுகளால் இவ்வேற்றுமை உணர்த்தப்படுகின்றது. பழந்தமிழில் 'ஒடு' என்னும் உருபும் வழக்கில் இருந்தது. தற்காலத் தமிழில் இவ்வுருவு வழங்குவதில்லை.

இரண்டு அல்லது பல பெயர்ச்சொற்கள் ஒரே சமயத்தில் ஒரு வினை நிகழ்விற்கு உள்ளாவதை சுட்டுவது உடன் நிகழ்ச்சி வேற்றுமை எனலாம்.

கணவனோடு மனைவி வந்தாள்.
மனைவியோடு கணவன் வந்தான்.

மேல் உள்ள வாக்கியங்கள் கணவன், மனைவி ஆகிய இருவரின் வருகையும் ஒன்றாக நிகழ்ந்தமையை உணர்த்துகின்றன. முதல் வாக்கியத்தில் வினை கொண்டு முடியும் பெயர் மனைவி, அதுவே இவ்வாக்கியத்தின் எழுவாயாகும். கணவன் உடன் நிகழ்ச்சிப்பொருளில் வந்துள்ள பெயர். இரண்டாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்கியத்தில் வினை கொண்டு முடியும் பெயர் கணவன், அதுவே இவ்வாக்கியத்தின் எழுவாயாகும். இவ்வாக்கியத்தின் உடன் நிகழ்ச்சிப்பொருளில் வந்துள்ள பெயர் மனைவியாகும். 'ஓடு' உருபு ஏற்ற பெயர்களே இவ்வாக்கியங்களில் முதன்மைப் பெயர்களாகும். முதல் வாக்கியத்தில 'கணவன்' முதன்மைப் பெயர், இரண்டாம் வாக்கியத்தில் 'மனைவி' முதன்மைப் பெயர். 'ஓடு' அல்லது 'உடன்' உருபு ஏற்று உடன் நிகழ்ச்சிப் பொருளில் வரும் பெயர்கள் கவன ஈர்ப்புப் பெறுவதனா லேயே அவை முதன்மைப் பெயர் எனப்படுகின்றன.

உடன் நிகழ்ச்சிப் பொருளுக்கு வேறு சில எடுத்துக்காட்டுகள் கீழே தரப்படுகின்றன.

மரம் வேரோடு சாய்ந்தது.
பெரும் காற்றுடன் மழை பெய்தது.
பயிரோடு களையும் வளர்ந்தது.
கண்ணன் தன் நாயோடு உலாவச் சென்றான்.

'ஓடு' உருபு உடன் நிகழ்ச்சி பொருளில் மட்டுமின்றி வாக்கியத்தில் வேறு பொருள்களிலும் வருகின்றது

அடைமொழிப் பொருள்:

அவர் அன்போடு பார்த்தார்.
அப்பா கோபத்தோடு பேசினார்.
தம்பி மகிழ்ச்சியோடு வந்தான்.
அண்ணன் பசியோடு இருக்கிறான்.

மேல் உள்ள வாக்கியங்களில் 'ஓடு' உருபு ஏற்ற பெயர்கள் வினைக்கு அடைமொழியாகச் செயற்படுவதால் இதனை அடைமொழிப்பொருள் எனலாம்.

கலப்புறு பொருள்:

பாலோடு தண்ணீர் கலந்து விற்கிறார்கள்.
அரிசியோடு மண் கலந்திருக்கிறது.
இனவெறி அவன் இரத்தத்தோடு கலந்திருக்கிறது.
எதிர்க்கட்சியினர் சிலர் அரசாங்கத்தோடு சேர்ந்து விட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல் உள்ள வாக்கியங்களில் 'ஓடு' உருபு ஏற்ற பெயர்கள் பிறிதொன்றுடன் கலப்புறுவது உணர்த்தப்படுவதால் இவற்றை கலப்புறு பொருள் எனலாம். அடைமொழிப் பொருள், கலப்புறு பொருள் என்பன ஆறுமுகநாவலரால் நன்னூல் காண்டிகை உரையில் பயன்படுத்தும் கலைச்சொற்கள்.

கூட்டல் அல்லது சேர்த்தல் பொருள்:

ஆறோடு ஆறைக் கூட்டினால் பன்னிரண்டு.

இன்றோடு மூன்று நாளாகிறது.

வயலோடு கார் தந்தால் போதும்.

இதனோடு அதைச் சேர்க்க வேண்டாம்.

மேல் உள்ள தொடர்களில் ஒன்றோடு பிரிதொன்றைக் கூட்டுதல், சேர்த்தல், இணைத்தல் என்னும் பொருளில் ஓடு உருபு பயன்படுகிறது.

ஓர் இடத்தில் தொடர்ந்து இருத்தல்:

அவன் ஊரோடு போய்விட்டான்.

அவர் வீட்டோடு மாப்பிள்ளை பார்க்கிறார்.

அவர் வாழ்க்கை கட்டிலோடுதான் கழிந்தது.

மேல் உள்ள வாக்கியங்களில் -ஓடு உருபு ஏற்ற ஊர், வீடு, கட்டில் ஆகிய சொற்கள் ஒருவர் அந்த இடத்திலேயே தரித்திருத்தல் என்னும் பொருளைத் தருகின்றன.

வரையறைப் பொருள்:

இந்த வருடத்துடன் ஓய்வு பெறுகின்றேன்.

ஐந்து இடியப்பத்துடன் காலை உணவு முடிந்தது.

இத்தோடு நிறுத்திக்கொள்கிறேன்.

மேல் உள்ள வாக்கியங்களில் -ஓடு. -உடன் உருபு ஏற்ற பெயர்கள் வரையறைப் பொருளைத் தருகின்றன.

வினையடை ஆக்கி:

இரவோடு இரவாக

மக்களோடு மக்களாக

காற்றோடு காற்றாக

கதையோடு கதையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதோடு காதாக
தோளோடு தோள் சேர்ந்து
மண்ணோடு மண்ணாக

மேற்காட்டிய அடுக்கு வினையடைகளில் ஒரே பெயர் இரட்டித்து வருகின்றது. அவ்வாறு வரும்போது முதற்பெயருடன் -ஒடு உருபு இணைந்து வந்து வெவ்வேறு வினையடைப் பொருளைத் தருகின்றது. இங்கு -ஒடு உருபு வினையடை ஆக்கியாகத் தொழிற்படுகின்றது எனலாம்.

கொடை வேற்றுமை:

இவ் வேற்றுமையை தமிழ் இலக்கண நூல்கள் நான்காம் வேற்றுமை எனக் கூறும்.

**"நான்கா வதற்குரு பாகுங் குவ்வே**
**கொடை பகை நேர்ச்சி தகவது வாதல்**
**பொருட்டுமுறை யாதியி னிதற்கிதெனல் பொருளே"**
(நன்னூல் காண்டிகையுரை: சொல்லதிகாரம், நூற்பா - 298)

அதாவது, "நான்காம் வேற்றுமைக்கு உருபு 'கு'வ்வே ஆகும். அவ்வுருபின் பொருள்களாவன: கொடையும் பகையும் நட்பும் தகுதியும் முதற்காரணமும் நிமித்த காரணமும் முறையும் முதலான பொருட்சொற்களின் புணர்ச்சியில் இதற்கிது என்பது பட வருவனவாகிய பலவுமாம்." என்கிறார் நன்னூலார்.

இவ் வேற்றுமை -கு என்னும் உருபினால் உணர்த்தப்படுகின்றது. இவ்வுருபுக்கு -க்கு, -அக்கு, -உக்கு ஆகிய மாற்று வடிவங்கள் உள்ளன.

-கு உருபு இன் அல்லது அன் சாரியை பெறும் பெயர்சொற்களை அடுத்து வருகின்றது. எடுத்துக்காட்டு:

நாடு + இன் + கு - நாட்டிற்கு
வீடு + இன் + கு - வீட்டிற்கு
அது + அன் + கு - அதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| இது | + | அன் + கு | – | இதற்கு |
| எது | + | அன் + கு | – | எதற்கு |

-அக்கு உருபு என், எம், நம், உன், உம், தன், தம் ஆகிய மூவிடப் பெயர்களில் வேற்றுமை ஏற்கும் வடிவங்களுடன் வருகின்றது.

| | | | | |
|---|---|---|---|---|
| என் | + | அக்கு | - | எனக்கு |
| எம் | + | அக்கு | - | எமக்கு |
| நம் | + | அக்கு | - | நமக்கு |
| தம் | + | அக்கு | - | தமக்கு |

-க்கு உருபு இ, ஈ, ஐ, ய் ஈற்றுப் பெயர்களை அடுத்தும் குற்றியலுகர ஈற்றுப்பெயர்களை அடுத்தும் வருகின்றது.

| | | | | |
|---|---|---|---|---|
| புலி | + | க்கு | - | புலிக்கு |
| நாய் | + | க்கு | - | நாய்க்கு |
| ஈ | + | க்கு | - | ஈக்கு |
| மூக்கு | + | க்கு | - | மூக்குக்கு |
| தலை | + | க்கு | - | தலைக்கு |
| காற்று | + | க்கு | - | காற்றுக்கு |

-உக்கு உருபு எனைய எல்லாப் பெயர் சொற்களையும் அடுத்து வருகின்றது.

| | | | | |
|---|---|---|---|---|
| அம்மா | + | உக்கு | - | அம்மாவுக்கு |
| அவர்கள் | + | உக்கு | - | அவர்களுக்கு |
| ஆண் | + | உக்கு | - | ஆணுக்கு |
| கடல் | + | உக்கு | - | கடலுக்கு |
| அண்ணன் | + | உக்கு | - | அண்ணனுக்கு |

-மகர ஈற்று பெயர்கள் 'அற்று' சாரியை பெறும். அவை, இவை, எவை என்பன 'அற்று' சாரியை பெற்று -உக்கு உருபு ஏற்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணம் + அத்து + உக்கு - பணத்திற்கு
அவை + அற்று + உக்கு - அவற்றுக்கு
இவ் வேற்றுமை கொடை, பகை, நேர்ச்சி(நட்பு), தகவு(தகுதி), அதுவாதல், பொருட்டு (நோக்கம். காரணம்), முறை ஆகிய பொருள்களில் வரும் என நன்னூல் கூறுகின்றது. அதாவது,
இரவலர்க்குக் கொடுத்தான் - கொடை
பாம்புக்குப் பகை கீரி – பகை
அவனுக்கு நண்பன் - நட்பு
கற்றவர்க்கு அழகு அடக்கம் – தகுதி
நகைக்குப் பொன் - அதுவாதல் (முதற்காரணம்)
கூலிக்கு வேலை செய்தான் - பொருட்டு (நிமித்த காரணம்)
அவனுக்குத் தந்தை – முறை
எனப் பொருள் விளக்கம் கொடுக்கின்றார்.

கொடைப் பொருள்:
கொடைப் பொருள் இவ்வேற்றுமையின் பிரதான பொருளாதலால் இது கொடை வேற்றுமை எனப்படுகின்றது. 'கொடை' என்பது ஒருவர் கொடுத்ததை பிரிதொருவர் கொள்ளுதலைக் குறிக்கும். இது எத்தகைய கொடுக்கல் வாங்கலையும் உள்ளடக்கும். எடுத்துக்காட்டு: அப்பா தம்பிக்கு பணம் கொடுத்தார். இவ்வாக்கியத்தில் பணத்தைக் கொடுத்தவர் அப்பா, அதைப் பெற்றவன் தம்பி. ஆசிரியர் மாணவர்களுக்குக் கணிதம் கற்பித்தார். இவ்வாக்கியத்தில் கற்பித்தவர் ஆசிரியர், கற்றுக்கொண்டவர்கள் மாணவர்கள். குமார் கண்ணனுக்குக் கடிதம் எழுதினான். இவ்வாக்கியத்தில் கடிதம் எழுதியவன் குமார், அதனைப் பெறுபவன் கண்ணன். தம்பி அண்ணனுக்கு அடித்தான். இவ்வாக்கியத்தில் அடித்தவன் தம்பி, அடியைப் பெற்றவன் அண்ணன்.

இவ்வாக்கியங்களிலெல்லாம் -கு உருபு ஏற்ற பெயர்கள் கொடுப்பதைப் பெறுபவையாக உள்ளன. -கு உருபு ஏற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர் எப்பொருளாயினும் கொள்ளும் என தொல்காப்பியர் கூறுவர். அவ்வகையில் கொடைப் பொருளில் -கு உருபு ஏற்ற பெயர்கள் வினையின் பயனை பெறுபவையாக உள்ளன.

பகை - நட்பு - முறைப் பொருள்கள்

இவை மூன்றும் தொடர்புடையன. அதாவது 'அ'வுக்கு 'ஆ'வோடு உள்ள உறவின் தன்மைகளை இது சுட்டும்.

இராமனுக்கு இராவணன் எதிரி (பகை)
மாலாவுக்கு நேஹா சிநேகிதி (நட்பு)
இல்மா எனக்கு தங்கை (முறை, உறவு)

இவை மூன்றையும் சேர்த்து உறவுப் பொருள் எனலாம். வேறு பல உறவுகளையும் -கு உருபு சுட்டலாம்.

நீங்கள் தான் எனக்கு குரு (குரு சீட உறவு)
எங்களுக்குத் தலைவன் கண்ணன் (தலைமை)

தகுதிப் பொருள்:

ஒருவருக்குத் தகுதியுடையதை பொருத்தமானதை சுட்டுவது தகுதிப் பொருள் எனப்படும். இதை சுட்டுவதற்கு –கு உருபு பயன்படுத்தப்படுகின்றது. எடுத்துக்காட்டு:

கற்றவர்களுக்கு அழகு அடக்கம்.
அரசனுக்கு உரியது மணிமுடி.
படிப்புக்கு ஏற்ற வேலை தேடுகிறான்.
வேலைக்கு ஏற்ற கூலி கிடைக்கவில்லை.

அதுவாதல் பொருள்:

அதுவாதல் என்பதை முதல் காரணப் பொருள் என இலக்கண ஆசிரியர் கூறுவர். அதாவது ஒன்றைச் செய்வதற்குறிய மூலப்பொருள் அப்பொருளாக மாறுவதை இது குறிக்கும். இதனைச் சுட்டுவதற்கும் –கு உருபு பயன்படுகிறது.

அம்மா பிட்டுக்கு மாக்குழைக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு மா மூலப்பொருள். அது பிட்டாக மாறுவது அதுவாதலாகும். வேறு சில எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு:
அக்கா சட்டைக்கு துணி வாங்கினாள்.
தாலிக்கு பொன் உருக்கினார்கள்.
கறிக்கு மீன் வாங்க வேண்டும்.

காரணப் பொருள்(பொருட்டு):
ஒரு காரணம் அல்லது நோக்கத்தின் பொருட்டு *(purpose)* ஒரு காரியம் நிகழ்வதை இது குறிக்கும். இப்பொருளை உணர்த்துவதற்கு –கு உருபு பயன்படுகின்றது. இப்பொருளை புலப்படுத்த –கு உருபோடு ஆக, பொருட்டு, நிமித்தம் ஆகிய சொல்லுருபுகளும் பயன்படுகின்றன.
எல்லாரும் பணத்திற்குத்தான் வேலை செய்கிறார்கள்.
அக்கா குழந்தைக்குப் பால் வாங்கினார்.
இவ்வாக்கியங்களில் -கு உருபு ஏற்ற பெயர்கள் வேலை செய்வதற்குரிய நோக்கம் பணம் என்பதனையும் பால் வாங்கியது குழந்தை குடிப்பதற்கு என்பதையும் உணர்த்துகின்றன. காரணப்பொருளில் -கு உருபோடு 'ஆக' என்னும் சொல்லுருபும் இணைந்துவரும்.
எல்லாரும் பணத்துக்காகத்தான் வேலை செய்கிறார்கள்.
அக்கா குழந்தைக்காகப் பால் வாங்கினார்.
காரணப் பொருளில் -கு, -ஆக என்பவற்றுக்குப் பதிலாக (இன்)பொருட்டு, (இன்)நிமித்தம் ஆகிய சொல்லுருபுகளும் சிறுபான்மை பெயர்ச்சொற்களோடு இணைந்து வருகின்றன.
எடுத்துக்காட்டு:
பிரதமரின் வருகையின் பொருட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.
ஒரு முக்கிய அலுவலின் நிமித்தம் அப்பா வெளியூர் போயிருக்கிறார்.
மேற்குறிப்பிட்ட பொருள்களில் மட்டுமன்றி வேறு பல பொருள்களிலும் -கு உருபு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லைப் பொருள்:

இந்தியாவிற்குத் தெற்கில் இலங்கை இருக்கிறது.
எங்கள் வீட்டுக்கு முன்னால் வைத்தியசாலை இருக்கிறது.
வீட்டுக்கு வலது புறத்தில் மரம் நிற்கிறது.
பூனை கட்டிலுக்கு கீழே படுத்திருக்கிறது.

வடக்கு, கிழக்கு முதலிய திசைப் பெயர்கள் முன், பின், மேல், கீழ், உள்ளே, வெளியே முதலிய சொற்கள் -கு உருபு ஏற்ற பெயரை அடுத்து வந்து எல்லைப் பொருளைத் தருகின்றன.

ஓர் இடம் நோக்கி நகர்தல்:

வா, போ, ஓடு, நட முதலிய வினைகளைப் பயனிலையாகக் கொள்ளும் வாக்கியங்களில் இடப்பெயர்களுடன் சேர்ந்து வரும் -கு உருபு அவ்விடத்தை நோக்கிச் செல்வதை உணர்த்தப் பயன்படுகிறது. எடுத்துக்காட்டு:

நான் கண்டிக்குப் போகிறேன்.
கண்ணன் இன்று வேலைக்கு வரவில்லை.
நேற்று உங்கள் ஊருக்கு வந்தோம்.
இந்த பஸ் கண்டிக்குப் போகுமா?.
தம்பி வீட்டுக்கு ஓடினான்.

அனுபவப் பேறு:

உண்டு, இல்லை, வேண்டும், தெரியும், பிடிக்கும், பசிக்கிறது போன்ற வினைகளுடன் -கு உருபு ஏற்ற பெயர்கள் வரும்போது அப்பெயர்கள் மூலம் உடல், உளநிலை, அனுபவம் என்பன உணர்த்தப்படுகின்றன. எடுத்துக்காட்டு:

அவருக்கு வியாபாரத்தில் அனுபவம் உண்டு.
உனக்கு அனுபவம் இல்லை.
அவனுக்கு நிறையச்சொத்து இருக்கிறது.
எனக்கு மாம்பழம் பிடிக்கும்.
ரிதுஷிக்கு தமிழ் தெரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலக் குறிப்பு:

காலம் உணர்த்தும் பெயர்களுடன் -கு உருபு வந்து கால வரையறையை உணர்த்துகின்றது.

எடுத்துக்காட்டு:

ஆசிரியர் ஐந்து மணிக்கு வரச்சொன்னார்
ஒரு வாரத்திற்கு இரண்டு நாள் விடுமுறை உண்டு
ஒரு நாளைக்கு இரண்டு வேளை மருந்து சாப்பிட வேண்டும்.
எத்தனை நாட்களுக்கு அங்கு இருப்பீர்கள்?

வீதம் விகிதாசாரம்:

எண்ணுப் பெயர்களுடன் -கு உருபு சேர்ந்து நூற்றுவீதம், விதாசாரம் ஆகியவற்றை உணர்த்துகிறது. எடுத்துக்காட்டு: ஐம்பதுக்கு ஐம்பது.

மூன்றுக்கு ஒன்று.
பத்துப் பேருக்கு மூன்று பேர்.
இலங்கையில் நூற்றுக்கு எண்பது பேர் எழுத்தறிவு பெற்றுள்ளனர்.
ஆறு வாளி மண்ணுக்கு ஒரு வாளி சிமெந்து கலக்கிறார்கள்.
பத்துப் பேருக்கு மூன்று பேர்தான் வந்துள்ளனர்.

வினையடை ஆக்கி:

வீட்டுக்கு வீடு
நாளுக்கு நாள்
ஊருக்கு ஊர்
நாட்டுக்கு நாடு
இடத்திற்கு இடம்

போன்ற அடுக்கு வினையடைகளை ஆக்குவதிலும் -கு உருபு பயன்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீங்கல் வேற்றுமை

இதனை இலக்கண நூல்கள் ஐந்தாம் வேற்றுமை எனக் கூறுகின்றன.

**"ஐந்தா வதனுருபு இல்லும் இன்னும்**
**நீங்கல் ஒப்பெல்லை யேதுப் பொருளே"**

(நன்னூல் காண்டிகையுரை: சொல்லதிகாரம், நூற்பா - 299)
அதாவது, "ஐந்தாம் வேற்றுமையின் உருபாவன 'இல்'லும் முன்சொல்லப்பட்ட 'இன்'னுமாம் அவ்வுருபுகளின் பொருள்களாவன நீக்கப் பொருளும் ஒப்புப் பொருளும் எல்லைப் பொருளும் ஏதுப் பொருளுமாகிய நான்குமாம்." என்கின்றார்.

மரத்தின் வீழ் குருவி – நீங்கல் பொருள்
வேங்கையின் கொடிது – ஒப்புப் பொருள்
இலங்கையின் வடக்கு இந்தியா – எல்லைப் பொருள்
கல்வியிற் பெரியவன் கம்பன் – ஏதுப் பொருள்

-இல், இன் என்பவற்றை இவ் வேற்றுமை உருபாக நன்னூல் கூறுகிறது. நீங்கல் பொருள் தவிர ஒப்புப் பொருள், எல்லைப் பொருள், ஏதுப்பொருள் ஆகியவற்றையும் இவ் வேற்றுமை உருபுகள் காட்டும் என்பர். பழந்தமிழில் 'இன்' உருபு நீங்கல் பொருள் உணர்த்தியது.

தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையின் இழிந்த கடை.

மேல் உள்ள குறளில் தலையின், நிலையின் ஆகிய சொற்கள் தலையிலிருந்து நிலையிலிருந்து என்னும் பொருளைத் தருகின்றன. இக்காலத் தமிழில் 'இன்' உருபு நீங்கல் பொருளில் வருவதில்லை. 'இல்', 'இருந்து' என்னும் சொல்லுருபே இப்பொருளைத் தருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கல் என்பது ஓர் இடத்திலிருந்து விலகுவதைக் குறிக்கும். இந்த இடம் பருப்பொருள் சார்ந்ததாக அல்லது பருப்பொருள் சாராததாக இருக்கலாம்.

பருப்பொருள் சார்ந்த இடம்:

மாமா ஊரிலிருந்து வந்தார்.
மரத்திலிருந்து தேங்காய் விழுந்தது.
பாம்பு புற்றிலிருந்து புறப்பட்டது.
குருவிக்குஞ்சு கூட்டிலிருந்து பறந்துவிட்டது.

பருப்பொருள் சாராத இடம்:

தூக்கத்திலிருந்து விழித்தேன்
கவலையிலிருந்து என்னால் விடுபட முடியவில்லை.
உன் நினைவை என் ஞாபகத்திலிருந்து அகற்றி விட்டேன்.
பொய்யிலிருந்து உண்மையை வேறுபடுத்தவேண்டும்.

அங்கு, இங்கு, மேல், கீழ் முதலிய பெயர்சொற்களுடன் இருந்து என்னும் சொல்லுருபு இணைந்து நீங்கல் பொருள் உணர்த்துகின்றது. எடுத்துக்காட்டு: ·

அங்கிருந்து, இங்கிருந்து, மேலிருந்து, கீழிருந்து

உயர்திணைப் பெயர்களுடன் -இலிருந்து என்னும் உருபுக்குப் பதிலாக -இடமிருந்து என்னும் உருபு இணைந்து வருகின்றது. எடுத்துக்காட்டு:

அப்பாவிடம் இருந்து கடிதம் வந்தது.
அம்மாவிடம் இருந்து பணம் பெற்றேன்.
தாயிடம் இருந்து பிள்ளையை பிரிக்க முடியாது.

உயிருள்ள அஃறிணைப் பெயர்களுடன் -இடமிருந்து உருபு இணைந்து வருகின்றது. எடுத்துக்காட்டு:

பாம்பிடமிருந்து தேரை தப்பிச் சென்றது.
பூனையிடமிருந்து புறாவைக் காப்பாற்றினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்புப் பொருள்:

பழந்தமிழில் -இல் உருபு ஒப்புப்பொருளிலும் வந்துள்ளது. 'ஊழிற்பெருவலி யாவுள' என்னும் குறள் வரியில் -இல் உருபு ஒப்புப்பொருள் தருகின்றது. இக்காலத்தமிழில் இது 'ஊழைவிட' என்று அமையும். 'ஐ' உருபு ஏற்ற பெயரை அடுத்து விட, காட்டிலும், பார்க்கிலும் போன்ற இடைச் சொற்கள் இணைந்தே இக்காலத் தமிழில் ஒப்புப் பொருள் தருகின்றன. எடுத்துக்காட்டு:

என்னை விட அவன் கெட்டிக்காரன்.
வீணாவைப் பார்க்கிலும் நேஹா அழகானவள்.
நாவலைக் காட்டிலும் சிறுகதையையே விரும்புகின்றனர்.

இக்காலத் தமிழில் ஒப்புப் பொருள் -இல் உருபினால் உணர்த்தப்படுவதில்லை.

எல்லைப் பொருள்:

வடக்கு கிழக்கு முதலிய திசைப்பெயர்கள் முன், பின், மேல், கீழ், உள்ளே, வெளியே முதலிய சொற்கள் -இன் உருபு ஏற்ற பெயரை அடுத்து வந்து எல்லைப் பொருள் அல்லது இடக்குறிப்பை உணர்த்துகின்றன.

இலங்கையின் வடக்கில் இந்தியா இருக்கிறது.
வீட்டின் முன்னால் கோயில் இருக்கிறது.

இப்பொருளை உணர்த்த -இன் உருபுக்குப்பதிலாக -கு உருபும் பயன்படுவது கொடை வேற்றுமை பற்றிய பகுதியில் விளக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதுப் பொருள்:

ஒன்றின் உயர்வு அல்லது தாழ்வு போன்றவற்றுக்கு காரணமாய் அமையும் பொருள் ஏதுப் பொருள் எனப்படுகிறது. பழந்தமிழில் -இல் உருபு ஏதுப்பொருளில் வந்துள்ளது. 'கல்வியில் பெரியன் கம்பன்' என்னும் தொடரில் 'கல்வி கற்ற காரணத்தால் கம்பன் பெரியவன்' என்னும் பொருள் புலப்படுகிறது. தற்காலத்தில் -இல் உருபுக்குப் பதிலாக –ஆல் உருபு ஏதுப் பொருளில் வருவது கருவி வேற்றுமை என்னும் பிரிவில் விளக்கப்பட்டது. எனினும் பாடல்களில் இக்காலத்திலும் -இல் உருபு ஏதுப்பொருளில் வழங்கக் காணலாம். இதற்குப் பின்வரும் பாரதிப் பாடலை எடுத்துக்காட்டாகத் தரலாம்.

ஞானத்திலே பர மோனத்திலே – உயர்
மானத்திலே அன்ன தானத்திலே
கானத்திலே அமுதா நிறைந்த
கவிதையிலே உயர் நாடு

**உடைமை வேற்றுமை**

தமிழ் இலக்கண நூல்கள் இதனை ஆறாம் வேற்றுமை எனக்கூறும்.

"ஆற னொருமைக் கதுவு மாதுவும்
பன்மைக் கவ்வு முருபாம் பண்புறும்
பொன்றன் கூட்டம் பலவி னீட்டந்
திரிபி னாக்க மாந்தற் கிழமையும்
பிறிதின் கிழமையும் பேணுதல் பொருளே."
(நன்னூல் காண்டிகையுரை: சொல்லதிகாரம், நூற்பா - 300)
அதாவது, "ஆறாம் வேற்றுமையினது வருமொழியின் ஒருமைப் பொருண்மைக்கு முன்சொல்லப்பட்ட அதுவேயன்றி ஆதுவும் வருமொழியின் பன்மைப் பொருண்மைக்கு அகரமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருபாம். அவற்றின் பொருள்களாவன குணமுந் தொழிலு மாகிய் பண்பும் உறுப்பும் ஒருபொருட் கூட்டமும் பலபொருட் கூட்டமும் ஒன்று திரிந்தொன்றாதலும் ஆகிய ஐந்து தற்கிழமைப் பொருள்களையும் அவையல்லாத பிறிதின் கிழமைப் பொருள்களையும் உடையனவாக வருதலாகும்" என்கின்றார் நன்னூலார்.

-இன், -அது, உடைய என்பன இதன் உருபுகள். ஆறாம் வேற்றுமைக்கும் ஏனைய வேற்றுமைக்கும் ஒரு முக்கியமான வேறுபாடு உண்டு. ஏனைய வேற்றுமைகள் பெயருக்கும் வினைக்கும் இடையில் உள்ள உறவைச் சுட்டி நிற்கின்றன. எடுத்துக்காட்டு:

நண்பன் வந்தான்
நண்பனைப் பார்த்தேன்
நண்பனால் மகிழ்ந்தேன்
நண்பனுடன் வந்தேன்
நண்பனுக்குக் கொடுத்தேன்
நண்பனிடமிருந்து விலகினேன்

ஆனால் ஆறாம் வேற்றுமை இரண்டு பெயர்சொற்களுக்கும் இடையே உள்ள உறவைச் சுட்டி நிற்கின்றது எடுத்துக்காட்டு:

நண்பனுடைய புத்தகம்
நண்பனுடையவீடு.

இங்கு கண்ணனுக்கும் புத்தகம் வீடு ஆகியவற்றுக்கும் இடையே உள்ள உறவை (உடைமை உறவு) 'உடைய' என்னும் உருபு சுட்டி நிற்கிறது. இவ்வுருபு ஏற்ற பெயர் புத்தகம், வீடு ஆகிய பெயர்களுக்கு அடையாகத் தொழிற்படுகின்றது. 'அது', 'உடைய' ஆகிய உருபுகள் ஒரே பெயர்ச்சொல்லுடன் ஒன்றுக்குப் பதிலாக மற்றது வரமுடியும்.

நண்பனது புத்தகம்.

நண்பனுடைய புத்தகம்
நண்பனது தந்தை
நண்பனுடைய தந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேற்றுமை உருபு ஏற்கும்போது திரிபடையும் பெயர்ச் சொற்களின் திரிந்த வடிவம் 'அது', 'உடைய' ஆகிய உருபுகளை ஏற்காமலே உடைமைப் பொருள் உணர்த்தும். எடுத்துக்காட்டு:

என் புத்தகம்
எங்கள் வீடு
நம் தேசம்
மரக் கிளை
மாட்டுச் சாணம்

-இன் என்பதையும் உடைமை வேற்றுமை உருபாகக் கொள்ளலாமா?

மரத்தின் கிளை
மாட்டினது கொம்பு

மேற்காட்டிய தொடர்களில் -இன் உடைமைப் பொருள் உணர்த்துவதாகத் தோன்றுகிறது. ஆயினும் -இன் உருபை அடுத்து 'அது' அல்லது 'உடைய' உருபு வரமுடியும். எடுத்துக்காட்டு:

மரத்தின் கிளை
மாட்டினது கொம்பு

மேற்காட்டிய எடுத்துக்காட்டுகளில் 'இன்', 'அது' இரண்டும் வந்துள்ளன. ஒரு பெயாச்சொல்லோடு இரண்டு வேற்றுமை உருபுகள் வருவதில்லை. ஆகவே இங்கு -இன் சாரியை எனக் கொள்ளலாம்.

மூவிடப் பெயர்கள் தவிர்ந்த ஏனைய திரிபடையும் பெயர்கள் 'அது', 'உடைய' ஆகிய உருபு ஏற்கும்போது -இன் சாரியை பெறும் எடுத்துக்காட்டு:

வீட்டினது கூரை
காற்றினது வேகம்
நாட்டினது முன்னேற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை வேற்றுமை உருபு இல்லாமல் -இன் சாரியை பெற்றுவரலாம். எடுத்துக்காட்டு:

வீட்டின் கூரை

காற்றின் வேகம்

நாட்டின் முன்னேற்றம்

இவை -இன் சாரியை இல்லாமலும் உடைமைப் பொருள் உணர்த்தும். வேற்றுமைக்கு திரிபடையாத பெயர்ச்சொற்களும் -இன் உருபு பெற்று வருகின்றன.

கண்ணனின் அப்பா

புத்தகத்தின் பக்கங்கள்

அமைச்சரின் வாழ்க்கை

இத் தொடர்களில் -இன் சாரியை அடுத்து -அது, -உடைய ஆகிய உருபுகள் வருதல் தற்காலத்தில் மிகவும் அரிது. -இன் சாரியை இல்லாமல் இவற்றை,

கண்ணன் அப்பா

புத்தகம் பக்கங்கள்

அமைச்சர் வாழ்க்கை

என நாம் எழுதுவதில்லை. அவ்வாறு எழுதினால் உடைமைப் பொருள் உணர்த்தப்படுவதில்லை. (தமிழ் நாட்டில் இவ்வாறு எழுதுகின்றனர்)

ஆகவே தற்கால வழக்கைப் பொருத்தவரை -இன் என்பதை உடைமை வேற்றுமை உருபுகளுள் ஒன்றாகக் கொள்வதில் தவறில்லை. பழந்தமிழில் சாரியையாக இருந்த -இன் தற்காலத் தமிழில் சாரியையாகவும் வேற்றுமை உருபாகவும் தொழிற்படுகிறது. எனலாம் பின்வரும் எடுத்துக்காட்டில் -இன், -அது, -உடைய ஆகிய மூன்றும் ஒன்றுக்குப் பதில் மற்றது வரக் காணலாம்.

நண்பனின் அப்பா

நண்பனுடைய அப்பா

நண்பனது அப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இட வேற்றுமை

இதனை ஏழாம் வேற்றுமை என்பர்.

**"ஏழ னுருபுகண் ணாதி யாகும்**
**பொருண்முத லாறு மோரிரு கிழமையின்**
**இடனாய் நிற்ற லிதன்பொரு ளென்ப."**

(நன்னூல் காண்டிகையுரை: சொல்லதிகாரம், நூற்பா – 301)

அதாவது, "ஏழாம் வேற்றுமையின் உருபு முன்சொல்லப்பட்ட கண்ணேயன்றி அது முதலாகிய பிறவுமாம். இவ்வுருபுகளின் பொருளாவது பொருளாதியாகிய ஆறும் ஆறாம் வேற்றுமைக்குச் சொல்லப்பட்ட இரு கிழமைப்பொருள் களுக்கும் இடமாய் நிற்கும் இடப்பொருளாம் என்று சொல்லுவர்." என்கின்றார் நன்னூலார்.

இவ் வேற்றுமையின் இருபத்தெட்டு உருபுகளை நன்னூல் கூறுகின்றது.

**"கண்கால் கடையிடை தலைவாய் திசைவயின்**
**முன்சார் வலமிட மேல்கீழ் புடைமுதல்**
**பின்பா டளைதே முழைவழி யுழியுளி**
**உள்ளகம் புறமில் லிடப்பொரு ளுருபே."**

(நன்னூல் காண்டிகையுரை: சொல்லதிகாரம், நூற்பா – 302)

அதாவது, "கண் முதல் இல் ஈறாக சொல்லப்பட்ட இவ் இருபத்தெட்டு உருபுகளும் தன்மையேற்ற பெயர்ப் பொருளை இடப்பொருளாக வேற்றுமை செய்யும் உருபுகளாகும்" என்கின்றார் நன்னூலார்.

தற்காலத்தில் -இல், -இடம் ஆகிய இரண்டுமே இடவேற்றுமை உருபுகளாகப் பெரிதும் பயன்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடப் பொருள் என்பது ஒருபொருள் ஓர் இடத்தில் இருப்பதைச் சுட்டுவதாகும்.
அப்பா வீட்டில் இருக்கிறார்.
புத்தகம் மேசையில் இருக்கிறது.

அம்மா பணத்தை பெட்டியில் வைத்தார்.
குருவி வானத்தில் பறக்கிறது.

இடம் என்பது பருப்பொருள் சார்ந்த இடத்தை மட்டுமன்றி பருப்பொருள் சாராதவற்றையும் உள்ளடக்கும். உணர்வு, நினைவு எல்லாம் இதனுள் அடங்கும்.

நீ கூறியவற்றை என் நினைவில் வைத்திருக்கிறேன்.
என் வாழ்வில் பல மறக்க முடியாத சம்பவங்கள்.
அவரது சிந்தனையில் தெளிவு உண்டு.
தமிழில் நல்ல இலக்கிய நூல்கள் உள்ளன.

-இல் உருபு கால வரையறையையும் உணர்த்தப் பயன்படுகிறது.

இந்த வேலையை ஒரு வாரத்தில் முடித்துவிடலாம்.
மூன்று நாளில் திரும்பிவிடுவேன்.

ஒரு குழுவினுள் அமையும் பிறிதொரு குழுவைச் சுட்டவும் -இல் உருபு பயன்படுகிறது.

ஜானகிராமனின் நாவல்களில் மோகமுள்தான் சிறந்தது.
ஐந்து தொழிலாளர்களில் இருவர் வரவில்லை.
என் மாணவர்களில் பலர் இன்றும் என்னை மதிக்கின்றனர்.
அவர் மனிதரில் மாணிக்கம்.

இங்கு -இல் உருபுக்குப் பதிலாக –உள் என்னும் உருபு வரும். எடுத்துக்காட்டு- நாவல்களுள் தொழிலாளர்களுள் மாணவர்களுள் மனிதருள்.

இடம் என்னும் சொல்லுருபு உயர்திணை பெயர்களுடன் வருகின்றது. எடுத்துக்காட்டு:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாவிடம் பணம் இருக்கிறது.

கண்ணனிடம் புத்தகம் இருக்கிறது.

கமால் ஜமாலிடம் கடன் கேட்டான்.

கண்ணன் ஆசிரியரிடம் முறையிட்டான்.

கற்பனைக் கதைகளில் அஃறிணைப் பெயர்களுடன் வருகின்றது. எடுத்துக்காட்டு:

முயல் சிங்கத்திடம் சென்றது.

பூனை பசுவிடம் பால் கேட்டது.

குருவி மரத்திடம் உதவி கேட்டது.

இடம் உருபும் -கு உருபும் ஒரே சூழலில் வந்து பொருள் வேறுபடுத்தும் சந்தர்ப்பங்களும் உண்டு. எடுத்துக்காட்டு:

நான் கண்ணனிடம் பணம் கொடுத்தேன்.

நான் கண்ணனுக்குப் பணம் கொடுத்தேன்.

முதல் வாக்கியத்தில் வரும் -இடம் உருபு, கொடுக்கப்பட்ட பணம் கண்ணனின் சொந்த பயன்பாட்டுக்கு உரியதல்ல என்பதை உணர்த்துகின்றது. இரண்டாம் வாக்கியத்தில் வரும் -கு உருபு கொடுக்கப்பட்ட பணம் கண்ணனின் சொந்த பயன்பாட்டுக்கு உரியது என்பதை உணர்த்துகின்றது.

## விளி வேற்றுமை

தமிழ் இலக்கண நூல்கள் இதனை எட்டாம் வேற்றுமை எனக் கூறும்.

**"எட்ட னுருபே பெய்துபெய ரீற்றின்**
**றிரிபு குன்றன் மிகுத லியல்பயற்**
**றிரிபு மாம்பொருள் படர்க்கை யோரைத்**
**தன்முக மாகத் தானழைப் பதுவே"**

(நன்னூல் காண்டிகையுரை: சொல்லதிகாரம், நூற்பா –303)

அதாவது, "எட்டாம் வேற்றுமையின் உருபுகளாவன விளியடைந்த பெயரீற்றினுடைய திரிதலும் கெடுதலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகுதலும் இயல்பாதலும் ஈற்றயலெழுத்து திரிதலுமாகும். அவற்றின் பொருளாவது படர்க்கைப் பெயர்ப் பொருளை தன்முகமாக அழைப்பதாகும்." என்கின்றார் நன்னூலார். ஆக, பேசுவோன் படர்க்கை இடத்திற் குறியவரை முன்னிலைப்படுத்தி அழைத்துப் பேசுவதே விளி வேற்றுமை எனப்படும்.

கண்ணா (நீ) எங்கே போகிறாய்?

அப்பா (நீங்கள்) கொஞ்சம் நில்லுங்கள்

மேல் உள்ள வாக்கியங்களில் கண்ணன், அப்பா என்பன விளிக்கப்படும் பெயர்களாகும். அவை படர்க்கைப் பெயர்கள். இங்கு முன்னிலைப்படுத்தி விளிக்கப்படுகின்றன.

விளி வேற்றுமைக்கு தனியான உருபுகள் இல்லை. பெயர்சொற்களின் ஈறு அடையும் திரிபினால் இது உணர்த்தப்படுகிறது.

விளி வேற்றுமைக்கும் ஏனைய வேற்றுமைக்கும் ஒரு முக்கியமான வேறுபாடு உண்டு. ஏனைய வேற்றுமை ஏற்ற யெபர்கள் வாக்கியத்துள் எழுவாய் செயற்படுபொருள் போல் வாக்கிய உறுப்புகளாகத் தொழிற்படுகின்றன. ஆனால் விளி வேற்றுமைப்பெயர் வாக்கியத்திற்கு வெளியே நிற்கின்றது. அது வாக்கியத்தின் உறுப்பு அல்ல. எடுத்துக்காட்டாக: கண்ணா நீ எங்கே போகிறாய்? என்னும் தொடரில் 'நீ எங்கே போகிறாய்?' என்பதே வாக்கியம். நீ எழுவாய். எங்கே போகிறாய் என்பது பயனிலைத் தொடர். கண்ணா என்னும் விளி வாக்கியத்திற்கு வெளியே நிற்கின்றது.

வினைக்கும் விளிக்கப்படும் பெயருக்கு இடையே நேரடி உறவு இல்லை. இதனால் தற்கால மொழியியலாளர் சிலர் விளி வேற்றுமையை ஒரு வேற்றுமையாகக் கொள்வதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ, நான், அவன், முதலிய மூவிடப் பெயர்கள் விளிக்கப் படுவதில்லை. மூவிடப் பெயர்கள் அல்லாத படர்க்கைப் பெயர்களே விளிக்கப்படுகின்றன. விளிக்கப்படும் சில பெயர்ச்சொற்கள் ஏகார ஈறு பெறுகின்றன. சில சொற்களின் ஈறு திரிபடைகிறது. சில சொற்கள் எதுவித திரிபும் அடைவதில்லை.

ஏகார ஈறு பெறுதல்:

மகள் + ஏ - மகளே

தாயே + ஏ - தாயே

ஈற்று இகரம் ஈகாரமாதல்:

கமலி - கமலீ

தம்பி - தம்பீ

ஈற்று அயல் திரிதல்:

மக்கள் - மக்காள்

புலவர்கள் - புலவர்காள்

அறிஞர்கள் - அறிஞர்காள்

ஐ ஈற்று பெயர்கள் ஆய் விகுதி பெறுதல்:

அன்னை - அன்னாய்

நாரை - நாராய்

தங்கை - தங்காய்

(தற்காலத்தில் ஆய் விகுதி பயன்படுத்தப்படுவதில்லை)

## 7.5 தமிழில் இடைச்சொற்கள்

### இடைச்சொல்லின் பொது இலக்கணம்

'வேற்றுமை வினைசா ரியையொப் புருபுகள்
தத்தம் பொருள் விசைநிறை யசைநிலை
குறிப்பெனெண் பகுதியிற் றனித்திய லின்றிப்
பெயரினும் வினையினும் பின்முன் னோரிடத்
தொன்றும் பலவும்வந் தொன்றுவ திடைச்சொல்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(நன்னூல் காண்டிகையுரை)
தனித்து நின்று பொருள் தராமல் பெயர், வினை ஆகியவற்றோடு சேர்ந்து வந்து இலக்கணப் பொருள் தருகின்ற -கள், -மார் போன்ற பன்மை விகுதிகள், -ஐ, -ஆல், -கு, -இல் போன்ற வேற்றுமை உருபுகள், -வ், -கிறு, -ன், போன்ற கால இடைநிலைகள், -ஆள், -ஆர் போன்ற பால் விகுதிகள் முதலான சொல் உறுப்புகள் இடைச்சொற்கள் எனப்படுகின்றன.

பெயர் வினைச் சொற்களைப் போல் அல்லாமல் இடைச்சொற்கள் எண்ணிக்கையில் மிகக் குறைவாகவே உள்ளன. ஆயினும் அநேகமாக எல்லாச் சொற்களுடனும் சேர்ந்துவரும் வழக்குப் பெற்றுள்ளன. மொழிப்பயன்பாட்டில் தவிர்க்க முடியாத செல்வாக்கைப் பெற்றவை. நான், அவன், ஊர், போ ஆகிய சொற்களை எவ்வாறு மாறி மாறி வைத்தாலும் இடைச்சொற்கள் இல்லாமல் பொருளுள்ள வாக்கியமொன்றை ஆக்க முடியாது. ஆனால் வெவ்வேறு இடைச்சொற்களை வெவ்வேறு விதமாக வைத்து வெவ்வேறு பொருளுள்ள வாக்கியங்களை ஆக்கிக் கொள்ளலாம். எ-டு:
நான் அவனது ஊருக்குப் போனேன்.
நான் அவனோடு ஊருக்குப் போனேன்.
நானும் அவனும் ஊருக்குப் போனோம்.
நான்தான் அவனோடு ஊரிலிருந்து போனேன்.

வேற்றுமை உருபுகள், பன்மை விகுதிகள், திணை, பால் விகுதிகள், கால இடைநிலைகள், பெயரெச்ச-வினையெச்ச விகுதிகள், எதிர்மறை இடைநிலைகள், ஆக்கப் பெயர் விகுதிகள், தொழிற் பெயர் விகுதிகள், ஏவல்-வியங்கோள் வினை விகுதிகள், சாரியைகள், உவமை உருபுகள், இணைப்பிடைச் சொற்கள், தத்தம் பொருள் உணர்த்தும் இடைச்சொற்கள், சொல்லுருபுகள் என இடைச்சொற்கள் பல வகைப்படும். இவற்றுள், தத்தம் பொருள் உணர்த்தும் இடைச்சொற்கள் மிக முக்கியமானவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்காலத்தில் பெருவழக்குப்பெற்று வாக்கியத்தில் நுட்பமான பொருள்களை உணர்த்தி நிற்கும் தத்தம் பொருள் உணர்த்தும் இடைச்சொற்கள் பின்வருமாறு:
உம், ஓ, ஏ, தான், மட்டும், ஆவது, கூட, ஆ, ஆம் ஆகியன இடைச்சொற் பொருள்கள்:

**'தெரிநிலை தேற்ற மையமுற் றெண்சிறப்**
**பெதிர்மறை யெச்சம் வினாவிழை வொழியிசை**
**பிரிப்புக் கழிவாக்க மின்னன விடைப்பொருள்'**
(நன்னூல் காண்டிகையுரை)

## உம் இடைச்சொல்

**'எதிர்மறை சிறப்பைய மெச்சமுற் றளவை**
**தெரிநிலை யாக்கமொ டும்மை யெட்டே'**
(நன்னூல் காண்டிகையுரை)

இது வாக்கியத்தில் இணைப்பிடைச் சொல்லாகவும் பயன்படுகிறது. இது எதிர்மறை, சிறப்பு, ஐயம், எச்சம், முற்று, எண்ணல், தெரிநிலை, ஆக்கம் என எட்டுப்பொருளில் வரும் என நன்னூல் கூறுகிறது.
எதிர்மறை: எவ்வளவு உழைத்தும் நிம்மதி இல்லை.
சிறப்பு:
உயர்வுச் சிறப்பு: தலைவர்களும் போற்றும் தலைவன்
இழிவுச் சிறப்பு: மிருகத்திலும் கொடியவன்
ஐயம்: ஆசிரியர் வந்தாலும் வருவார்.
எச்சம்: அவனும் வந்தான்.
முற்று: அனைவரும் வந்தனர்.
எண்ணல்: இரண்டும் இரண்டும் நான்கு. அவனும் அவளும்,
தெரிநிலை: காயும் இல்லை பழமும் இல்லை.
ஆக்கம்: கதிரையையே மேசையாகவும் பயன்படுத்துகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்காலத்தில் மேலும் சில புதிய பொருள்களிலும் பயன்படுத்தப்படுகிறது.
உடனடித் தன்மை: முடிந்ததும் போகலாம். போனதும் சாப்பிடுவோம்
மாற்றுவழி: காயாகவும் சாப்பிடலாம். பணமாகவும் தரலாம்.
உறுதிப்பாடு-மறுப்பு: நீ கேட்டாலும் தர மாட்டேன். என்ன வந்தாலும் கலங்க மாட்டேன்

## ஓகார இடைச்சொல்

**'ஒழியிசை வினாச்சிறப் பெதிர்மறை தெரிநிலை**
**கழிவசை நிலைபிரிப் பெனவெட் டோவே'**
(நன்னூல் காண்டிகையுரை)
ஓகார இடைச்சொல் ஒழியிசை, வினா, உயர்வு சிறப்பு , இழிவுச் சிறப்பு, எதிர்மறை, தெரிநிலை, பிரிநிலை, அசை நிலை ஆகிய எட்டுப் பொருளில் வரும் என நன்னூல் குறிப்பிடுகிறது. அவற்றுள் தற்காலத் தமிழில் பிரிநிலைப் பொருளில் மட்டுமே ஓகாரம் வருகின்றது.
அதனைத்தவிர ஐயம், திடக் குறிப்பின்மை, மிகை, இது அல்லது அது, இதுவும் இல்லை அதுவும் இல்லை போன்ற பொருளிலும் தற்காலத்தில் வழங்குகின்றன.
ஐயம்: இன்று பணம் கிடைக்குமோ? இன்று அவர் வருவாரோ?
திடக் குறிப்பின்மை: யாரோ, எவரோ, எங்கேயோ, எப்போதோ
பிரிநிலை: அவர்கள் செய்துவிட்டார்கள், நாங்களோ பார்த்துக் கொண்டிருக்கிறோம்
மிகை: எத்தனையோ தடவை கேட்டுவிட்டேன், எவ்வளவோ சொல்லி விட்டோம்
இது அல்லது அது: பணமோ நகையோ தாருங்கள், வீடோ காணியோ வாங்குங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவும் இல்லை அதுவும் இல்லை: பணமோ நகையோ தரமாட்டோம்
ஏகார இடைச்சொல்:

**'பிரிநிலை வினாவெண் ணீற்றசை தேற்றம்**
**இசைநிறை யெனவா றேகா ரம்மே'**
(நன்னூல் காண்டிகையுரை)
ஏகார இடைச்சொல் தேற்றம், வினா, எண், பிரிநிலை, எதிர்மறை, இசைநிறை ஆகிய ஆறு பொருளில் வரும் என நன்னூல் கூறுகின்றது. ஆறுமுக நாவலர் ஈற்றசையையும் சேர்த்து ஏழு பொருளில் வரும் என்கிறார்.

தற்காலத் தமிழில் ஏ தேற்றப்பொருளில் அதாவது அழுத்தப் பொருளில் மட்டுமே வருகிறது. சிலநேரங்களில் ஒன்றின் சுய இயக்கத்தை வலியுறுத்தவும் பயன்படுகிறது.
அழுத்தம்: நான் நேற்றே வந்துவிட்டேன்
சுய இயக்கம்: கதவு தானாகவே திறந்தது. அவன் தானாகவே விழுந்தான்.

**தான் இடைச்சொல்**

தான் இடைச்சொல் எந்தச் சொல்லுடன் வருகிறதோ அந்தச் சொல்லை முதன்மைப்படுத்தி அழுத்தம் கொடுக்க வருகிறது.
அழுத்தம்: நான்தான் பணம் கொடுத்தேன், அவன்தான் எடுத்தான்

**மட்டும் இடைச்சொல்**

இது வரையறைப் பொருளில் வருகிறது. ஒரு வாக்கியத்தில் இது எந்தச் சொல்லுடன் வருகிறதோ அதைப் பிறவற்றிலிருந்து வரையறுத்து விடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் மட்டும் வருவேன்.
நூறு ரூபா மட்டும் இருக்கிறது.
பெண்கள் மட்டும் அனுமதிக்கப்படுவர்.

### ஆவது இடைச்சொல்

இது வாக்கியத்தில் பல பொருட்களில் பயன்படுகிறது.
குறைந்த பட்சம்: நீங்களாவது உதவுங்கள், நீராவது குடியுங்கள்
இது அல்லது அது: இன்றாவது நாளையாவது வா, பணமாவது நகையாவது தா,
திடக்குறிப்பின்மை: நாளைக்கு யாராவது வருவார்கள், ஏதாவது கிடைக்கும்,
நடவாமை: அவளாவது வாரதாவது, அவனாவது ஓடுறதாவது,
வரிசைப் பொருள்: முதலாவது, இரண்டாவது

### கூட இடைச்சொல்

இது எதிர்மறை வாக்கியத்தில் பெயர்ச்சொற்களுடன் இணைந்து வந்து குறைந்தபட்சம், முற்றுப்பொருள், எச்சந் தழுவிய எதிர்மறை ஆகிய பொருள்களைத் தருகிறது.
குறைந்தபட்சம்: மருந்துக்குக்கூட பணம் இல்லை, அவனுக்குக் கொஞ்சம்கூட அறிவில்லை. (ஆவது என்ற இடைச்சொல்லை ஒத்த கருத்தைத் தருகிறது)
முற்றுப் பொருள்: தோட்டத்தில் ஒரு பூக்கூட இல்லை, தெருவில் ஒரு நாய்கூட இல்லை (எதிர்மறை வாக்கியங்களில் பெயர்ச்சொற்களுடன் இணைந்து வந்து உம் இடைச்சொல் போல முற்றுப்பொருள் தருகிறது.)
எச்சந் தழுவிய எதிர்மறை: அவன்கூடப் பயந்துவிட்டான். நான்கூட விரும்பவில்லை. (இவ்வாக்கியங்களில் எதிர்பாராத விளைவு – எதிர்பார்ப்பிற்கு மாற்றமானது ஆகிய பொருளும் உணர்த்தப்படுகிறது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில சமயங்களில் உம், கூட ஆகிய இரு இடைச்சொற்களும் ஒத்த பயன்பாடுள்ளவை எனலாம். யானைக்கும் அடி சறுக்கும் - யானைக்குக்கூட அடி சறுக்கும்
நானும் பயந்துவிட்டேன் - நான்கூடப் பயந்துவிட்டேன்

## ஆ இடைச்சொல்

ஆ வினாப்பொருளில் வரும் இடைச்சொல்லாகும். இது வாக்கியத்தில் எந்தச் சொல்லுடன் இணைந்து வருகிறதோ அது வினவும் சொல்லாகிவிடும்.
நேற்று அவன் கருத்தரங்கிற்கு வந்தான்.
நேற்று அவன் கருத்தரங்கிற்கு வந்தானா?
நேற்று அவன் கருத்தரங்கிற்கா வந்தான்?
நேற்று அவனா கருத்தரங்கிற்கு வந்தான்?
நேற்றா அவன் கருத்தரங்கிற்கு வந்தான்?

## ஆம் இடைச்சொல்

-அல் ஈறுபெற்ற தொழிற்பெயரைப் பயனிலையாகக் கொண்ட வாக்கியத்தின் இறுதியில் வந்து அனுமதி, சாத்தியப்பாடு, பொருத்தப்பாடு முதலியவற்றை உணர்த்துகின்றது.
அனுமதி: நீங்கள் இனிப் போகலாம்
சாத்தியப்பாடு: நாளைக்குப் பாடம் நடக்கலாம்
பொருத்தப்பாடு: அவனுக்குப் பரிசு வழங்கலாம்
பிறர் மூலம் அறிந்த தகவல்களையும் வதந்திகளையும் கூறுவதற்கும் இவ்விடைச்சொல் பயன்படும்.
விரைவில் அவர் கைதாவாராம்.
அவர்தானாம் அடுத்த வேட்பாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை நூல்கள்:


- ஈழத்துப் பூராடனார், (1989), உலகளாவிய தமிழ், இலங்கை, கனடா: ஜீவா பதிப்பகம்.
- கருணாகரன், கி., மொழி வளர்ச்சி, சிதம்பரம்: மணிவாசகர் பதிப்பகம், 1983.
- கருணாகரன், கி., ஜெயா, வ., மொழியியல், சென்னை: குமரன் பதிப்பகம், ஜூன் 1997.
- குழந்தைசாமி, வா.செ., அறிவியல் தமிழ், சென்னை: பாரதிப் பதிப்பகம், 1985.
- சக்திவேல் சு., தமிழ் மொழிவரலாறு, சென்னை: மணிவாசகர் பதிப்பகம், 1984.
- சண்முகம், செ.வை., எழுத்துச் சீர்திருத்தம், அண்ணாமலை நகர்: அனைத்திந்திய தமிழ் மொழியியல் கழகம், 1978.
- சீனிவாசவர்மா, கோ., கிளைமொழியியல், அண்ணாமலை நகர்: அனைத்திந்தியத் தமிழ் மொழியியல் கழகம், 1986.
- சுசீந்திரராஜா, சு., தமிழ் மொழியியல் சிந்தனைகள், சென்னை: ரிஷபம் பதிப்பகம், 1999.
- சுப்பிரமணியம், பா.ரா., ஞானசுந்தரம், வ., தமிழ் நடைக் கையேடு, சென்னை, அடையாளம், 2001.
- தெ.பொ.மீ. களஞ்சியம் (1), தமிழ் மொழி வரலாறு, சென்னை: காவ்யா, 27 ஆகஸ்டு 2005.
- நீதிவாணன், ஜெ., நடையியல், சிதம்பரம்: மணிவாசகர் பதிப்பகம், 1983.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நுஃமான், எம்.ஏ., (ப), தொடர்பாடல் மொழி நவீனத்துவம், கொழும்பு: இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சு, ஜூன் *1993.*
- நுஃமான், எம்.ஏ., அடிப்படைத் தமிழ் இலக்கணம், கொழும்பு: பூபாலசிங்கம் புத்தகசாலை, *2000.*
- பரந்தாமனார், அ.கி., நல்லதமிழ் எழுத வேண்டுமா? சென்னை: பாரி நிலையம், *1992.*
- பரமசிவம், கு., இக்கால மொழியியல் அறிமுகம், இந்தியா: அடையாளம், *2011*
- வரதராசனார், மு., மொழிநூல், சென்னை: கழக வெளியீடு, ஜூன் *1998.*
- Caldwell. R., A Comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages (reprinted), Madrass Universiy: Madrass, 1956.
- Macaulay, Ronald, The Social Arts: Language and its Use, London: Oxford University Press, 1961.
- Yote, George, The Study of Language, Cambridge University Press: Cambridge, 1996.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்புகள் :



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்புகள் :



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்புகள் :



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**ஏ.எப்.எம் அஷ்ரஃப்,**

மொழித்துறை முதல்தர முதுநிலை விரிவுரையாளர். தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகத்தில் மொழி பெயர்ப் பியலில் கலாநிதிப் பட்டம் பெற்றவர். தென்கிழக்கு பல்கலைக் கழக கலைப்பீட பட்டப்பின் படிப்புத் துறையின் இணைப் பாளராக பணியாற்றியவர். பல கருத்தரங்குகளில் ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்துள்ளார். கவிஞர், விமர்சகர், ஆய்வாளர், சமூக அக்கறை மிக்கவர். கிழக்கு, ஊவா, வெல்லச, இலங்கை திறந்த பல்கலைக்கழகம் ஆகிய வற்றிலும் தேசிய மொழிக்கல்வி நிறுவகத்திலும் வளவாளராக பணியாற்றுகிறார்.

இந்நூல் தமிழினை ஒரு பாடமாகக் கற்கும் உயர்தர, பட்டப்படிப்பு மாணவர்களுக்கு வரப்பிரசாதமாய் அமையும் சிறந்த உசாத்துணை நூலாகும்.

- எம். அப்துல் றஸாக் -

**விலை : 400/=**

ISBN : 78-955-53402-1-2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org